தம்பிலுவில் கண்ணகி வழிபாடு

நா.நவநாயகமூர்த்தி

தம்பிலுவில் கண்ணகி வழிபாடு

நா.நவநாயகமூர்த்தி

வானதி வெளியீடு
வானதி பவனம்
பனங்காடு
அக்கரைப்பற்று
1999

வானதி வெளியீடு - 4

பதிப்புத் தரவுகள்

தலைப்பு: தம்பிலுவில் கண்ணகி வழிபாடு

வகை : சமயம்

ஆசிரியர்: நா.நவநாயகமூர்த்தி

மொழி : தமிழ்

வெளியீடு: வானதி வெளியீடு
வானதி பவனம், பனங்காடு,
அக்கரைப்பற்று

அச்சுப்பதிவு: மல்ட்டி ஒப்செற் அச்சகம்
அக்கரைப்பற்று

கணனிப்பதிவு: மா.லோகநாதன்
அக்கரைப்பற்று

வெளியிட்ட நாள்: 31.05.1999

பக்கங்கள்: 100

விலை: ரூபா 80 /-

உ

சிவமயம்

தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தின் இந்துசமயத்தை வலுப்படுத்தும் சமூகநல, ஆன்மீக, கல்வி மேம்பாட்டுத் திட்டத்திற்கமைய

ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா மகராஜ் அவர்களால்

அன்பளிப்புச் செய்யப்பட்ட நிதியின் உதவியுடன் இந்நூல் வெளியிடப் படுகின்றது.

இந்து சமயத்தை
வலுப்படுத்துவோம்

உ

சிவமயம்

சமர்ப்பணம்

04.08.1995ல் சிவபதம் அடைந்த

தம்பிஷவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுல

ஆதீனஸ்தாபகர் அமரர் இறைபணிச்செம்மல்

சுவாமிநாதர் தம்பையா அடிகளாருக்கு

இந்நூல் அன்புடன் சமர்ப்பணம்.

~ ஆசிரியர்.

பொருளடக்கம்

	ஆசியுரை	05
	வாழ்த்துப்பா	06
	அணிந்துரை	07
	சிறப்புரை	12
	என்னுரை	14
	நன்றிக்குரியவர்கள்	16
1.	தம்பிலுவில் கிராமம் ஓர் அறிமுகம்....	17
2	தம்பிலுவில் கண்ணகி வழிபாடு	25
3.	கொம்பு விளையாட்டு	30
4.	அம்மன் ஆருளால் மழைபொழியச்செய்த கண்ணப்பர்...	40
5.	கண்ணகிவழிபாட்டில் கலை இலக்கியம்	44
6.	வரலாற்றுப்பின்னணி	50
7.	தம்பிலுவில் கண்ணகிவழிபாடு தோற்றம்	77
8.	தம்பிலுவில் மழைக்காவியம்	92
9.	கண்ணகி அம்மன் பள்ளு	96
10.	கண்ணகை அம்மன் கும்மிப்பாடல்	98
11.	கண்ணகியம்மன் வாழ்த்து	100

சற்குரு குருதேவர்

சிவாய சுப்பிரமணிய சுவாமிகள்

ஹவாய் தீவு - அமெரிக்கா அவர்களின்

ஆசியுரை

शिवः सर्वगतं प्रेम
परं सत्यं परः शिवः

அன்பே சிவமயம்
சத்தியமே பரமசிவம்

வாழ்த்துப்பா

பல்வளஞ் செறிந்த பழந்தமிழ்ரும்
நல்வயல் சூழ்ந்த நவிலரு மூரும்
எல்லை இல்லாத இயலிசை நாடகம்
பல்கிப் பெருகும் பைந்தமி ழூரும்
வந்தார் வாழ வழிபல உதவும்
நந்தா விளக்கென நாற்றிசை புகலும்
தம்பிலு வில்லெனுந் தமிழ்ப்பதி தன்னில்
துங்கநற் குலத்தில் தோன்றிடு சூரியன்
நற்குண சீலன் நா . நவ நாயக
மூர்த்தி என்னும் முத்தமிழ்க் கலைஞன்
கீர்த்தி பெறவே செய்தனன் ஓர்நூல்
கற்பின் செல்வி கண்ணகி வழிபாடு
நற்தம் பிலுவிலில் நடந்திடு முறைமையும்
கொம்புவிளை யாட்டு கூறிடும் கதைகளும்
நம்பும்படி நாம் நயம்பட உரைத்தனன்
பண்டைய இலக்கிய பண்பாட்டுக் கலைகள்
கண்டவன் நூல்பல கற்றதில் வல்லோன்
அறிவு மிகுந்திடு ஆய்வுநூற் கட்டுரை
செறிவு சிறந்திடு தீந்தமிழ்க் கட்டுரை
எத்தனை யோபல ஆக்கி அளித்தனன்
அத்தனை யும்மெமக் கருமருந் தனவாம்
சொன்னயம் மிக்க தொன்மைசேர் நூல்கள்
இன்னும் பலஇவன் இயற்றிட வேண்டும்
இத்தகு நூலை எழுதிய வித்தகன்
அத்தன் அருளினால் அனுதினம் வாழி!
சிலம்புச் செல்வி சீர்புகழ் கண்ணகி
நலந்தரும் அருளால் நாளும் வாழி!

சிவஶ்ரீ க. லோகநாதக்குருக்கள்
(பிரதம குருக்கள், சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்)
பனங்காடு பாசுபதேசுவரர் ஆலயம்
பனங்காடு, அக்கரைப்பற்று.

அணிந்துரை

கண்ணகி வழிபாட்டின் உட்பொருள்

இந்து தத்துவஞானச் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட மேல்நாட்டவர்கள் அத்தத்துவத்தில் ஞானநிலைக்கும், பக்திநிலைக்கும் இடையே உள்ள முரண்பாடுகள் குறித்து குழப்பமடைந்துள்ளார்கள். அதன் காரணமாக பக்தி நிலையில் மேற்கொள்ளப்படும் அனுஷ்டானங்கள், சடங்குகள், சம்பிரதாயங் களைப் புரிந்து கொள்ளமுடியாமல் சங்கடப்படுகிறார்கள்.

இத்தகைய சடங்குகளுக்கும் சம்பிரதாயங்களுக்கும் மூலவேராக உள்ள புராண, இதிகாசங்கள் பற்றிய ஆழ்ந்த நோக்கு இல்லாமையே இதற்குக் காரணம் ஆகும். புராண இதிகாசங்களில் வரும் ஒவ்வொரு பாத்திரமும் மனிதப் பண்புகளின் உருவகமாகும். வள்ளி, தெய்வானை, முருகன், கணபதி, சிவன், பார்வதி போன்ற புராண பாத்திரங்கள் மனித வடிவில் உருவாக்கப்பட்ட தெய்வீகப் பண்புகள் ஆகும். அவ்வாறே, பஞ்சபாண்டவர், துரியோதனாதியர், ஸ்ரீராமன், இலக்குவன், சீதை, கண்ணகி, கோவலன், மாதவி பாத்திரங்கள் மனிதப்பண்புகளின் உருவகங்களாகும்.

இந்து தத்துவத்தின் மற்றொரு சிறப்பம்சம் இறைவனை சிவன், சக்தி என உருவகப்படுத்தி வழிபடுவதாகும். இது Matter and Energy என்ற விஞ்ஞான தத்துவத்தை எதிரொலிக்கும் சிந்தனையாகும்.

இதன் காரணமாகவே ''ஒரு நாமம் ஒருருவம் இல்லாதானுக்கு ஆயிரம் திருநாமங்கள் சூடி தெள்ளேணம் கொட்டுகிறார்கள் பக்தர்கள். கண்ணகி, திரௌபதி, சீதை முதலிய தெய்வங்கள் இதிகாச பாத்திரங்களாக இருந்தபோதும் அவ்வடிவங்களைச் சக்தியின் வடிவங்களாகவே உபாசனை செய்து வழிபடுவதால் அவ்வழிபாட்டின் பலாபலனை மக்கள் பெறுகிறார்கள். இத்தத்துவத்தின் உண்மை தெரியாது இத்தகைய வணக்கமுறைகளை கிராமிய வழிபாடு என்றும் சிறு தெய்வ வழிபாடு என்றும் குறிப்பிடுவது வடிகட்டின அறியாமை ஆகும்.

இவ்வாறு கூறுபவர்கள் நம்மவர்கள்தான்; மேல்நாட்டவர்கள் அல்ல என்பதும் இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும்.

மேல்நாட்டு அறிஞர்களின் அணுகுமுறை வேறு விதமாக இருக்கிறது.

அவர்கள் இத்தகைய அணுகுமுறைகளில் ஆழ்ந்த உட்பொருளைக் காணுகி றார்கள். இதற்குச் சான்றாக இரண்டொரு எடுத்துக்காட்டுகளை இங்கே நாம் சுட்டிக்காட்டலாம்:

(i) பத்தினி வழிபாடு தொடர்பாகப் பாரிய ஆய்வு செய்துள்ள கணநாத் ஒபயசேகரா (Gananath Obeyasekar) தனது ஆய்வுப் பெறுபேறுகளை சுமார் 600 பக்கங்கள் கொண்ட புத்தகமாக வெளியிட்டுள்ளார்.

(ii) முருகவழிபாடு தொடர்பாக ஆய்வுசெய்த அமெரிக்க அறிஞரான திரு.பற்றிக் ஹாரிகன் (Patick Harrigon) தனது ஆய்வுப்பெறுபேறுகளை "Kataragama : The Mystery Shrine" என்ற தலைப்பில் சுமார் 150 பக்கங்கள் கொண்ட நூலாக வெளியிட்டுள்ளார்.

இதே பற்றிக் ஹாரிகன் என்பவர்தான் கடந்த 27.12.98 - 31.12.98 5 நாட்கள் ஆசியவியல் நிறுவனத்தில் (Institute of Asian studies Chennai) ''ஸ்தந்த முருக" என்ற பொருளில் ஒரு சர்வதேச ஆய்வு மாநாட்டை நடாத்தி அதில் உலகின் பல்வேறு பல்கலைக்கழகப் பிரமுகர்களின் நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை இடம்பெறச் செய்தவர்.

அவ்வளவு ஏன் ''தம்பிலுவில் கண்ணகி வழிபாடு" பற்றி 1970 களில் சிட்னி (அவுஸ்திரேலியா) பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அறிஞர் H.Y.T.Hait என்பவர் தம்பிலுவில் கிராமத்தில் பலநாட்கள் தங்கியிருந்து ஆய்வு செய்து தனது ஆய்வுப் பெறுபேறுகளை ஒரு சிறுநூலாக வெளியிட்டுள்ளார். (Pathini Cult, By H.Y.T.Hait)

இவ்வாறு இன்னும் பல எடுத்துக்காட்டுகள் உள.

இத்தகைய ஆய்வுகள் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த நம்மவர் களின் கண்களைத் திறக்கவேண்டும். நம் காலடியில் நம் கண்முன்னே கிடக்கின்ற தத்துவப் புதையல்களை விடுத்து உலோகாயத சிந்தனைகளின் அடிப்படையில் வெளிப்படும் தத்துவங்களை தலைமேல் தூக்கிவைத்துக் கொண்டு, ''மரம் அறியாதவனுக்கு இலை பறித்துக் காட்டும்" பம்மாத்து வேலைகள் தவிர்க்கப்படவேண்டும்.

இச்சிந்தனையை உரத்த குரலில் கூறுகின்றது அன்பர் நா.நவநாயக மூர்த்தி அவர்கள் எழுதி வெளியிட்டுள்ள தம்பிலுவில் கண்ணகி வழிபாடு என்னும் இந்நூல். இந்நூலின் உட்பொருள் ஆய்வு நோக்கில் அமைந்திருப்ப துடன் அது பின்வரும் அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ளது. அவை (அ) தம்பிலுவில் கிராமம் ஓர் அறிமுகம் (ஆ) தம்பிலுவில் கண்ணகி வழிபாடு (இ) கொம்பு விளையாட்டு (ஈ) அம்மன் அருளால் மழைபொழியச் செய்த கண்ணப்பர். (உ) கண்ணகி வழிபாட்டில் கலை இலக்கியம் (ஊ) வரலாற்றுப்

பின்னணி (எ) தம்பிலுவில் கண்ணகி அம்மன் வழிபாடும் தோற்றமும் என அமைகிறது.

இவைதவிர கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடைய பின்வரும் பாடல்களும் இந்நூலில் இடம் பெறுகின்றன. அவை: (அ) மழைக்காவியம் (ஆ) கண்ணகை அம்மன் பள்ளு (இ) கண்ணகை அம்மன் கும்மிப்பாடல் (ஈ) கண்ணகி அம்மன் வாழ்த்து

இவ்வத்தியாயங்களின் ஊடாக வெளிப்படும் தகவல்கள் கண்ணகி வழிபாடு பற்றி மட்டுமல்லாமல் கிழக்கிலங்கை மக்கள் வாழ்வியல், மானிடவியல் ஆய்வுகளுக்காதாரமான மூலவேர்களைக் கொண்டிருப்பதையும் நாம் பார்க்கிறோம்.

உண்மையில் இலங்கையின் ஏனைய பாகங்களைவிட கிழக்கிலங்கையிலேயே கண்ணகி வழிபாடு மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்படுகிறது. இது ஆய்வாளர்களுக்குப் புரியாத ஒரு புதிராகும். இப்புதிரை விடுவிக்கும் வகையில் ஒரு பானைச்சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல ''தம்பிலுவில் கண்ணகி வழிபாடு" ஆய்வு அமைந்துள்ளது.

வேதாந்த தத்துவத்தின் அடிப்படையில் பக்தி மார்க்கத்தில் ஊறித் திளைத்த கிழக்கிலங்கை மக்கள் நதிமூலம், ரிஷிமூலம் பாராது இறைவனை எங்கும் காண்கின்றனர். இயற்கையில் அவன் சக்தி விகசிப்பதைத் தரிசிக்கின்றனர்.

''எங்கெங்கு காணினும் சக்தியடா, ஏழுகடல் அவள் வண்ணமடா" என்று பாடிய பாவேந்தரின் பாடலை அறியாமலே சக்தி வணக்கம் பல்வேறு நாம ரூபங்களில் கிழக்கிலங்கை மக்கள் வாழ்வில் இடம் பெற்றுள்ளது - இரண்டறக்கலந்துள்ளது.

''வரலாற்றுப் பின்னணி" என்ற அத்தியாயம் கி.மு.3ம் நூற்றாண்டிலிருந்து தென்னிலங்கையிலும் தென்கிழக்கிலங்கையிலும் நிலவிய தமிழர் ஆட்சிக்கு ஆதாரமான தகவல்களைத் தருகிறது கி.பி.8ம் நூற்றாண்டளவில் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசங்களை உள்ளடக்கிய ''உன்னரசுகிரி இராச்சியம்" பிரபல்யம் பெற்றிருந்தமை வரலாற்றுத் தகவல் இவ்வாறே கி.மு. 3ம் நூற்றாண்டிலிருந்து கி.பி.15ம் நூற்றாண்டு - வன்னியராட்சிக் காலம் வரை, இப்பிரதேசத்தின் வரலாறு தொடர்ச்சியாகக் கூறப்படுகிறது.

அதன் பின்னர் அந்நியர்களான போர்த்துக்கேய ஒல்லாந்த ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் இப்பிரதேசத்தின் நிலையும் தொட்டுக்காட்டப் படுகிறது. இக்குறிப்புகளில் தம்பிலுவில் - திருக்கோவில் பிரதேச வரலாற்று முக்கியத்துவத்தை நூலாசிரியர் நம்மனக்கண்முன் கொண்டுவருகிறார்.

இவ்வத்தியாயத்துக்கு மட்டும் 56 அடிக்குறிப்புக்கள் இடம்பெறுவது நூலாசிரியரின் ஆய்வுத் தேடலை நன்கு வெளிப்படுத்துகிறது.

''தம்பிலுவில் கிராமம்" என்னும் அத்தியாயத்தில் நாம் இதுவரை அறியாத பல புதிய தகவல்கள் இடம் பெறுகின்றன. கலை, இலக்கிய, நாடக வளர்ச்சியும் அதற்குக் காரணமாக இருந்த உவில்லியம்பிள்ளை, குஞ்சித்தம்பி ஆகியோரது சாதனைகளும் நமக்கு வியப்பைத் தருகின்றன. குறிப்பாக பண்டிதர் குஞ்சித்தம்பி அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலையில் கல்விபயின்று தமிழ்ப்புலமை பெற்றுப் பல இலக்கியங்களை உருவாக்கினார் என்ற செய்தி நாம் அறியாத ஒன்று.

இதன் பின்னர் கண்ணகி வழிபாட்டின் தோற்றம் வளர்ச்சி பற்றிக் கூறப்படுகின்றது.

''கடல்சூழ் இலங்கைக் கயபாகு வேந்தனால்" கி.பி.2ம் நூற்றாண்டளவில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட கண்ணகி வழிபாடு ''பத்தினித் தெய்வம்" என்ற பெயரில் சிங்களப் பிரதேசத்தில் இடம் பெற்றிருந்தாலும் இந்து சமய வணக்கமுறை என்பதால் அது சிங்களப் பிரதேசத்தை விடுத்துத் தமிழ்ப் பிரதேசமான கிழக்கிலங்கையில் கால்பதித்து வேர்விட்டுக் கிளை பரப்பி இன்று கிழக்கிலங்கை முழுவதிலும் சக்தி வணக்கமாக வியாபித்திருப்பதில் ஆச்சரியம் இல்லை.

பொதுவாக, கண்ணகி ஆலயங்கள் ஆண்டுக்கொருமுறை கதவு திறக்கப்பட்டு பத்ததி முறைப்படி பத்துநாட்கள் வரை பூசை செய்யப்பட்டு கதவு மூடப்படும் ஆலயங்களாக இருந்தபோதிலும் (கிழக்கிலங்கையில் காரைதீவு கண்ணகி ஆலயம் புறநடை) மக்கள் பெரும் அளவில் கூடி பயபக்தியுடன் வழிபாடு செய்யும் உற்சவமாக இது அமைவது குறிப்பிடத்தக்கது.

அமரர் மகாவித்துவான் பண்டிதர். வி.சீ.கந்தையா அவர்களின் ''மட்டக்களப்புத் தமிழகம்", ''கண்ணகி வழக்குரை" ஆகிய நூல்களில் கண்ணகி வழிபாடு தொடர்பான சகல விபரங்களும் இடம் பெறுகின்றன. ஆனாலும் ஒவ்வொரு ஊரிலும் நடைபெறும் வழிபாட்டு முறைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் என்பன வேறுபடுகின்றன. உதாரணமாக கன்னங்குடா, ஆரையம்பதி, செட்டிபாளையம், களுவாஞ்சிக்குடி, துறைநீலாவணை முதலிய இடங்களில் நடைபெறும் உற்சவங்களில் இவ்வேறுபாடுகள் இடம்பெறுவதைக் காணலாம்.

எனவே ஒவ்வொரு ஊரிலும் இடம்பெறும் கண்ணகிவழிபாடு பற்றிய நூல்கள் வெளிவருவது அவ்வப் பிரதேசத்தின் தனித்துவமான சிறப்பம்சங்களை வெளிக்கொணர உதவும். அந்தவகையில் ஏற்கனவே செட்டிபாளையம் கண்ணகி வழிபாடு பற்றிய நூல் ஒன்றை ஆலயபரிபாலன சபையின் சார்பில் திரு.ஆ.அரச

ரெத்தினம் (B.A.) தொகுத்து வெளியிட்டார்.

இப்போது ''தம்பிலுவில் கண்ணகி வழிபாடு" பற்றிய நூல் வரலாற்றுப் பின்னணியுடன் வெளிவருகிறது. இவ்வாறே ஏனைய கிழக்கிலங்கைக் கிராமங்களின் ''கண்ணகி வழிபாடு" பற்றிய நூல்கள் வெளிவருவது கிழக்கிலங்கையின் கண்ணகி வழிபாட்டு வரலாற்று இணைப்பை அறிவதற்கு உதவியாக அமையலாம்.

இறுதியாக இந்நூலாசிரியர் பற்றி சில குறிப்புக்களை கூறவேண்டும். அன்பர் நா.நவநாயகமூர்த்தி அவர்கள் தேடல்மிக்க ஆய்வாளர். ஏகலைவன் பாணியில் ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டு வருபவர்.

ஏற்கனவே இவரது ''தமிழரும் முருகவழிபாடும்", ''தொல்லியல் சிந்தனைகள் ", ''பண்டைத்தமிழர் பண்பாட்டுக்கோலங்கள்", ''பண்டைய ஈழத்தமிழர்" முதலிய நூல்கள் ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்புக்களாக வெளிவந்துள்ளன. இவற்றுள் பிந்திய இரு நூல்களும் ஆய்வறிஞர் கவனத்தை ஈர்த்துள்ளன. தற்போது வெளிவரும் ''தம்பிலுவில் கண்ணகி வழிபாடு" நூலும் அவ்வாறானதே.

விளம்பரத்தை விரும்பாது ஆத்மீகப்பாதையில் நடந்தவண்ணம் அவர் தனது எழுத்துப்பணியை முன்னெடுத்துச் செல்கிறார். மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் நூல்களை வெளியிட்டுவருகிறார்.

வரலாற்று உண்மைகள் மறைக்கப்பட்டும், திரிக்கப்பட்டும் வரும் இக்காலத்தில் அன்பர் நவநாயகமூர்த்தி அவர்கள் அவ்வுண்மைகள் ஆவண மாகப் பதிவாக வேண்டும் என்ற துடிப்புடன் செயற்படுபவர்.

''காலச்சேற்றில் புதைந்துபோன தமிழ்ப் பாரம்பரியங்களை, பண் பாட்டுக்கோலங்களை, தொன்மைச் சிறப்புகளை வெளிக்கொணர்ந்து அவற்றைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்துவதில் இவர் ஆத்மார்த்தமாக ஈடுபட்டுள்ளார்" (நூலாசிரியர் அறிமுகம் - பண்டைத் தமிழர் பண்பாட்டுக் கோலங்கள்)

எழுத்துப்பணியை ஒரு சமூகப்பணியாக - ஒரு தவமாக இவர் மேற்கொண்டுள்ளார். இறைவன் திருக்குறிப்பினாலேயே இவை நிகழ்கின்றன என்பதில் சந்தேகம் இல்லை.

இரா.நாகலிங்கம்
(அன்புமணி)

மட்டக்களப்பு
19.5.99

உ

சிவமயம்

சிறப்புரை

வரலாற்றுச் சிறப்பும், சமயத் தொன்மையும் கொண்டு விளங்கும் எமது ஈழத்திருநாட்டில் வரலாற்று உண்மைகள் தற்கால போர்ச் சூழல் காரணமாக மறைக்கப்பட்டும், அழிக்கப்பட்டும், திரிபுபடுத்தப்பட்டும் வருவதனை நாம் அனைவரும் அறியக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறான இக்காலகட்டத்தில் தெரிந்ததும் எமது அறிவாற்றலுக்கு உட்பட்டதுமான கால கட்டத்தில் நடைபெற்ற கண்ணகி வழிபாட்டின்தொன்மை பற்றி கூறும்வகையில் கிழக்கிலங்கை தந்த தந்த ஆய்வார்வலர் திரு.நா.நவநாயகமூர்த்தி அவர்கள் இந்நூலில் தம்பிலுவில் கண்ணகியம்மன் வரலாற்றை தெளிவுபட ஆதாரங் களுடன் எடுத்துக்கூறுகின்றார். இது அன்னையின் அருளேயன்றி வேறொண்டு மில்லை.

இந்துப்பண்பாடு பலதுறைநெறிகளைத் தன்னுள் அடக்கியுள்ளது. இதில் சிறப்பாக சமயம், தத்துவம், கலை ஆகிய அம்சங்கள் முக்கியத்துவம் மடைந்தாலும் சமய இலக்கியங்கள் மற்றும் சமூக நடைமுறைகளுக்குரிய ஒழுக்க வாழ்க்கை முறை ஆகிய இன்னோரன்ன அம்சங்களாலும் இந்துப் பண்பாடு சிறப்படைகின்றது. எனவே தொன்மையான காலத்தி லிருந்து சமயத்தின் வழியாகவும் கலைவழியாகவும் மொழிவழியாகவும் ஆத்மீக நலனுக்கும் சமூகநலனுக்கும் ஏற்ற நற்சிந்தனைகளையும் கருத்துக்களையும் வழங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்துப் பண்பாட்டுக்குரிய மரபினை அறவதற்கு பல்வேறு வரலாற்று மூலங்கள் துணைசெய்கின்றன.

சிறப்பாகத் தொல்லியச் சான்றுகள், இலக்கியங்கள் மற்றும் சமயப்பெரியார்களின் சிந்தனைகள் உள்ளடக்கிய ஆய்வு நூல்கள் குறிப் பிடத்தக்கவை. ஆகவே தொன்மையான சமய சிந்தனைகள் கருவென்றும் புதுமையான சிந்தனைகள் உருவென்றும் கொள்ளப்படுவதால் இந்து சமய நூல்கள் சிறப்படைகின்றன. தம்பிலுவில் கண்ணகி வழிபாடு எனும் வரலாற்று சமய நூல்கள் சமய இலக்கியங்களுடன் வரலாற்றுச் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு உண்மை களை எடுத்தியம்புவதாகும். பல்வேறு கோணங்களில் சமய உணர்வு இழை யோடி நிற்கின்ற சிறப்பினை இந்நூலில் உணரமுடிகின்றது.

தமிழ் சிங்கள மக்களின் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை இந்த கண்ணகியின் வழிபாடு ஊடாக அறியக்கூடியதாக இருக்கின்றது. வைகாசித் திங்களில் வெளிவரும் தம்பிலுவில் கண்ணகி வழிபாடு நூல் திரு.நா.நவநாயகமூர்த்தி எமக்களித்துள்ள சிந்தனை சுடராக - நல்லமுதமாக பலவகையிலும் அன்னை பராசக்தியின் புகழை விளக்கி அளித்துள்ளமை பாராட்டத்தக்கதும் போற்றத்தக்கதும் ஆகும்.

மறைந்த மகான் இறைபணிச் செம்மல் சுவாமிநாதர் தம்பையா அடிகளார் அன்னாரின் ஆத்மார்த்த ரீதியிலான உண்மையை அறிந்து இவரைத் தூண்டிவித்தார். இன்று அமெரிக்கா ஹவாய் சுவாமிகளது திவ்விய ஆசி இலத்திரன் தபால் மூலம் (ஈ-மெயில்) இவருக்கு கிடைத்தமை பொருத்தமானதே. திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தின் இந்து சமயத்தை வலுப்படுத்தும் ஐந்து அம்சத் திட்டத்திற்கமைய இந்து சமய கலாசார பண்பாட்டு விழுமியங்களை பேணிக்காக்கும் நோக்கில் இப்பணிக்கு அனுசரணை அளிக்க இயன்றமை எமக்கு பேறாகவே கருதுகின்றோம்.

ஆய்வார்வலர் பல நூல்களை வெளியிட்டு புகழ் சேர்ந்த நன்மகன் இன்னும் பல நூல்களை ஆக்கி சமயத்துறைக்கு பங்களிப்பு செய்ய எம்பெருமான் தில்லை நடராஜர் சகல சௌபாக்கியங்களையும் வழங்க வேண்டுமென குருகுலம் இறைஞ்சுகின்றது.

வேதம் வெல்லுக மெய்ம்மை விளங்குக
நீதி யோங்குக நானில மெங்கணும்
பூதி பொங்குக கண்மணி பூக்குக
நாத னைத்தெழுத் தூறுக நாவெலாம்

திரு.நா.நவநாயகமூர்த்தி அவர்கள் தம்முடைய புலமையினால் அன்னை கண்ணகியின் திருவடிகளில் பக்தியுடன் சூட்டியுள்ள இந்நூல் தமிழிலக்கிய காவியங்களில் புதிய தெய்வத் தமிழ்ப் பணியாக விளங்கிச் சிறப்பதாக என்றும் வாழ்த்துகின்றதோடு அன்னாரிடம் உள்ள வராலற்று ஆய்வுகளை நூல் வடிவில் வெளிக்கொணர்ர தனவான்களும் இலக்கிய பெருந்தகைகளும் முன்வர வேண்டுமென வேண்டி எல்லாம் வல்ல தில்லை நடராஜப் பெருமானின் திருவடிகளில் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம்நம: சிவாய

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

கண.இராசரெத்தினம் (கண்ணன்)
(முகாமைப்பணிப்பாளர்)
திருநாவுக்கரசு நாயனார் குருகுலம்,
தம்பிலுவில்.

1999.05.15.

என்னுரை

ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி ஐம்பத்தொன்பது, அறுபதுகளில் பள்ளிமாணவனாக நான் வாழ்ந்துவந்த காலம். அந்தப்பசுமையான நாட்கள் இன்றும் என் நெஞ்சில் நிறைந்துள்ளன.இயற்கையுடன் இணைந்த அமைதியான சூழல், ஆரவாரமில்லாத வாழ்வு, அன்பும் மனிதநேயமும் நிறைந்த மனிதர்கள் இத்துணை சிறப்புக்களையும் கொண்ட அழகிய கிராமம். இதுவே நான் பிறந்து வளர்ந்து கல்விபயின்று வந்த அக்காலத் தம்பிலுவில் கிராமமாகும். அக்காலத்தில் இவ்வூரில் நிலவியிருந்த பழந்தமிழர் வாழ்வியலை அனுபவித்துக் களித்திருந்த நாட்கள் மறக்கமுடியாதவை எனலாம்.

குறிப்பாக அக்காலத்தில் இவ்வூரில் நிலைத்திருந்த 'கண்ணகி வழிபாட்டினை' நினைக்கும் பொழுது என் உள்ளம் பூரிக்கின்றது. இதேவேளை தனித்துவம் மிக்கதாக விளங்கியிருந்த இவ்வழிபாட்டு மரபுகளில் பெரும்பா லானவை காலச்சுழலில் சிக்குண்டு இன்று மறைந்து போயுள்ளதை எண்ணும் பொழுது உள்ளம் வேதனை அடைகின்றது. வரலாற்றுச் சிறப்பினைக் கொண்டதும் செழுமைமிக்கதுமாய் விளங்கியிருந்த இக்கண்ணகி வழிபாட்டுப் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டே அக்காலத்தில் இவ்வூரில் கலைகள் (மரபு) செழித்திருந்தன. இலக்கியங்கள் உருவாகி வந்தன.

இவற்றையெல்லாம் இன்றைய இளந்தலைமுறையினரும் எதிர்காலச் சந்ததியினரும் அறிந்து கொள்ளவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டே அம்மன் அருளால் இந்நூல் உருவாகியுள்ளது. எனது எண்ணம் ஈடேறில் அதுவே எனக்குப் பெரும் பேறாக அமையும். இவை வெறும் வார்த்தைகள் அன்று. பிறந்த ஊரை எனது அன்னைக்கு நிகராகக் கருதிப்போற்றி வாழ்ந்து வரும் நான் எனது அன்னைக்கு அளிக்கும் காணிக்கையாக இந்நூலை அளிக்கின்றேன். இது எனது 'கடமைகளிலொன்று' என்பதே நிறைவான பொருளாகும்.

இக்கடமையை நிறைவேற்றவேண்டி முயற்சிகள் மேற்கொண்டிருந்த காலத்தில் என்னுடன் இணைந்து பல வழிகளிலும் உதவிகள் புரிந்துவந்த எனது அன்புக்குரிய நண்பரும் மைத்துனருமான திரு.ச.சாந்தகுமார் அவர்களது பணி மகத்தானது. இக்கிராமத்தின் மீது அவர் வைத்துள்ள பக்திக்கும் இங்கு குடிகொண்டுள்ள பத்தினித் தெய்வமான கண்ணகை அம்மன் மீது வைத் திருக்கும் நம்பிக்கைக்கும் அவர் எனக்கு அளித்துவந்த ஆதரவும் ஊக்கமும் சான்றுகளாகும். இவற்றை நான் இங்கு குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

மிகக்குறுகிய காலமாகிய நான்கு மாதகாலத்துக்குள் உருவாகி வெளிவரும் இந்நூலில் ஏழுகட்டுரைகள் அடங்கியுள்ளன. நிதி நிலையைக் கருத்தில் கொண்டு சுருக்கமாக எழுதப்பட்டுள்ள இந்நூலில் காலச்சேற்றில் புதைந்துபோன இவ்வூர் பற்றிய வரலாற்று உண்மைகள், ஈழத்தமிழர் பற்றிய வரலாற்றுச் செய்திகள் என்பனவும் இடம் பெற்றுள்ளன. காலத்தின் கட்டாயம் என்ற வகையில் இவை முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றின் வாயிலாக பண்டைய ஈழவரலாற்றில் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசம் (செலயகப்பிரிவு) பெற்றிருந்த முக்கியத்துவம் தெளிவாகின்றது.

நூல்கள் பல கற்றுணர்ந்த வகையிலும் பெரியோர்களிடம் கேட்டறிந்த வறறையும் ஆதாரங்களாகக் கொண்டு எனது அறிவுக்கும் ஆற்றலுக்கும் எட்டியவரையில் இந்நூலை உருவாக்கியுள்ளேன். இதற்கு அம்மன் அருளும் எனது இஷ்ட தெய்வமான திருக்கோவில் சித்திரவேலாயுதர் திருவருளும் உறுதுணையாகவிருந்து வந்தன. இதனை உளம் நெகிழ்ந்த நிலையில் குறிப்பிடுகின்றேன். இந்நூலில் தவறுகள் இடம்பெற்றிருக்கலாம். இதனை நமது ''பாரம்பரியப் பெருமைகள்" பதிவுசெய்யப்பட்டு பாதுகாக்கப்படவேண்டும் என்ற முனைப்புடன் பணிபுரிந்து வரும் ஒருவன் என்றவகையில் தமிழறிஞர்கள் தமிழார்வலர்கள் பொறுத்தருளவேண்டியது கடனாகும்.

நா.நவநாயகமூர்த்தி.

பனங்காடு,
அக்கரைப்பற்று
1999.05.24.

நன்றிக்குரியவர்கள்

1. திருக்குறிப்புக்கொப்பாக ஆசியுரைவழங்கி அருள்புரிந்த சற்குரு குருதேவர் சிவாய சுப்பிர மணிய சுவாமி (ஹவாய்தீவு ~ அமெரிக்கா) அவர்கள்

2. எனது எழுத்துப் பணிக்கு ஆதரவும் ஊக்கமும் அளித்துவரும் எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரான அணிந்துரை வழங்கிய இலக்கிய நெஞ்சர் திரு.இரா.நாகலிங்கம் (அன்புமணி) அவர்கள்

3. அன்புடனும்,ஆசியுடனும் வாழ்த்துப்பா வழங்கிய சிவஸ்ரீ.க.லோகநாதக்குருக்கள் (பிரதமகுரு, பனங்காடு பாகுபதேஸ்வரர் ஆலயம்) அவர்கள்

4. இந்நூலுக்கு சீரிய முறையில் சிறப்புரைவழங்கிய திருநாவுக்கரசுநாயனார் குருகுல ஆதீன முகாமைப் பணிப்பாளர் திரு.கண.இராசரெத்தினம் (கண்ணன்) அவர்கள்.

5. இந்நூலை அச்சிட்டு வெளியிடும் பணியை (நிதியுதவி) ஏற்றுக்கொண்ட தம்பிலுவில் திருநாவுக்கரசுநாயனார் குருகுல ஆதீனம்.

6. எனது நூல்கள் அனைத்துக்கும் அச்சுப்பிரதிகளை ஒப்புநோக்கி உதவி வருபவரும் இந்நூல் வெளிவரவேண்டுமென்ற முனைப்புடன் அளப்பரிய உதவிகள் புரிந்தவருமான எனது அன்பிற்கினிய நண்பர் திரு.மா.லோகநாகன் (ஆசிரிய ஆலோசகர்) அவர்கள்

7. தகவல்கள் பல தந்துதவியவர்களான பெரியவர்கள், திரு.அ.கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்) திரு.ச.சங்கரப்பிள்ளை (முன்னைநாள் கிராமாட்சி மன்றத்தலைவர்) திரு.பு.குகதாஸ் (ஓய்புபெற்ற கூ.சங்கப் பணியாளர்) ஆகியோர்.

8. தம்பிலுவில் கண்ணகை அம்மன் பள்ளு , கண்ணகை அம்மன் கும்மி ஆகிய இலக்கிய வடிவங்களை பிரதிபண்ணித் தந்துதவிய பெரியவர் திரு.மா சங்கமப்போடி அவர்கள்

9. தம்பிலுவில் ஸ்ரீ பாலகணேசாந்தசபா நாடகமன்றம் பற்றிய தகவல்கள் தந்துதவிய பெரியோர்கள் திரு.வி.செல்லையா (முன்னாள்கி.சபை உறுப்பினர்) திரு.பெஇராசையா(கலைஞர்) ஆகியோர்

10. அட்டையில் இடம்பெற்ற புகைப்படம் தந்துதவிய திரு.அ.புண்ணியமூர்த்தி அவர்கள்

11. உடனிருந்து எனது எழுத்துப் பணிக்கு உதவிவரும் திரு.ச.சாந்தகுமார் அவர்கள்

12. இந்நூலை நான் எழுதிக்கொண்டிருந்த காலத்தில் வேண்டிய ஆலோசனைகள் கூறி ஊக்கமும் ஆதரவும் அளித்துவந்த எனது அன்புக்குரிய அனைவருக்கும்

13. இந்நூலை அழகிய முறையில் அச்சிட்டுத்தந்து அக்கரைப்பற்று மலட்டி ஓப்செற் அச்சகத்தார்.

14. எனது எழுத்துப்பணிக்கு ஆதரவுநல்கிவரும் எனது மாபெரும் அன்புக்குரிய வாசகர்களாகிய நீங்கள்.

நன்றி

21.05.1999

நா.நவநாயகமூர்த்தி

தம்பிலுவில்

கிழக்கிலங்கையின் தென்பகுதியில் திருக்கோவில் என்னும் பிரதேசம் (செயலகப்பிரிவு) அமைந்துள்ளது. தமிழர்கள் தனிப்பெரும்பான்மை இனமாக வாழ்ந்து வரும் இப்பிரதேசம் ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எழுபத்தி ஏழாம் ஆண்டுவரையும் அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் செயலகப் பிரிவுடன் இணைந்திருந்தது. இன்று இப்பிரதேசம், தனியானதொரு செயலகப் பிரிவாக இயங்கி வருவதன் காரணமாக, இப்பிரதேசத்தில் வாழ்ந்து வரும் மக்கள் சமூக, பொருளாதார வளர்ச்சியில் மட்டுமன்றிப் பல்வேறு துறைகளிலும் முன்னேறி வருகின்றனர்.

இயற்கை வளங்கள் பல நிரம்பப்பெற்ற இப்பிரதேசமானது, சுமார் எழுபத்தெட்டரைச் சதுரமைல் பரப்பளவைக் கொண்டதாகும். இதன் எல்லை களாகக் கிழக்கே வங்காள விரிகுடாவும், மேற்கே தமண, உகணப் பிரதேச செயலாளர் பிரிவுகளும். தெற்கே பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவும் விளங்குகின்றன. இப்பிரதேசத்தில் சுமார் இருபத்தேழாயிரம் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இப்பிரதேசத்தில் பழமை வாய்ந்த கிராமங்களாகத் தம்பிலுவில், திருக்கோவில் ஆகிய கிராமங்கள் விளங்குகின்றன.

இக்கிராமங்களில் மிகவும் பழமைவாய்ந்ததாக விளங்குவது தம்பிலு விவில் ஆகும். இப்பழம்பதியானது வடக்கே தம்பட்டை, பெரியகளப்பையும் மேற்கே சாகாமம், மொட்டையாகல் ஆகிய இடங்களையும் உள்ளடக்கியுள்ளது. அத்துடன் தெற்கே திருக்கோவில் கிராமத்தையும் அதன் மேற்கிலுள்ள இடங்களையும் கிழக்கே வங்காள விரிகுடாவையும் இக்கிராமம் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்கிராமத்தின் உட்பிரதேசத்தில் அமைந்துள்ள மணற்காடு, முனையக்காடு (முனையூர்), கனகர்புரம் ஆகிய இடங்கள் வளர்ச்சியுற்று வரும் மக்கள் குடியிருப்புக்களைக் கொண்ட இடங்களாக விளங்கின்றன.

மக்கள் வாழ்வும் தொழிலும்

தம்பிலுவில் பகுதியில் சுமார் பதினாலாயிரம் தமிழ் மக்கள் இன்று வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் தொண்ணூற்றி ஐந்து சதவீதமானோர் இந்துக்களாவர். ஏனையோர் கத்தோலிக்கரும் கிறிஸ்தவர்களுமாவர். தன்னம்பிக் கையும், விடாமுயற்சியும் கொண்ட இவ்வூர் மக்கள் விருந்தோம்பலிலும் சிறந்து விளங்குகின்றனர். இவர்களிடையே சமத்துவம், சகோதரத்துவம் என்பன நன்னிலையில் இருந்து வருவதன் பயனாக அன்பு, ஒற்றுமை என்பன நிலவி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி அறுபத்தோராம் ஆண்டளவில் 'விநாயகபுரம்' என்ற குடியேற்றக்கிராமம் ஆரம்பமான காலத்தில் அங்கு பெருமளவில் சென்று குடியேறியவர்கள் தம்பிலுவில் மக்களாவர். அக்காலந் தொடங்கி இன்றுவரையும் அக்கிராமத்தின் சமூக, சமய, கலாசார வளர்ச்சியில் இவ்வூர்மக்கள் பெரும்பங்கினை வகித்து வருகின்றனர். பிற்காலத்தில் திருக் கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் (செயலகப்பிரிவு) குடியேற்றக் கிராமங்களாக மலர்ந்த தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடியாறு, சாகாமம், தாண்டியடி, ஆகிய கிராமங்களில் முதன்முதலாகக் குடியேறியதன் மூலம் இக்கிராமங்களைத் தோற்றுவித்த சிற்பிகளும் தம்பிலுவில் மக்களேயாவர்.

இவ்வூர் மக்களின் பிரதான தொழிலாகவிருந்து வருவது விவசாய மாகும். நெற்பயிர்ச்செய்கை, சேனைப்பயிர்ச்செய்கை என்பன இவற்றில் அடங்கும். ஊரக்கைவெளி, பள்ளவெளி, கல்லடிப்பரவை, தாலிபோட்டாறு தென்கண்டம், வடகண்டம், ஆற்றுக்கண்டம், கோரைக்களப்பு, குஞ்சிப் பணிக்கன் தளாவை, பெரிய தளாவை, சேனைக் காடு போன்ற வயல் நிலங்கள் இவ்வூர் மக்களால் உருவாக்கப்பட்டவைகளாகும். மற்றும் சேனைப்பயிர்ச் செய்கை, கால்நடைவளர்த்தல், மீன்பிடித்தல் ஆகிய தொழில்களிலும் இவ்வூர் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், கல்வியில் முன்னேற்றமடைந்துள்ள இவ்வூரைச் சேர்ந்தவர் களில் ஏராளமானோர் அரசதுறைகளிலும் வங்கிகள், கூட்டுத்தாபனங்கள் என்பவற்றிலும் தனியார்துறைகளிலும் வேலைவாய்ப்புக்களைப் பெற்று தொழில் புரிந்து வருகின்றனர். மற்றும் ஏராளமானோர் வர்த்தகர்களாகவும் தொழில் புரிந்து பொருளீட்டி வருவதையும் காணமுடிகின்றது. இவற்றின் பயனாக

தம்பிலுவில் கிராமமானது பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்து வருகின்ற தென்பதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் வளர்ச்சியுற்று வரும் சிறியதொரு பட்டினமாகவே இக்கிராமம் மாறிவருகின்றதெனலாம்.

கல்வி

கல்வி பற்றி நோக்குமிடத்து திண்ணைப் பள்ளிக்கூடக் காலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலத்திலும் இவ்வூர் மக்களிடையே கல்விநிலை செழிப்புற் றிருந்ததென்றே கூறலாம். காலத்துக்குக் காலம் இவ்வூரில் தோன்றி வந்த புலவர்களும் அவர்களால் உருவாக்கப்பட்ட கிராமிய இலக்கிய வடிவங்களும் இதற்குச் சான்றுகளாகும். இதனைத் தொடர்ந்து 1950ம் ஆண்டளவில் இவ்வூர் மக்களிடையே தோன்றிய கல்வி ஆர்வமானது (விழிப்புணர்வு) வளர்ச்சிடைந்து இன்று நல்ல பயனைத் தோற்றுவித்துள்ளது.

இதன் பயனாக உயர்கல்வி பயின்றவர்கள், பொறியியலாளர், பிரதேச சுகாதாரப் பணிப்பாளர், வைத்திய சத்திரசிகிச்சை நிபுணர், மாவட்ட வைத்திய அதிகாரி, மாவட்ட வங்கி முகாமையாளர், நிர்வாகச் செயலாளர், (D.S) தொழில் நுட்ப உத்தியோகத்தர் போன்ற உயர்பதவிகளைப் பெற்றுப் பணிபுரிந்து வருகின்றனர். சிலர் சட்டத்தரணிகளாகவும் உள்ளனர்.

சமயம்

நெடுங்காலந்தொட்டு இவ்வூர் மக்களிடையே இந்து சமயமே நிலைத் துள்ளது. குறிப்பாகச் சைவ நெறிகளைப் பின்பற்றி வரும் இவர்கள் தமிழ்ச் சைவர்களாகவே வாழ்ந்து வருகின்றரெனலாம். இவ்வூரில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், களுதாவளை சிவலிங்கப் பிள்ளையார் ஆலயம் என்பன பழைமையான சைவாலயங்களாகும். மேலும் திருக்கோவில் சித்திர வேலாயுதர் ஆலயம், சங்கமன்கண்டிப் பிள்ளையார் ஆலயம், சாகாமம் குளத் துப்பிள்ளையார் ஆலயம், மங்கை மாரியம்மன் ஆலயம், தம்பட்டை ஆறுமுக சுவாமி கோயில் என்பன இவ்வூர் மக்களின் வழிபாட்டுத்தலங்களாக இருந்து வருகின்றன.

தழையடிசிவன் ஆலயம், முனைக்காடு காளிகோயில், பெரிய தம்பிரான் ஆலயம் போன்றவை அண்மைக்காலத்தில் இவ்வூரில் தோன்றிய சைவாலயங்களாகும். மேலும் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தில்

அமைந்துள்ள தில்லைநடராஜப் பெருமான் வழிபாட்டுத்தலம், தம்பிலுவில் ஸ்ரீ காயத்ரி பீடம், யோகாச்சிரமம், பகவான் ஸ்ரீ சாயிபாபா சேவா சமித்தியினால் தோற்றுவிக்கப்பட்ட பிரார்த்தனை மண்டபங்கள் என்பனவும் இவ்வூரில் ஆன்மீக ஒளிபரப்பி வரும் வழிபாட்டு இடங்களாக விளங்குவருகின்றன.

தம்பிலுவில் பகுதியில் ஆயிரத்தித்தொழாயிரத்தி நாற்பதாம் ஆண்டளவிலேயே கிறிஸ்தவ சமயம் செல்வாக்குப் பெற்ற தெனலாம். இக்காலத்தில் கல்வி வேலைவாய்ப்புகள் என்பனவற்றைக் கருத்திற் கொண்ட சிலர் கிறிஸ்தவர்களாக மதம் மாறினர். ஆயினும் இவ்வூரில் கிறிஸ்தவ ஆலயங்கள் இன்றுவரை நிர்மாணிக்கப்படவில்லை. கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியோர் சிறுதொகையினராக விருந்ததே இதற்கான காரணமாகும். இவ்வூரில் வாழ்ந்து வரும் கிறிஸ்தவர்கள் அயல் கிராமமான திருக்கோவிலில் அமைந்துள்ள கிறிஸ்தவ ஆலயங்களில் தங்கள் வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கலைகள்:

கிழக்கிலங்கையின் பாரம்பரியக் கலைகளில் முக்கியமானவை களாகக் கருதப்படும் நாட்டுக்கூத்து, வசந்தன்ஆடல், கும்மி போன்ற கிராமியக் கலைகள் இவ்வூரிலும் நிலவி வந்துள்ளன. இவற்றில் நாட்டுக்கூத்து இவ்வூர் மக்களிடையே பிரபல்யம் பெற்றிருந்த கிராமியக் கலை வடிவமாகும். கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் இவ்வூரில் நாட்டுக்கூத்து உன்னத நிலையை எய்தியிருந்த தெனலாம். இதனை இவ்வூரில் வாழ்ந்து வரும் முதியவர்கள் மூலமாக அறியமுடிகின்றது.

இவ்வூரில் வடமோடி, தென்மோடி ஆகிய இரு மோடிக் கூத்துக்களும் ஆடப்பட்டு வந்துள்ளன. 1910ம் ஆண்டு தொடக்கம் 1983ம் ஆண்டு வரையுள்ள காலப் பகுதியில் இவ்வூரில் ஏராளமான கூத்துக்கள் வட்டக்களரிகளில் ஆடப் பட்டுள்ளன. இக்கூத்துக்களில் பெரும் பாலானவை இவ்வூரைச் சேர்ந்த அண்ணாவிமார்களால் இயற்றப்பட்டுப் பயிற்றுவிக்கப்பட்டவைகளாகும். இவர் களில் சிலர் குறிப்பிடத்தக்கவர்களாவர். திரு உவில்லியம்பிள்ளை என்ற பெரியார் 1912ம் ஆண்டளவில் கண்டிராசன் என்ற கூத்தை இயற்றிப் பயிற்று வித்து அரங்கேற்றினார்.

இதனைத் தொடர்ந்து பவளேந்திரன், புவனேந்திரன், நச்சுப்பொய்கை என்பன இப்பெரியார் இயற்றிப் பயிற்றுவித்து அரங்கேற்றியவைகளாகும். மேலும் இக்கால கட்டத்தில் (1910 - 1983) பலர் ஏராளமான கூத்துக்களைப் பயிற்றுவித்து அரங்கேற்றி வந்துள்ளதையும் அறியமுடிகின்றது. இவர்களில் திரு.க.வை. சரவணமுத்து, திரு.வேலுப்பிள்ளை, திரு.மா.சின்னத்தம்பி, திரு.பெ.கந்தையா, திரு.வே.கந்தசாமி போன்ற அண்ணாவிமார் குறிப்பிடத்தக்கவர்களாவர். 1983ம் ஆண்டளவில் நாட்டில் தோன்றிய வன்செயல்களும் அதனைத் தொடர்ந்து நிலவி வரும் அமைதியற்ற (தன்மையும்) நிலையும் இக்கலையை முற்றாகவே ப. தித்துள்ளது.

அக்காலத்தில் இவ்வூரில் செழிப்புடன் விளங்கியிருந்த கலை வடிவங்களில் வசந்தன் ஆடல் என்ற வசந்தன் கூத்தும் ஒன்றாகும். மட்டக்களப்புத் தமிழகத்தில் வசந்தன் கூத்துக்குப் புகழ்பெற்ற கிராமங்களில் காரைதீவுக்கு அடுத்ததாக விளங்கியிருந்தது இக்கிராமமேயாகும். கண்ணகி வழிபாடு, உழவுத் தொழில் என்பவற்றுடன் தொடர்புடைய வசந்தன் கூத்துப் பாடல்கள் இங்கு காணக்கிடைக்கின்றன. இவற்றை எழுதிய இவ்வூர் புலவர்கள் பற்றி அறிய முடியாதுள்ளது.

இக்கலைகள் தவிர இசைநாடகம் என்ற கலைவடிவமும் இவ்வூரில் நிலவியிருந்தது. குறிப்பாக இக்கலைவடிவம் 1930ம் ஆண்டு தொடக்கம் 1958ம் ஆண்டு வரையுள்ள கால கட்டத்தில் இவ்வூரில் செழித்திருந்தது எனலாம். இக்கலைவடிவத்தை தென்னிந்திய நாடகக் கம்பனிகளே இங்கு அறிமுகப்படுத்தின. இக்கம்பனிகள் 1926ம் ஆண்டு தொடக்கம்1930ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் இசைநாடகங்கள் பலவற்றை இவ்வூரில் மேடையேற்றி வந்துள்ளன. இதனைத் தொடர்ந்து இசைநாடகங்கள் மீது இவ்வூர் மக்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் காரணமாக இக்கிராமத்தைச் சேர்ந்தவர்களும் இசைநாடகங்களை இயற்றிப் பயிற்றுவித்து மேடையேற்றிவந்தனர்.

இவர்களில் திரு.உவில்லியம் பிள்ளை, பண்டிதர்.திரு.த.குஞ்சித்தம்பி என்போர் முன்னோடிகளாவர். சுந்தரவிலாசம், மதுரைவீரன் என்பன அக்காலத்தில் (1930 -1938) திரு. உவில்லியம் பிள்ளை அவர்களால் எழுதித் தயாரித்து மேடையேற்றிய இசை நாடகங்களாகும். இதேபோன்று அக்காலத்தில் சிறுத்தொண்டர், அலாவுதீன் என்பன இசைப்புலமையில் வல்லவரான

தம்பிலுவில் பண்டிதர் குஞ்சித்தம்பி அவர்கள் இயற்றிப் பயிற்றுவித்து மேடை யேற்றிய இசைநாடகங்களாகும். 1058ம் ஆண்டு வரையும் இவ்வூரில் ஏராளமான இசைநாடங்கள் மேடையேறிவந்துள்ளன.

இவ்வாறு மேடையேறி வந்த நாடகங்களுள் ஏராளமான இசை நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றி வந்த பெருமை இவ்வூரில் அக்காலத்தில் புகழ்பெற்று விளங்கியிருந்த ஸ்ரீபாலகணேசானந்தர் என்ற நாடக மன்றத்தையே சாரும். இம்மன்றத்தினர் 1938ம் ஆண்டு தொடக்கம் 1958ம் ஆண்டுவரையுள்ள காலப்பகுதியில் மேடையேற்றிய இசை நாடகங்களில் பாமாவிஜயம்(1938),மனோகரன் (1939), பாக்கியலெட்சுமி (1940), பூலோகரம்பை, பவளக்ககொடி, சாவித்திரி, சதாரம் என்பன புகழ்பெற்றவைகளாகும். இவற்றின் கதை, வசனம், பாடல்கள் என்பனவற்றை திருக்கோவில் கிராமத்தைச் சேர்ந்த சங்கீதபூஷணம் திரு.சி.கணபதிப்பிள்ளை அவர்கள் ஏழுதியிருந்ததுடன் இயக்குனராகவும் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

1958ம் ஆண்டுக்குப் பின்னர் இவ்வூரில் வசனத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்ட மேடைநாடகங்கள் புகழ்பெற்றிருந்தன. மூன்று அல்லது நாலு மணித்தியாலங்கள் இடம் பெற்று வந்த இவ்வாறான பல நாடகங்கள் 1968ம்ஆண்டு வரையும் இவ்வூரில் மேடையேற்றப்பட்டு வந்துள்ளன. நீதிபதியின் மகள் (1962) ராஜதிலகமணி (1963) மானம் காத்த மங்கை போன்ற நாடகங்கள் இன்றும் நினைவில் உள்ளவைகளாகும். 1967, 68 களில் இவ்வூரில் தோன்றிய முரசொலி கலாமன்றம், மதிஒளி கலாமன்றம் என்பன இவ்வூரில் பல்கலை வளர்ச்சிக்குத் துணை புரிந்து வந்துள்ளன. 1983ம் ஆண்டு வரை இந்நிலை நீடித்திருந்ததெனலாம்.

அக்காலத்தில் கும்மி என்ற கிராமியக் கலையும் இவ்வூரில் நிலைத் திருந்தது. ஆறு அல்லது பன்னிரண்டு வரையிலான பெண்கள் ஒன்று சேர்ந்து ஆடிவந்த கும்மி ஆட்டம் பெரும்பாலும் கோயில்களிலும் பாடசாலைகளிலும் நடைபெற்று வந்த விழாக்களில் இடம் பெற்று வந்துள்ளன. இத்துடன் காவடி ஆட்டம் என்ற கிராமியக் கலைவடிவமும் இவ்வூரில் நிலவிவந்துள்ளது. ஆலய உற்சவங்களின் போது தங்கள் நேர்த்திக் கடன்களை ஈடுசெய்யும் முகமாகக் காவடி ஆட்டம் ஆடப்பட்டு வந்ததெனலாம். மேலும் இவ்வூரில் பாரம்பரிய இசைக் கலைவடிவங்களில் புகழ் பெற்றவைகளான எண்ணெய்ச்சிந்து, வைகுந்த

அம்மானை, ஊஞ்சற்பாடல்கள்,கந்தபுராணம் - படிப்பும்பயன்கூறலும்) என்பனவும் பாடப்பட்டு வந்துள்ளன. இவையாவும் தம்பிலுவிலில் வாழ்ந்து வந்த பழந்தமிழ் மக்களது ஆனந்த மயமான அமைதி நிறைந்த வாழ்வுக்கு வழிவகுத்தவைகள் என்பது உண்மையாகும்.

பண்பாடு இலக்கியம்

'வந்தாரை வாழவைக்கும் சிங்காரத் தம்பிலுவில்' என்பது இப்பகுதியில் வழங்கி வரும் முதுமொழியாகும். இதற்கொப்ப, இவ்வூர் இன்றும் மிளிர்ந்து வருகின்றது. பழங்காலம் தொட்டு தமிழ்ப்பண்பாட்டின் உறைவிடமாக விளங்கி வரும் தம்பிலுவில் விருந்தோம்பலில் சிறந்த இடமாகவும் இருந்து வருகின்றது. கைக்குத்து அரிசிச்சோறு, பால், தயிர், நெய், சோளம், குரக்கன், மரவள்ளி, மீன், இறைச்சி என்பன இங்கு வாழ்ந்து வந்த பழந்தமிழரது உணவு வகைகளாக இருந்து வந்தன. இன்றும் இவற்றிற்கு குறைவில்லை யெனலாம். இவ்வூர் மக்களிடையே அன்பு, சமத்துவம், சதோதரத்துவம், ஒற்றுமை, இரக்கம், கொடை என்பனவும் நிலைத்துள்ளன.

இத்தனை சிறப்புக்களைக் கொண்ட இவ்வூரானது இலக்கியப் பாரம்பரியத்தைக் கொண்டதொரு பழமையான கிராமமுமாகும். பழங்காலத்தில் இங்கு வாழ்ந்து வந்த புலவர்கள் இவ்வூரின் இலக்கியத்துக்கு அருந்தொண்டுகள் புரிந்து வந்துள்ளனர். இவ்வாறு இலக்கியத்துக்குச் செழுமை சேர்த்து வந்த புலவர்கள் பற்றித் தெளிவான குறிப்புக்கள் இல்லை யெனலாம். ஆயினும் இவர்களால் உருவாக்கப்பட்ட இலங்கியங்களில் பலவற்றை இன்று நாம் காணமுடிகின்றது. இவ்வாறு இன்று நாம் காணக் கிடைக்கும் இலக்கிய வடிவங்களுள் மிகப் பழமையானதாகவுள்ளது. தம்பிலுவில் கண்ணகை அம்மன் மழைக்காவியமாகும். இது ஒல்லாந்தர் காலத்தில் (கி.பி.7ம்நூற்றாண்டு) இவ்வூரைச்சேர்ந்தவரான திரு.கண்ணப்பன் கப்புகனாரால் உருவாக்கப்பட்டதாகும்.

இதனைத் தொடர்ந்து கி.பி.ஆயிரத்தித் தொள்ளாயிரம் ஆண்டு வரையுள்ள காலத்தில் காலத்துக்குக் காலம் இவ்வூரில் புலவர்கள் பலர் தோன்றி இலக்கியத்துக்குச் செழுமை சேர்த்து வந்துள்ளனர். இவர்கள் உருவாக்கிய இலங்கியங்களில் சில மறைந்து போக எஞ்சியவை இன்று ஏட்டுச்சுவடிகளாகக் காணக் கிடைக்கின்றன.இவற்றில் பெரும்பாலானவை கண்ணகி வழிபாடு, உழவுத்தொழில், வந்தன் கூத்து என்பனவற்றை

அடிப்படையாகக் கொண்டு உருவானவைகளாகும். மேலும் இக்கால கட்டத்தில் (1650-1900) திருக்கோவில் சித்திரவேலாயுதர் மீதும். கண்டி மன்னர்களைப் புகழ்ந்தும் இவ்வூர்ப் புலவர்கள் இலக்கியங்கள் படைத்துள்ளனரென்பதையும் அறிய முடிகின்றது.

கி.பி. பதினேளாம் நூற்றாண்டில் கண்டியிலிருந்து ஆட்சி புரிந்து வந்த ஸ்ரீ வீரநரேந்திர சிங்கன் (1706 - 1739) என்பவனைப் புகழ்ந்து இவ்வூர்ப் புலவரொருவர் இயற்றிய இலக்கியம் புகழ்பெற்றதாகும். இது 'கண்டிராசன் பள்ளு' என்றும் 'நரேந்திரசிங்கன் பள்ளு' என்றும் இன்று பெயர் வழங்குகின்றது. இதே காலத்தில் இவ்வூரில் தோன்றிய 'தம்விலுவில் கண்ணகை அம்மன் பள்ளு' என்ற இலக்கியமும் வீரநரேந்திர சிங்கனைக் குறிப்பிடுகின்றது.

ஆயிரத்தித் தொழாயிரமாம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் இவ்வூரில் நிலவியிருந்த இலக்கியத்துக்கு செழுமை சேர்த்தவர்கள் பலராவர். இவர்களில் பெரியார் திரு.உவில்லியம்பிள்ளை, பண்டிதர் திரு. த.குஞ்சித்தம்பி ஆகியோரது இலக்கியப் பங்களிப்பானது குறிப்பிடத்தக்கதாகும். அக்காலத்தில் ஆங்கிலேயரான 'கிறீன்துரை' என்பவரது தென்னந்தோட்டத்தில் மேற்பார்வை யானராகப் பணிபுரிந்து வந்த பெரியார் உவில்லியம் பிள்ளை அவர்கள் எழுதிய ஊஞ்சல்பாடல்கள் மற்றும் தனிப்பாடல்கள் என்பன இவரது இலக்கியப் பணிக்குச் சான்றுகளாகும். இவர் எழுதிய 'திருக்கோவில் பதிகம்' (1942) பக்திச்சுவை நிரம்பப்பெற்ற இலக்கிய வடிவமாகும்.

அக்காலத்தில் மதுரைத் தம்ழிச் சங்கக் கலாசாயையில் கல்வி பயின்று தமிழ்ப் புலமை மிக்கவராகத் திழந்த இவ்வூரைச் சேர்ந்த பண்டிதர் திரு.த.குஞ் சித்தம்பி அவர்கள் இயற்றிய இலக்கியங்களுள் 'வர்க்கமாலை' பஜனாமிர்தம், என்பன குறிப்பிடத்தக்கவைகளாகும். நவீன இலக்கியத்தைப் பொறுத்தவரை விரிவாக ஆய்வு செய்யப்படவேண்டிய தொன்றாகும். எதிர்காலத்தில் சித்திரவேலாயுதர் துணையுடன் இது நிறைவேறும்.

தம்பிலுவில் கண்ணகி வழிபாடு

தமிழகத்தின் சோழநாட்டில் பிறந்த தமிழ்ப்பெண்ணான கண்ணகி பாண்டிய நாட்டில் வீரப்பெண்ணான கற்புக்கரசியாகிச் சேரநாட்டில் பத்தினித் தெய்வம் ஆனார். இலங்கையில் சிங்கள பௌத்தரிடையே இத்தமிழ்ப் பெண் பத்தினித் தெய்வமாக வழிபடப்பட்டு வருகின்றார். இப்பத்தினித் தெய்வமே மட்டக்களப்புத் தமிழகத்தின் தென்பகுதியில் கண்ணகை அம்மனாகப் போற்றப் பட்டு வருகின்றார். இவ்வூர்மக்கள் கண்ணகை அம்மனைத் தங்கள் குலதெய்வ மாகவும் தங்கள் தாயாகவும் கருதிப் போற்றி வருகின்றனர் எனலாம். இவர்கள் கண்ணகை அம்மனை 'தாயார்' என்று உளம் உருகிப் போற்றி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வூர் மக்களது வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்ததாகக் கண்ணகி வழிபாடு இருந்து வருகின்றது. இதனைச் சமூக, சமய, கலாசார ஆய்வுகள் தெளிவுறுத்துகின்றன. இவர்களது வாழ்வில் தாங்கொண்ணா வேதனைகள், சோதனைகள் என்பன எதிர்கொள்ளும் சமயங்களிலெல்லாம், 'அம்மாளே! கண்ணகைத்தாயே! எங்களைக் காத்தருளுவேண்டுமம்மா' என்று அம்மனை இவர்கள் வேண்டுவதும் அம்மன் அருளால் அவை நீங்கப்பெற்று வருவதும் அனுபவம் கண்ட உண்மைகள். இவ்வாறு இவ்வூர் மக்கள் நம்பிக்கைக்கும் பக்திக்கும் உரிய வழிபாடாகக் கண்ணகி வழிபாடு இருந்து வருகின்றது.

இவ்வாறு இவ்வூர் மக்களின் நம்பிக்கைக்குரிய வழிபாடாக மிளிர்ந்து வரும் கண்ணகி வழிபாட்டின் சிறப்பு அம்சமாக விளங்கி வருவது வருடாவருடம் இவ்வூரில் அமைந்திருக்கும் கண்ணகை அம்மன் ஆலயத்தில் நடைபெற்று வரும் அம்மன் சடங்கும் குளிர்த்தியுமாகும். பண்டைக் காலத்தில் ஊரக்கை யில் அமைந்திருந்த கண்ணகை அம்மன் ஆலயத்தின் தொடர்ச்சியாக விளங்கி வரும் தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் நடைபெற்று வரும் இவ்விழாவானது இவ்வூரின் பாரம்பரியச் சிறப்புக்களைத் தெளிவுறுத்தும் பெருவிழாவாக மிளிர்ந்து வருகின்றது.

வருடாந்த உற்சவம் என்று குறிப்பிடப்படும் இப்பெருவிழாவானது வைகாசிப் பௌர்ணமியை முன்னிட்ட ஏழு நாட்களுள் வரும் செவ்வாய்க் கிழமையன்று அம்மன் ஆலயக் கதவு திறத்தலுடன் ஆரம்பமாகும். இதனைத் தொடர்ந்து ஐந்து நாட்கள் பூசைகள், திருவிழாக்கள் நடந்தேறும். மிகவும் கோலாகலமான முறையில் நடைபெற்றுவரும் பூசைகள், திருவிழாக்கள என்பவற்றில் பெருமளவு மக்கள் கலந்துகொண்டு அம்மனை வழிபடுவர் இதனைத் தொடர்ந்து ஆறாம்நாள் அம்மன் ஊர்வலம் சென்று ஏழாவது நாளாகிய திங்களன்று பொங்கலும் குளிர்த்தியும் நடைபெற்று அன்றிரவு கதவு அடைத்தலுடன் உற்சவம் நிறைவு பெறும்.

''வைகாசித் திங்கள் வருவோமென்று
மாதுமையாளும் வரம் கொடுத்தாள்'' என்பதற்கிணங்க திங்கள் கிழமையிலேயே பொங்கலும் குளிர்த்தியும் நடைபெற்று வருகின்றன எனலாம்.

ஆலயம் திறந்த அன்று பூசை, திருவிழா என்பன தொடங்கப்பட்டுத தொடர்ந்து ஐந்து நாட்கள் நடைபெறும் காலத்தில் 'கண்ணகி வழக்குரை' காவியம் படிக்கப்படும். இதனைத் தொடர்ந்து கதவுதிறந்த ஆறாவது நாளாகிய திருக்குளிர்த்திக்கு முதல்நாள் அன்று 'கல்யாணக்கால்' நடுதல் என்ற சிறப்புச் சடங்கு நடைபெறும். இது முக்கியமானதொன்றாகும். இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேப்பமரத்திலிருந்து பெறப்படும் 'கல்யாணக்கால்' அம்மன் ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் நடப்படும். இது பட்டுத்துணிகளாலும் (சேலைகள்), மலர்களாலும் இளநீர்களாலும் தென்னங் குருத்துக்களாலும் அலங்கரிக்கப் படும். இதனைத் தொடர்ந்து அன்றைய தினம் கல்யாணப் படிப்பு நடைபெறும். இது கோவலன் கண்ணகி திருமணத்தைக் குறிக்கும் சடங்காக அமைகின்றது. இதன் பின்பே மீதி வழக்குரை பாடப்படும்.

ஆறாம் நாளிரவு அம்மன் ஊர்வலம் வரும் தினமும் ஆகும். ஆதலால் அன்று தம்பிலுவில் கிராமமே விழாக்கோலம் பூண்டிருக்கும். ஞாயிற்றுக் கிழமையான அன்று முன்னிரவில் மிக அழகாக அலங்கரிக்கப்பட்ட தேரில் அம்மன் கோயில் வடக்கு வழியாக அம்மன் ஊர்வலம் ஆரம்பமாகும். இவ்வேளையில் ''அம்மம்மா கூய்! அம்மம்மா கூய்!'' என்ற ஓசை வானைப் பிழக்கும். இதனைத் தொடர்ந்து பக்தர்கள் சூழ்ந்துவர அம்மன் ஊர்வலம் வருவார். இது கண்கொள்ளாக் காட்சியாக விருக்கும். இவ்வேளையில் அம்மன் தேருக்குப் பின்னால் பக்தர்கள் சிலர் அம்மன் காவியத்தைப் பாடிவருவர். இதேவேளை அம்மன் தேருக்கு முன்னால் காவடி ஆட்டம், பக்திப் பரவச

ஆட்டம், இளவட்டங்களின் துள்ளாட்டம் என்பன நிகழ்ந்து வர அம்மன் ஊர்வலம் தொடரும்.

இவ்வேளையில் அம்மன் தேர் ஊர்வலம் வரும் வீதியின் இரு மருங்கிலும் வாழ்ந்து வரும் மக்கள் தத்தமது இல்லங்களின் முன்னால் சிறிய பந்தலிட்டு அதில் குருத்துக்கள், வேப்பிலை, மாவிலை என்பன கொண்டு தோரணங்கள் கட்டி அப்பந்தலின் கீழ் பூரண நிறைகுடம் வைத்து குத்து விளக்கேற்றி அம்மனை வரவேற்பர். இவ்வாறு நிறைகுடம் வைத்திருக்கும் ஒவ்வொரு இடங்களிலும் அம்மன் தேர் தரித்து நின்று தேங்காய் உடைத்துக் கும்பம் சொரிந்த பின்னர் உரியவர்களுக்கு விபூதி, மஞ்சள் வழங்கிய பின்னர் ஊர்வலம் தொடரும். இதேவேளை ஊரிலுள்ள சில பிரதான சந்நிகளில் பலர் ஒன்று சேர்ந்து பெரிய பந்தலிட்டுச் சோடனை செய்து நிறைகுடங்கள் வைத்து விளக்கேற்றி அம்மனை வரவேற்பதும் வழக்கமாகும்.

இந்த இடங்களில் குறுகிய நேரக் கலை நிகழ்வுகள் இடம் பெறுவ துண்டு. இவ்வாறு அம்மன் ஊர்வலம் விடியற்காலை வரை தொடர்ந்து அம்மன் தேர் ஆலயத்தை வந்தடைந்ததும் காலைப் பூசை நடக்கும். திங்கட் கிழமை யான அன்று பொங்கலுக்கான நெல்லைப் பெண்கள் கூடிக்குற்றுவர். இவ்வேளையில் 'சிலம்பு கூறல்' போன்ற இசைப் பாடல்கள் பாடுவது மரபாகும். மாலையில் அம்மனுக்குரிய பொங்கல் ஆலயத்தின் உட்பிரகாரத்தில் நடை பெறும். இவ்வேளையில் பக்தர்களும் தத்தமது குடும்பத்திற்குரிய பொங்கலைத் தனித்தனியாகப் பொங்கிக் கொண்டிருப்பர்.

ஆலயத்தைச் சூழ்ந்துள்ள வெளிவீதி முழுவதிலும் பொங்கல் பானைகள் நிறைந்திருக்கும். இக்காட்சி காண்பவர் உள்ளங்களில் பக்திப் பரவசத்தைத் தோற்றுவிக்கும். பொங்கலைப் படைக்க வைக்கும் பொழுது பொங்கல் செய்தவர்கள் பொங்கல் பானையுடன் வரிசையாகவந்து தத்தமது பானைகளிலிருந்து குறிப்பிட்டளவு பொங்கலை வழங்கிச் செல்வர். இதனைத் தொடர்ந்து வினாயகர் பூசை, அட்டபாலகர் பூசை, என்பனவற்றோடு அம்மன் பூசையும் (சடங்கு) நடைபெற்றுத் திருக்குளிர்த்தி பாடப்படும். இதன் பின்னர் அம்மனின் புனித நீரான தீர்த்தம் எறியப்படும். இதில் எல்லோரும் விரும்பி நனைவர். இத்தீர்த்தத்தில் நனைந்தால் தமது பாவங்கள், நோய்கள் என்பன நீங்கும் என்பது இவ்வூர் மக்களிடையே இருந்து வரும் நம்பிக்கையாகும்.

இதனைத் தொடர்ந்து பண்டு தொட்டு நிலவிவரும் வழிபாட்டுப் பாரம்பரியங்கள், மரபுகள் என்பன நடந்தேறி அன்றிரவு கதவு அடைத்தலுடன்

வருடாந்த உற்சவம் நிறைவுபெறும். அம்மன் ஆலயம் திறந்து குளிர்த்தி பாடும் வரையுள்ள இக்காலத்தில் இவ்வூரில் மீன், இறைச்சி, மதுபானம் என்பன விலக்கப்பட்டிருக்கும்.அத்துடன் உளக்கட்டுப்பாடுடனும் பக்தியுணர்வு டனும் ஊர்மக்கள் பக்தி வயப்பட்டிருத்தலைக் காணமுடியும். ஊரில் புனிதம் பேணப் படும். இந்த வகையில் பாதைகள், தெருக்கள், பொதுஇடங்கள் என்பன துப்பரவு செய்யப்பட்டு குப்பைகள் அகற்றப்பட்டுப் புதைக்கப்படும்; அல்லது எரிக்கப்படும்.இக்காலத்தில் ஊரிலுள்ள எல்லோரது இல்லங்களிலும் வேப்பிலை கொண்டு தோரணங்கள் கட்டப்பட்டிருக்கும். பத்திரம் என்ற வேப்பிலையானது தீயவற்றை நீக்க வல்லது. பேய், பிசாசுகளையும் போக்கவல்ல தென்பது இவ்வூர் மக்களிடையே இருந்து வரும் நம்பிக்கையாகும். பத்திரம் என்ற வேப்பிலையை இவ்வூர்மக்கள் அம்மனின் அடையாளமாகவே கருதி வருகின்றனர்.

தொழில், கல்வி என்பன காரணமாக வெளியூர்களில் தங்கியிருக்கும் இவ்வூரைச்சேர்ந்தவர்கள் உற்சவகாலத்தில் தவறாது ஊர்வந்து சேர்வர். இவர்கள் இக்காலத்தில் அம்மன் ஆலயத்தில் நடைபெறும் பூசை, திருவிழா என்பனவற்றிலும் ஊர்வலத்திலும் கலந்து கொள்வர். அம்மன் ஆலயக் கதவு அடைத்தலைத் தொடர்ந்து அம்மனின் அருளினைப் பெற்ற உளநிறைவுடன் இவர்கள் தத்தமது இடங்களுக்கு மீண்டும் திரும்புவர். இது வழக்கமாகும். இவ்வாறு இவ்வூர் மக்களது வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்ததாகக் கண்ணகி வழிபாடு விளங்கிவருகின்றது. மேலும், கண்ணகி வழிபாட்டில் முக்கியமான தொன்றாகப் பண்டுதொட்டு இவ்வூரில் நிலவிவருவது 'சர்க்கரை அமுது' என்ற கண்ணகை அம்மன் சடங்காகும்.

வருடாவருடம் தத்தமது இல்லங்களில் தங்கள் குலதெய்வமாக விளங்கி வரும் கண்ணகை அம்மனுக்குச் சர்க்கரையில் பொங்கலிட்டுப் பூசைசெய்து வருவதை இவ்வூர் மக்கள் வழக்காகக் கொண்டுள்ளனர். இவ்வாறு தங்கள் இல்லங்களில் கண்ணகை அம்மனைப் பூரணகும்பத்தில் எழுந்தருளச் செய்து வழிபட்டு வந்தால் நோய் , பிணிகள், துன்பம் என்பன தங்களை அணுகமாட்டதென்பது இவர்களது நம்பிக்கையாகும். இவ்வூரில் கண்ணகி வழிபாடு சிறப்புடன் விளங்கி வருகின்ற தென்பதற்கு இங்கு நிலைத்திருக்கும் சர்க்கரை அமுது' என்ற அம்மன் சடங்கும் சான்றாக மிளிர்கின்றதெனலாம். இவ்வாறு தம்பிலுவில் பழம்பதியில் வாழ்ந்து வரும் தமிழ்ச்சைவரிடையே கண்ணகி வழிபாடு நெடுங்காலம் தொடக்கம் நிலவி வருகின்றது.

இதேவேளை, இவ்வூரில் வாழ்ந்து வந்த பழந்தமிழரிடையே நிலைத் திருந்த சில கண்ணகி வழிபாட்டு முறைகள் (கூறுகள்) பற்றி நோக்க வேண்டியது அவசியமாகின்றது. அக்காலத்தில் மாரி மழை குறைந்து நெற்பயிர்கள் பாதிப்புறும் வேளைகளில் அம்மன் ஆலயத்தைத் திறந்து அம்மனுக்கு விசேட பூசைகள் செய்வதும் மழைக்காவியம் பாடுவதும் வழக்கமாக இருந்து வந்தது. இதன் பயனாக வானம் இருண்டு மழை பொழிந்து வந்ததையும் குறிப்பிடுகின்றனர். மேலும், இவ்வாறு வரட்சி நிலவி வந்த வேளைகளில் மழைபொழிந்து வரட்சி நீங்கிப் பயிர் விளைச்சல் கண்டால் கொம்பு விளையாடுவதாக அம்மனை வேண்டிக் கொம்பு நேர்ந்து வைப்பதும் இதனைத் தொடர்ந்து மழைபொழிவதும் கடந்த காலத்தில் நடந்து வந்தவை களாகும்.

அக்காலத்தில் நெல் வயல்களில் பூச்சித்தாக்கம் போன்ற பனிநோய் கள் தோன்றும் சமயங்களில் இவ்வூர் மக்கள் கண்ணகை அம்மனையே வேண்டி வந்துள்ளனர். கிருமிநாசினிகள் பாவனைக்கு வராத அக்காலத்தில் அம்மன் ஆலய வீதியிலிருந்து சிறிதளவு மண்ணை எடுத்துக்கொண்டு போய் அம்மனை நினைத்து வயலில் பாதிக்கப்பட்ட இடங்களில் தூவி வந்துள்ளனர். இவ்வாறு செய்தவுடன் நோய் மேலும் பரவாது தடைப்பட்டு வந்ததாக அறிய முடிகின்றது. கடுங்கோடை நிலவும் வேளைகளில் ஊரில் கண்ணோய் தீராத தலைவலி, வாய்ப்புண் போன்ற நோய்கள் பரவுவதுண்டு. இவ்வேளையில் அம்மனின் ஆலயத்தில் அமைந்துள்ள கிணற்றில் நீராடித் தங்கள் நோய்களைக் குணமாக்கி வந்தனர்.

இக்கிணற்றிலிருந்து நீர் எடுத்துச சென்று வயல்களில் தெளித்தால் நெற்பயிர்கள் நோய்களிலிருந்து நீங்கி நல்ல விளைச்சலைத் தரும் என்ற நம்பிக்கையும் அக்காலத்தில் இவ்வூர்மக்களிடையே இருந்து வந்தது. சின்னம்மை, பெரியம்மை, பொக்களிப்பான் போன்ற அம்மன் நோய்கள் ஊரில் பரவும் காலங்களில் அம்மன் ஆலயக்கப்புகனார் நோயினால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு அம்மனை வேண்டித் தீர்த்தம் மன்றாடிக் கொடுப்பதும் நோயினால் பீடிக்கப்பட்டவரின் அருகிலிருந்து பெரியவர்கள் 'அம்மன்தாலாட்டு'பாடுவதும் இவற்றின் பயனாக அதிசயிக்கத்தக்க விதத்தில் நோய் படிப்படியாகக்குண மடைவதும் இவ்வூரில் அக்காலத்தில் நடந்து வந்தவைகளாகும். இவற்றை யெல்லாம் இவ்வூரில் வாழ்ந்து வரும் முதியவர்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

கொம்பு விளையாட்டு

நெடுங்காலந்தொட்டு கண்ணகியைத் தங்கள் குலதெய்வமாக வழிபட்டு வரும் தம்பிலுவில் மக்களிடையே கொம்பு விளையாட்டானது கண்ணகி வழிபாட்டின் ஒரு அங்கமாகவே மிளிர்ந்து வந்ததெனலாம். 1976ம் ஆண்டு வரையும் இவ்வழிபாட்டுமுறை இவ்வூரில் நிலவியிருந்தது. அக்காலத்தில் இவ்வூரில் நடைபெற்று வந்த 'கொம்பு விளையாடலானது' மக்களிடையே பக்தி உணர்வையும் மனஅமைதியையும் மகிழ்ச்சியையும் அளித்து வந்தது. இதனை இவ்வூரில் வாழ்ந்து வரும் முதியவர்கள் குறிப்பிடுகின்றனர்.

அக்காலத்தில் மாரிகாலத்தில் சிலவேளைகளில் மழைகுறைந்து வரட்சி நிலவுவதும் உண்டு. இதன் விளைவாக வயலிலுள்ள நெற்பயிர்கள் கருகத்தொடங்கும். இவ்வேளைகளில் இவ்வூர் மக்கள் மழை பொழிந்து பயிர் விளைந்தால் கொம்பு விளையாடுவதாக அம்மனை இரந்து வேண்டிக் கொம்பு நேர்ந்து (குறித்து) வைப்பர். இதன்பயனாக அம்மன் அருளால் மழை பொழிந்து பயிர் விளைந்து ஊர் செல்வத்தில் திழைக்கும். இதனைத் தொடர்ந்து கொம்பு விளையாட்டு நடந்து வந்தது. இவ்வாறு கொம்பு விளையாடல் மூலமாகவும் இவ்வூர் மக்கள் அக்காலத்தில் கண்ணகியை வழிபட்டு வந்தனரெனலாம்.

மேலும், அகாலத்தில் குறிப்பாகக் கோடை காலத்தில் சில சமயங்களில் கொடிய வரட்சி நிலவுவதும் உண்டு. இதன் காரணமாக ஊரில் அம்மை, சின்னம்மை, குக்கல், வயிற்றுக்கடுப்பு, வைசூரி, கண்ணோய் போன்ற நோய்கள் பரவி மக்களைப் பெருந்துன்பத்திற்குள்ளாக்கும். சிலவேளைகளில் உயிர் அழிவுகளும் ஏற்படுவதுண்டு. இவ்வேளைகளில் ஊர் மக்கள் ஒன்று சேர்ந்து மழைபொழிய வேண்டுமென அம்மனை வேண்டிக் கொம்பு நேர்ந்து (குறித்து) வைப்பர். இதனைத் தொடர்ந்து ஊரில் பெருமழை பொழிந்து

வெப்பம் குறைந்து கொடிய நோய்களும் மறையும். இதன் பொருட்டும் கொம்பு விளையாடல் நடைபெற்று வந்தது.

கண்ணகி அம்மனின் கோபம் காரணமாகவே வரட்சி நிலை, வெப்பம் என்பன அதிகரிக்கின்றன என்பது இவ்வூரில் வாழ்ந்து வந்த பழந்தமிழரது நம்பிக்கையாகும். இவை நீங்கும் பொருட்டு மழை பொழிய வேண்டியே இவ்வூர்மக்கள் 'கொம்பு விளையாடல்' என்ற வழிபாடு மூலமாக கண்ணகி அம்மனை வணங்கி வந்தனரெனலாம். கொம்பு விளையாட்டு நடந்தால் நிச்சயம் மழை பொழியும் என்ற நம்பிக்கை இவ்வூர் மக்களிடையே வேருன்றியிருந்தது. இதற்கான காரணம் கற்புக்கரசியாக விளங்கும் கண்ணகி அம்மன் மீது இவ்வூர்மக்கள் கொண்டிருந்த பக்தியும் நம்பிக்கையுமாகும்.

தங்கள் வேண்டுதலின் பயனாக மழைபொழிந்து பயிர் விளைந்து ஊர்செல்வச் செழிப்பில் களித்திருக்கும் வேளையில் கொம்பு விளையாட்டுக்கான ஆயத்தங்களை இவ்வூர்மக்கள் செய்யத் தொடங்குவர். முதலில் கொம்பு விளையாடல் பற்றியப் ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெறும். இக்கூட்டம் கண்ணகி அம்மன் ஆலயமுன்றலில் அமைந்துள்ள ஆலமரத்தின் கீழ் இடம் பெறும். ஊரிலுள்ள பெரியவர்கள், வண்ணக்குமார், பொதுமக்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொள்வர். இவர்கள் அனைவரும் ஒன்று கூடிப் பல தீர்மானங்களை எடுப்பர்.

இதனடிப்படையில் கொம்பு விளையாடலைத் திறம்பட நடத்துவதற் காக இரு கொம்புத் தலைவர்கள் தெரிவு செய்யப்படுவர். கொம்பு விளையாட் டுக்குப் பொறுப்பாக இவர்கள் இருப்பர். இவர்களுடன் வடசேரி, தென்சேரி ஆகிய இரு சேரிப்பக்கங்களிலுமிருந்து இரு விளையாட்டுக் குழுக்கள் தெரிவு செய்யப்படுவர். மேலும் ஊர்ப்பிரமுகர்கள் அடங்கிய 'சமாதானச் சபை' ஒன்றும் இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படும். கொம்பு விளையாடலின் போது இரு சாராருக்குமிடையில் தோன்றும் கருத்து வேறுபாடுகளை நீக்கிவைக்க இச்சபை உதவும். இதன் பின்னர் குறித்த நாளில் கொம்பு விளையாட்டுத் தொடங்கும்.

கொம்பு விளையாடல் தொடங்கியதும் அன்றிலிருந்து இவ்வூர் மக்கள் இருசேரிகளாகப் பிரிந்து பயபக்தியுடன் கொம்பு விளையாட்டை நடத்தி வருவர். இவ்வாறு முறையே வடசேரி, தென்சேரி ஆகிய இரு சேரிகளாகப் பிரிந்த மக்களிடையே சேரிப்பற்று நிறைந்திருக்கும். இவற்றில் வடசேரி என்பது

கோவலர் பக்கமாகும். தென்சேரி என்பது கண்ணகி பக்கமாகும். இப்பிரிவுகளை முறையே சாமிபக்கம் (வடசேரி) என்றும் அம்மாள் அல்லது தாயார் பக்கம் (தென்சேரி) என்றும் இவ்வூர் மக்கள் பக்தியுடன் குறிப்பிடுவர். இப்பிரிவு களிரண்டும் இவ்வூரில் பண்டு தொட்டு நிலவிவரும் குடிமுறையில் அமைந் திருக்கும்.

இதன் பிரகாரம் அம்மன் பக்கமாகிய தென்சேரியில் கட்டப்பத்தான் குடி, சிங்களக்குடி, கோரைக்களப்புக்குடி, வேடக்குடி, முன்னங்கைச்சவடிக்குடி, குருக்கள்குடி, பொற்கொல்லர்குடி (விஸ்வகோத்திரம்) ஆகிய குடிகளும் 'மழவராயன்' என்ற கப்புகனார் பரம்பரைக்குடியும் அடங்கியிருக்கும். கோவலர் பக்கமாகிய வடசேரியில் கண்டங்குடி, சருவிலிகுடி, வைத்தினார்குடி, பணிக்கனார்குடி, குருக்கள்குடி, ஆகிய குடிகள் அடங்கியிருக்கும். இவ்வாறு குடிமுறையில் இருசேரிகளாகப் பிரிந்து தங்களுக்குள் மாறுபட்டுக் கொம்பு விளையாட்டில் ஈடுபட்டு வரும் இவ்வூர் மக்கள் கொம்பு விளையாடல் நிறைவு பெற்றதும் மீண்டும் ஒற்றுமைப்பட்டுக்கொள்வர். இது வழக்கமாகும். தாய் என்ன சேரியோ மக்களும் அந்தச்சேரியாகவே கருதப்படுவர்.

கண்ணகி அம்மன் ஆலயத்தின் முன்னால் அமைந்திருக்கும் 'கொம்புச் சந்தியில்' (ஆலயமுன்றலில்) தேங்காய் உடைத்தலுடன் 'கொம்பு விளையாடல்' ஆரம்பமாகும். அன்றைய தினத்தில் தேங்காய் உடைக்கப்பட்டுக் கொழுகொம்பு முறிக்கப்படும். இதனைத் தொடர்ந்து கொம்புத் தட்டுக் கொம்பு மூன்றும், கூடாரக்கொம்பு ஐந்தும், ஏடக்கக்கொம்பு ஏழும், தண்ணீர் கொம்பு ஒன்றும் சேர்ந்து மொத்தமாகப் பதினேழு கொம்புகள் முறிக்கப்படும். இவ்வாறு பதினேழு கொம்புகள் பூட்டி இழுக்கப்படுதல் கொம்பு விளையாட்டில் ஒரு கணக்காக இருந்து வருகின்றது. இக்கொம்புகள் கரையாக்கன் என்னும் மரத்தி லிருந்து பெறப்படும்.

இவ்வாறு கொம்பு விளையாட்டில் முறிக்கப்படும் கொம்புகளில் தென்சேரிக் கொம்புகள் கண்ணகி அம்மன் ஆலயத்திலிருந்தும் வடசேரிக் கொம்புகள் கோவலர் ஆலயத்திலிருந்தும் (தம்பிலுவில் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்) கொம்புச் சந்திக்கு எடுத்து வரப்படும். இவற்றை இரு சேரிகளையும் சேர்ந்த 'பட்டாண்டிமார்' பயபக்தியுடன் சுமந்து வருவர். இவ்வாறு எடுத்துவரப் பட்ட கொம்புகள் அன்றைய தினம் முறிக்கப்படாதவிடத்து திரும்பவும்

ஆலயங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதில்லை. இக்கொம்புகள் அடுத்த நாள் வரை கொம்புச் சந்தியிலேயே வைக்கப்படும். இக்கொம்புகள் தங்கு கொம்புகள் என்று கூறப்படும்.

தங்கு கொம்புகள், கொம்புச் சந்தியில் வைக்கப்பட்டிருக்கும் வேளையில் இவற்றுடன் இரு பட்டாண்டிமாரும் தங்கியிருப்பர். இவ்வேளையில் பட்டாண்டிமார் உணவு உட்கொள்ளுவதில்லை. பதிலாகப் பால் பழங்கள் மட்டுமே இவர்கள் உட்கொள்வர். அடுத்தநாள் மாலை கொம்புகள் முறிக்கப் பட்ட பின்னரே பட்டாண்டிமார் ஆலயங்களைச் சென்றடைவர். இவ்வாறான நிலை ஏடகக் கொம்புகள் முறிக்கும் வேளையிலேயே ஏற்படுவதுண்டு. கொம்பு விளையாட்டில் முதலில் முறிக்கும் கொழுக்கொம்பு என்பது அம்மன் பக்கம் (தென்சேரி) வெற்றி பெறவேண்டி முறிக்கும் கொம்பாகும். இந்த வெற்றியை இரு சேரியாரும் சேர்ந்து கொண்டாடி மகிழ்வர்.

இவ்வாறு கொழுக்கொம்பு முறித்தலுடன் ஆரம்பமாகும் கொம்பு விளையாட்டு கொம்புத்தட்டுக்கொம்பு, கூடாரக்கொம்பு என்ற இரண்டு வகைக் கொம்புகள் முறிக்கும் நாட்களில் விறுவிறுப்பை அடையும். இக்கால கட்டத்தில் ஊர்மக்களிடையே தென்சேரி, வடசேரி என்ற கட்சிப் பற்றும் வெற்றியை வெளிப்படுத்தும் முறைகளும் வளர்ந்து கொண்டு வரும். இக்கொம்புகள் முறிக்கும் காலத்தில் வெற்றி பெறும் சேரியார் தங்கள் வெற்றிக் களிப்பினை ஆடலாகக் கொம்புவிளையாட்டு இடம்பெறும் கொம்புச் சந்தியிலேயே நடத்தி வருவர். இதன் பின்னர் ஏடகக் கொம்பு முறித்தல் ஆரம்பமாகும்.

இக்காலத்தில் இவ்வூர் மக்களின் உணர்ச்சிவெள்ளம் கட்டுக் கடங்காது கரை புரண்டோடும். வடசேரி, தென்சேரி ஆகிய இருபிரிவினரும் ஒருவர்க் கொருவர் போட்டியாகச் செயற்படுவர். ஆயினும் இச்செயற்பாடுகள் பக்தியின் வெளிப்பாடுகளாகவே மிளிரும் எனலாம். ஏடகங்கள் அமைத்தல், ஏடகக்கொம்பு போன்றவற்றில் இரு சேரியாரும் பயபக்தியுடன் ஒன்று சேர்ந்து செயற்பட்டு வருவது இதற்கு உதாரணங்களாகும். இதேவேளை தங்கள் வெற்றிக் களிப்பை வெளிப்படுத்தும் முறைகளில் மட்டுமே இவர்கள் தங்கள் தனித்துவத்தை வெளிப்படுத்தி வந்தனரெனலாம். ஏடகக்கொம்பு முறிக்கும் காலத்தில் இதனைக் காணமுடியும்.

ஏடகக் கொம்பு முறிக்கத் தொடங்குவதற்கு முன்னர் இருசேரியாரும் ஏடகங்களை அமைப்பர். இவ்வாறு அமைக்கப்படும் 'ஏடகம்' என்ற தேர்கள் மிகவும் நேர்த்தியான முறையில் அமைந்திருக்கும். வடசேரியாரது ஏடகம் தென்சேரியாரது ஏடகத்திலும் பார்க்க சற்று உயர்ந்திருக்கும். இரு சேரியாரும் தாங்கள் அமைத்த ஏடகங்களை சோடனை செய்வதற்கு முன்னர், கொம்புச் சந்திக்குக் கொண்டு வந்து 'சீலை எறிதல்' என்ற வைபவத்தைச் சிறப்பாக நடத்தி வைப்பர். அன்றைய தினம் ஒரு மங்கல நாளாகக் கருதப்படும். இதன்பின்னர் இரு ஏடகங்களும் அவரவர் ஆலயங்களுக்கு (சேரிப்பகுதி) எடுத்துச் செல்லப்பட்டுச் சோடனை வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

ஏடகங்கள் இரண்டும் சோடனை செய்யப்படும் காலத்தில் ஒரு சேரியைச் சேர்ந்தவர் அடுத்த சேரியாரது ஏடகத்தைப் பார்வையிட அனுமதிக் கப்படுவதில்லை. இரு சாராருமே ஒருவர்க்கொருவர் போட்டியாகவே சோடனை வேலைகளை மேற்கொண்டு வருவர். இவ்வாறு தனித்தனியாகச் சோடனை செய்யப்பட்டு இரு ஏடகங்களும் குறிப்பிட்ட நாளன்று கொம்புச் சந்தியில் சந்திக்கும். இது கண்கொண்ணாக் காட்சியாக இருக்கும். இக்காட்சியைக் கண்டு களிக்கும் உள்ளங்கள் பக்தியில் திழைத்துப் பரவசம் அடையும். இதனை நானும் அனுபவித்துள்ளேன்.

இதனைத் தொடர்ந்து பெருமளவு மக்கள் சூழ்ந்துவர இரு ஏடகங் களும் ஊர்வலம் வரும். இவ்வேளையில் ஊர்மக்கள் வீதியின் இருமருங்கிலும் தோரணங்கள் கட்டி, நிறைகுடங்கள் வைத்து அம்மனையும் (கண்ணகி) சுவாமியையும் (கோவலர்) வரவேற்பர். ஊரே விழாக்கோலம் பூண்டிருக்கும். இவ்வேளையில் மக்கள் உள்ளங்களில் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டோடும். இதனைத் தொடர்ந்து ஏடகக்கொம்பு முறிக்கத் தொடங்குவர். ஏடகக் கொம்புகள் ஏனைய கொம்புகளை விடவும் சற்றுப் பருமனாகவிருக்கும். இக்கொம்புகள் முறிப்பதற்காக 'செவ்வாய்குத்தி' என்ற வைரமான மரம் நடப்பட்டிருக்கும்.

இம்மரத்திலேயே கொம்புகளை முறிப்பதற்காக அமைக்கப்பட்டி ருக்கும் வடங்கள் கட்டப்பட்டிருக்கும். இருசேரியாரும் ஒன்று சேர்ந்தே வடத்தினை இழுத்துக் கொம்பினை முறிக்கச்செய்வர். இவ்வாறு கொம்பு முறித்தல் நிகழ்ந்து வெற்றி பெற்ற சேரியார் தங்கள் மகிழ்ச்சியை முதலில் கொம்புச் சந்தியில் வைத்துக் காட்டத் தொடங்குவர். தங்களை மறந்து ஆடி

மகிழ்வர். இதன் பின்னர் வெற்றி பெற்ற கொம்பை ஏடகத்தில் வைத்து ஊர்வலம் வருவர். இரவு முழுவதும் ஊர்வலம் தொடரும். இவ்வேளையில் தங்கள் மகிழ்ச்சியை இவர்கள் ஆடல், பாடல்கள் மூலமாக வெளிப்படுத்துவர்.

இதனைத் தொடர்ந்து அடுத்த ஏடகக் கொம்பு முறிப்பதற்கு முன்னர் இரு ஏடகங்களும் கொம்புச் சந்தியில் சந்தித்து ஊர்வலம் சென்று திரும்பும் இதன்பின்னர் அடுத்த கொம்பு முறிக்கப்படும். இதில் வெற்றி பெற்ற ஏடகம் ஊர்வலம் செல்லும். இவ்வாறு ஏழு கொம்புகள் முறிக்கப்படும். இக்காலத்தில் மக்களிடையே வடசேரி, தென்சேரி என்ற உணர்ச்சி மிகுந்து காணப்படும். வெற்றி பெற்ற உள்ளங்கள் (சேரியார்) வெற்றிக் களிப்பில் மிதக்கும். இக்களிப்பானது புலவர்கள் பலரைத் தோற்றுவிக்கும். இவர்கள் தோல்வியுற்ற சேரியார் மீது வசைப்பாடல்களை இயற்றிப் பாடிவைப்பர். இப்பாடல்களை எல்லோரது நாவிலும் கேட்கக் கூடியதாக விருக்கும். இவ்வாறான வசைப் பாடல்கள் ஏராளம் உண்டு. இவற்றுள் பழம் பாடல் சிலவற்றை நோக்குவோம்.

ஆற்றோரம் போறமயில் - அது
ஆண்மயிலோ பெண்மயிலோ
பார்த்து வாடா வடசெரியான் - உனக்கு
பாவற்பழம்போல மாலை தாறேன்.

ஆற்றோரம் சிறாம்பி கட்டி
அங்கே நின்று வடமிழுத்து
வேர்த்து வாறான் தென்சேரியான் - அவனை
வெள்ளிமடல் கொண்டு வீசுங்கடி.

ஆற்றோரம் சிறாம்பி கட்டி
அங்கே நின்று படைபொருதி
தோற்றுவாறான் தென்சேரியான் - அவனைத்
துடப்பங் கட்டாலே அடியுங்கடி.

வடசேரியான் கொம்பு எங்கேயெங்கே
மணமுள்ள தாழையின் மேலே மேலே
தென்சேரியான் கொம்பு எங்கே யெங்கே
செம்பரப் பற்றைக்குக் கீழே கீழே.

வடசெரியான் கொம்பு எங்கேயோங்கே
வண்ணாரடை சாடிக்கு உள்ளே உள்ளே
தென்சேரியான் கொம்பு எங்யேயெங்கே
சித்திரத் தேருக்கு மேலே மேலே.

இப்பாடல்களிலுள்ள வடசேரியார், தென்சேரியார் என்ற சொற்கள் பாடுவோரது சேரிகளுக்கேற்பப் பாடப்படும். இவைபோன்ற ஏராளமான வசைப் பாடல்கள் பனையோலை ஏடுகளில் காணக்கிடைக்கின்றன. இவைதவிர பிற்காலத்தில் கொம்புவிளையாட்டு நடந்து வந்தவேளைகளில் அவ்வவ்போது ஏராளமான வசைப்பாடல்கள் திடீர்ப் புலவர்களால் இயற்றிப் பாடப்பட்டும் வந்துள்ளன. இவற்றில் நகைச்சுவை நிரம்பப் பெற்ற பாடல்களும் அடங்கி யிருந்தன.

இவ்வாறு இருசேரியாரும் ஒருவர்க்கொருவர் வசைப்பாடல்கள் பாடித் தங்கள் வெற்றியைக் கொண்டாடி வரும்வேளையில் மக்களிடையே சேரிப்பற்றும் தீவிரம் அடைந்திருக்கும். இதன் விளைவாகப் பல சம்பவங்கள் நிகழும். சிலரது குடும்பத்தில் கணவன் மனைவியரிடையே கசப்புணர்வுகள் ஏற்படுவ துண்டு. பெரும்பாலும் கணவன் ஒரு சேரியாகவும் மனைவி மக்கள் ஒரு சேரியாகவுமிருக்கும் குடும்பங்களில் இந்நிலை தோன்றும். நான் சிறுவனாக விருந்த காலத்தில் எங்கள் வீட்டிலேயே இதனை நான் காணமுடிந்தது. அப்பசுமையான நினைவுகள் இன்றும் என் மனதில் உள்ளன.

எங்கள் தந்தையார் வடசேரியைச் சேர்ந்தவர். எனது தாயாரோ தென்சேரியைச் சேர்ந்தவர். இதனடிப்படையில் பிள்ளைகளாகிய நாங்களும் தென்சேரிப் பக்கத்தினராவர். ஏடகக் கொம்பு முறிக்கும் சமயங்களில் எங்கள் தந்தையார் வடசேரிக் கொம்பு பிடிக்கச் செல்வதுண்டு. அவர் கொம்பு பிடித்தால் வடசேரிக்கு வெற்றி நிச்சயம். இவ்வாறு அவர் தனது சேரிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்துவிட்டு வீடுவந்து சேரும்போது அதன் எதிரொலியை அன்று எங்கள் வீட்டில் காணமுடியும். இவைபோன்ற பலசம்பவங்கள் பலரது குடும்பங் களில் அக்காலத்தில் நிகழ்ந்து வந்ததையும் நான் அறிவேன்.

அத்துடன் பொது வாழ்விலும் சில சம்பவங்கள் நடப்பதுண்டு. ஆயினும் இவற்றால் நிரந்தர பாதிப்புக்கள் ஏற்படுவதில்லை. உயிர் நண்பர்கள் உள்ளங்களால் ஒன்று சேர்ந்த உண்மைக் காதலர்கள் ஆகியோருக்கிடையில்

தோன்றும் கருத்து வேறுபாடுகளும் இவற்றுள் அடங்கும். இவைதவிர வெற்றி பெற்ற சேரியானது ஏடகம் ஊர்வலம் வரும் வேளைகளில் தோல்வியுற்ற சேரியார் தங்கள் வாசலில் (வீதியின் மருங்கில்) நிறைகுடம் வைக்க மாட்டார்கள். ஆயினும் வெற்றி பெற்ற ஏடகம் அவ்விடத்தில் தரித்திருக்கும். இவ்வேளையில் வெற்றி பெற்ற சேரியார் வசைப்பாடல்கள் பாடி ஆடித் தங்கள் வெற்றிக் களிப்பினை வெளிப்படுத்துவர். இவ்வாறான காட்சிகளை ஏடகக் கொம்பு முறிக்கும் காலங்களில் காணலாம். ஏடகக் கொம்பு முறித்தல் நிறைவடைந்ததும் இவை யாவும் மறைந்து மக்களிடையே ஒற்றுமை நிலை பெறும்.

இவ்வேளையில் ஏடக்ககொம்பு முறிக்கும் காலத்தில் நிலவியிருந்த சேரிப்போட்டிகள் (ஏடகம் சோடனை, ஆடல், பாடல்) யாவும் முடிவு பெற்றிருக்கும். எல்லோரும் ஊர்மக்கள் என்ற உணர்வே மக்கள் மனங்களில் மிகுந்திருக்கும். அத்துடன் தங்கள் குலதெய்வமாக விளங்கும் கண்ணகை அம்மன் என்ற உணர்வும் மேலோங்கியிருக்கும். இந்நிலையில் ஏடகங்கள் இரண்டும் கொம்புச் சந்தியில் சந்தித்து ஊர்வலம் வரும். மக்கள் வீதியின் (ஊர்வலம்வரும்) இரு மருங்கிலும் தங்கள் வாசல்களில் தோரணங்கள் கட்டி நிறைகுடங்கள் வைத்துப் போற்றி நிற்பர். இவ்வேளையில் ஊர் முழுவதும் மங்கல விழாவாகப் பொலிவு பெற்றிருக்கும் பண்டைத் தமிழர் பண்பாட்டுக் கோலங்கள் பரிமளிக்கும். அத்துடன் பண்டுதொட்டு இவ்வூரில் நிலவி வருகின்ற கண்ணகி வழிபாட்டுப் பாரம்பரியமும் பொலிவுடன் விளங்கும்.

இதன் பின்னர் கொம்புச் சந்தியில் இரண்டு ஏடகங்களும் சேர்ந்து தரித்திருக்கும் வேளையில் தண்ணீர் கொம்பு முறிக்க ஆயத்தங்கள் செய்யப் படும். 'தண்ணீர் கொம்பு' என்பது கொம்பு விளையாட்டின் நிறைவையொட்டி முறிக்கப்படும் சிறிய கொம்பாகும். இது அம்மனுக்கே வெற்றியாக அமையும். இதற்கான காரணம் கொம்பு விளையாட்டானது முழுக்கமுழுக்க கண்ணகை அம்மன் வழிபாடாகவே விளங்கி வந்தது என்பதைத் தெளிவுறுத்துவதற்காக வேயாகும். இதன் அடிப்படையிலேயே கொம்பு விளையாட்டின் ஆரம்பத்தில் முறிக்கப்படும் கொழுக்கொம்பும் அம்மனுக்கே வெற்றியாக அமைகின்றது. இவற்றைக் கருத்தில் கொண்ட ஊர்மக்களான இரு சேரியாரும் ஒன்று கூடிப் பக்தியுடன் தண்ணீர்கொம்பை முறித்து அம்மனை வெற்றி பெறவைப்பர். இவ்வெற்றியை எல்லோரும் சேர்ந்து கொண்டாடி மகிழ்வர்.

இதனைத் தொடர்ந்து 'தண்ணீர் சொரிதல்' என்னும் மங்கல நிகழ்ச்சி தொடங்கும். தண்ணீர் சொரிதல் என்பது கொம்புவிளையாட்டில் பயன்படுத்தப் பட்ட கொம்புகள் மீது மங்கல நீர் ஊற்றிக் குளிரச் செய்வதாகும். இதன் அடிப்படையிலேயே தண்ணீர் சொரிதல் நடைபெறுகின்றது. இதன் பிரகாரம் இருசேரியாரும் கொம்பு விளையாட்டில் இடம் பெற்ற கொம்புகளைக் கட்டுக் களாகக் கட்டி தங்கள் தலைமீது வைத்துச் சுமந்து கொண்டு ஊர்வலம் வருவர். இவ்வேளையில் வீதியின் இருபக்கங்களிலும் மஞ்சள், வேப்பிலை கலந்த மங்கல நீர் நிறைந்த குடங்கள் வைக்கப்பட்டிருக்கும்.

கொம்புகள் சுமந்து கொண்டு வருவோர் மீது இக்குடங்களிலுள்ள மங்கல நீர் ஊற்றிச் சொரியப்படும். இம்மங்கல நீராடலில் சில மக்களும் கலந்து கொள்ளவர். இவ்வாறு இவர்கள் ஊர்வலம் சென்று வந்தபின் குளுர்த்தி படித்தலுடன் கொம்பு விளையாடல் நிறைவு பெறும். இதனைத் தொடர்ந்து ஊரில் நல்லமழை பொழியும். மக்கள் உள்ளங்கள் மகிழ்ச்சி பெறும். சாந்தி, சமாதானம், அன்பு, சகோதரத்துவம், இறைபக்தி என்பன நிலைபெறும். செந்நெல் விளையும் வயல்களில் பெரும்போக விதைப்பு வேலைகளும் ஆரம்பமாகும். இவை ஆன்மீகம் கண்ட வரலாற்றுண்மைகள்.

இவ்வாறு கண்ணகி வழிபாட்டின் ஒரு அங்கமாகச் சிறப்புடன் விளங்கி வந்த கொம்புவிளையாடலானது இவ்வூரில் நெடுங்காலம் தொட்டு இருந்து வருகின்றதென்பதைச் செவிவழிச் செய்திகள் குறிப்பிடுகின்றன. கண்டி மன்னர் காலத்தில் இவ்வூரில் கொம்பு விளையாட்டு உன்னத நிலையில் இருந்துள்ளது. கொம்பு விளையாடலின் போது படிக்கப்படும் 'கண்ணகை அம்மன் பள்ளு' இதனை உறுதிசெய்கின்றது. இதனை தம்பிலுவில் புலவர் ஒருவர் இயற்றி யுள்ளார். கண்டி மன்னனான ஸ்ரீ வீரநரேந்திர சிங்கன் (1706-1739) காலத்தில் தோன்றிய இக்கிராமிய இலக்கியம் இம்மன்னனையும் புகழ்ந்துரைக்கின்றது.

இதனை, 'பார்வாழி தென்திருக்கோயில் குமரன் வாழி
கண்டிபார்த்தீபன் நரேந்திர சிங்க மூர்த்தியும் வாழி
ஊர்வாழி தம்பிலுவில் ஊர்வாழ்க வரந்தரும்
பத்தினி கண்ணகை நீடுழி வாழ்கவே!

என்ற பாடல் வரிகள் (பாடல்: 24 , வரி: 1-4) தெளிவுறுத்துகின்றன. அக்காலம் தொடக்கம் இக்கிராமிய இலக்கியம் கொம்பு விளையாட்டு நடக்கும்

வேளையில் படிக்கப்பட்டு வருவதாக செவிவழிச்செய்திகள் உண்டு. இதனை இவ்வூரில் வாழ்ந்து வரும் முதியவர்கள் சிலரும் குறிப்பிடுகின்றனர். (தகவல்: திரு.அ.கணபதிப்பிள்ளை (வயது 82) இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) இப்பள்ளுப் பாடல்கள் குறிப்பாக ஆலயத்திலிருந்து ஏடகம் புறப்படும் சமயத்திலும் ஏடகங்கள் இரண்டும் கொம்புச்சந்தியில் சந்திக்கும் வேளைகளிலும் ஊர்வலம் தொடங்கிய ஏடகம் குறிப்பிட்ட இடத்தைச் சென்றடைந்து திரும்பும் வேளைகளிலும் பாடப்பட்டு வந்தன. அத்துடன் ஏடகம் ஆலயத்தை வந்தடைந்த வேளையிலும் இப்பாடல்களைப் பாடுவதுண்டு.

இப்பள்ளுப் பாடல்களைப் பாடும்போது ஏடகத்தின் முன்னால் தென்னை ஓலையால் கட்டப்பட்டு நெருப்புப் பந்தம் ஒன்றைப் போட்டு அதனைப் பலர் ஒன்று சேர்ந்து சுற்றிவந்து பாடி ஆடுவது மரபாகும். இது இன்றும் நிலவி வருகின்றது. வைகாசிப் பொங்கல் உற்சவ காலங்களில் அழகிய சித்திரத் தேர்மீது (சிறிய ஏடகம்) கண்ணகை அம்மன் ஊர்வலம் வரும் வேளையில் இப்பள்ளுப் பாடல்களும் பாடப்பட்டுவருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அம்மன் அருளால் மழை பொழியச் செய்த கண்ணப்பர்

பண்டைக் காலத்தில் வாழ்ந்திருந்த எம்முன்னோர்களான சமய குரவர்கள் தமிழ்த் திருமுறைப் பாடல்கள் பாடிப்பல அற்புதங்கள் புரிந்துள்ளனர். இதனை அவர்களது வாழ்க்கை வரலாறுகள் குறிப்பிடுகின்றன. தங்களது தேவாரப்பாடல்கள் மூலமாகத் திருமறைக் காட்டில் நெடுங்காலமாகப் பூட்டப்பட்டிருந்த கதவைத் திறக்கவும் பின்னர் மூடவும் செய்தவர்கள் அப்பரும் சம்பந்தருமாவர். இவர்களுக்குப் பிற்பட்ட காலத்தில் கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் வாழ்ந்தவரான கவிச்சக்கரவர்த்தி கம்பரோ தனது

> ''பாரைச் சுமந்த படவரவே பங்கயக்கண்
> வீரன் கிடந்து உறங்கும் மெல்லணையே - ஈரமதிச்
> செஞ்சடையான் பூணும் திருஆ பரணமே
> நஞ்சுடையாய் தூர நட.''

என்ற பாடலைப் பாடிப் பாம்பினால் தீண்டப் பெற்று மரணத்தின் பிடியில் சிக்கியிருந்த குழந்தையைக் காப்பாற்றியுள்ளார்[1]

இவைபோன்று நமது முன்னோர்கள் தமிழ்ப் பாடல்கள் மூலமாகச் செய்த அற்புதங்கள் ஏராளம் எனலாம். இவ்வாறு அற்புதங்கள் புரிந்தவர்களில் இவ்வூரைச் சேர்ந்த கண்ணப்பன் என்பவரும் ஒருவராவர். இவ்வூரிலுள்ள கண்ணகை அம்மன் ஆலயத்தில் கப்புகனாராகக் கடமை புரிந்து வந்த இவர் கண்ணகை அம்மன் மீது அளவற்ற பக்தியையும் நம்பிக்கையையும் கொண்டிருந்தார். அக்காலத்தில் ஒருசமயம் இவ்வூரில் கொடிய வரட்சி நிலவி யிருந்த வேளையில் அம்மன் அருளினால் பதினாலு தமிழ்ப் பாடல்களைப் பாடி இவர் மழை பொழியச் செய்துள்ளார். இச்சம்பவம் சுமார் இருநூறு வருடங்களுக்கு முன்னர் இவ்வூரில் நடந்ததென்பதை அறியமுடிகின்றது.

---

1. 'தனிப்பாடல் திரட்டு' – பக்.76,77 உரையாசிரியர் புலவர் அமாணிக்கம் எம்.ஏ. துணைப்பேராசிரியர். – 1977

கண்டி மன்னர் காலத்தில் நடந்த இச்சம்பவம் பற்றி நோக்குமிடத்து பல வரலாற்றுண்மைகளையும் அறிய முடிகின்றது. கண்டியை இரண்டாம் இராசசிங்கன்(கி.பி.1635 - 1687) என்ற மன்னர் ஆட்சி புரிந்த காலத்தில் மட்டக்களப்புத் தமிழகம் கண்டி மன்னரின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தது. ஆயினும் மட்டக்களப்பை ஆட்சிபுரிந்து வந்த தமிழ்ச் சிற்றரசர்கள் சுதந்திர முள்ள சிற்றரசர்களாகவே இப்பிரதேசத்தில் செயற்பட்டுவந்தனர். நீர்வளமும் நிலவளமும் பொருந்திய மட்டக்களப்புத் தமிழகத்தில் கண்ணகி வழிபாடு சிறந்திருந்தது. அக்காலத்தில் வேண்டிய வரமளிக்கும் பெண் தெய்வமாக கண்ணகை அம்மன் விளங்கி வந்தார்.

அக்காலத்தில் ஒரு சமயம் மட்டக்களப்புத் தமிழகத்தில் மாரி மழை குறைந்து கடும் வரட்சி நிலவியது. இதன் பயனாக நெற்செய்கையானது முற்றாகப் பாதிக்கப்படுமளவுக்கு நெற்பயிர்கள் கருகத்தொடங்கின. இவ்வாறு நெற்செய்கை பாதிக்கப்படுமேயானால் கொடிய பஞ்சம் ஏற்படலாம் என்பதைக் கருத்தில் கொண்ட மட்டக்களப்புச் சிற்றரசர்கள் கண்டி மன்னனான இராச சிங்கனுக்கு இந்நிலைபற்றி அறிவித்தனர். இதனைக் கேள்வியுற்ற கண்டி மன்னன் கண்ணகை அம்மன் ஆலயங்களில் விசேட பூசைகள் செய்து மழை வேண்டி அம்மனை வழிபாடு செய்யுமாறு ஆலோசனை கூறினான். கண்டி மன்னனது ஆலோசனைப்படி மட்டக்களப்பிலுள்ள எல்லாக் கண்ணகை அம்மன் ஆலயங்களிலும் விசேட பூசைகளும் வழிபாடுகளும் நடைபெற்று வந்தன.

இதேபோன்று இவ்வூரிலுள்ள கண்ணகையம்மன் ஆலயத்திலும் விசேட பூசைகள் இடம் பெற்றுவந்தன. ஆயினும் மழை பொழியவில்லை. இதேவேளை இவ்வூர் மக்களின் பூர்வீகச் சொத்தாகவிருந்து வந்த 'ஊரக்கை வெளி' என்னும் நெல்வயலில் நிறைந்திருந்த நெற்பயிர்கள் வரட்சி காரணமாகப் பூவுடன் வாடிக்கொண்டிருந்தன. இக்காணியில் விளைந்து வந்த நெல்லே இவ்வூரின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து வந்ததெனலாம். நல்ல விளைச்சலைத் தருகின்ற இவ்வயலில் நிறைந்திருந்த நெற்பயிர்கள் வரட்சி யினால் முற்றாகப் பாதிக்கப்படின் ஊரில் உணவுப்பஞ்சம் ஏற்படும் என்பதை உணர்ந்த மக்கள் பெரிதும் கலங்கினர்.

இதற்கு முந்திய காலத்தில் இவ்வாறு மழையின்றி நெற்பயிர்கள் வாடியபோதெல்லாம் வயலின் ஓரிடத்திலுள்ள மருதமரநிழலில் அம்மனைப் பிரதிஸ்டை செய்து வேண்டுதல் செய்தால் மழை பொழியும் வழக்கம் இருந்து

வந்தது. இதனைக் கருத்தில் கொண்ட இவ்வூர் மக்கள் இம்முறையும் ஒன்று கூடி அம்மனை எடுத்துச் சென்று ஊரக்கை ஆற்றுக்கு அருகாமையில் வயலில் நின்றிருந்த மருதமரத்து நிழலில் அம்மனைப் பிரதிஸ்டை செய்து வேண்டுதல் செய்தனர். இவ்வாறு செய்த போதும் மழை பெய்யவில்லை. இதனால் ஊர் மக்கள் மனதில் பெருங்கவலை குடிகொண்டது. இதனையுணுர்ந்த அம்மன் ஆலயக் கப்புகனாரான கண்ணப்பரும் மனம் வருந்தினார்.

இவ்வூரில் வாழ்ந்து வருபவரும் தமிழ்ப்பற்று மிகுந்தவருமான இவர் தம்பிலுவில் மக்களின் துயரினைப் போக்க நினைத்தார். ஒரு நாள் பூசையின் போது ஊரக்கை வெளியில் குறிப்பிட்டதொரு இடத்திலிருந்து பச்சைக் களி மண்ணை இவர் எடுத்து வந்து ஒரு பானை செய்து அதில் பொங்கலிட்டு அம்மனுக்குப் படைத்தார். பின்பு கண்களை மூடிக்கொண்டு (அம்மனைத் தியானித்துக்கொண்டு) பாட ஆரம்பித்தார். பதினாலு பாடல்கள் பாடிமுடிந்ததும் சற்றும் எதிர்பாராத வகையில் வானம் இருண்டு மழை பொழியத் தொடங்கியது. இவ்வதிசயத்தைக் கண்டவர்கள் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத் தோராய் கப்புகனாரைத் தொழுது பாராட்டினார். ஊரக்கை ஆற்றுக்கு அருகாக விருந்த மருதமரத்தடியில் அன்று கண்ணப்பரால் பாடப்பட்ட பாடல்களே இன்று 'தம்பிலுவில் மழைக்காவியம்' என்ற இலக்கிய வடிவமாக விளங்கு கின்றது.

இக்காவியத்திலுள்ள ஒரு பாடலில் கப்புகனாரான கண்ணப்பர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். பத்தினித்தெய்வமே உன்னருள் கிடைப்பின் நட்ட நடுக்கடலில் தத்தளிக்கும் கப்பல் கூட கரையை வந்து சேரும். பிணம் கூட உயிர்பெறும். உப்பு நிலத்தில் நெல்விளையும். பிறவியிலேயே ஊமையான வனும் பேசமுடியும். குருடன் பார்வை பெறுவான். கடலில் விளையும் முத்துக்கள் நதியிலும் விளையும் இவ்வகையான வல்லமையினைப் பெற்ற கண்ணகைத் தாயே இவ்வூரில் வாழ்ந்து வரும் ஏழைகளின் இதயங்களைக் குளிரச் செய்ய மழையைப் பொழியச் செய்வாய் என்று இறைஞ்சுகின்றார்.

இதனை''கப்பல் திசை கெட்டது கரைக்குள் அடையாதோ, கட்டைதனில் வைத்த பிணம் மற்றுயிர் கொள்ளாதோ, உப்பளமதிற் பதர் விதைக்க விளையாதோ, உத்தரவு உமையவன் உரைக்கவறியானோ செப்பு பிறவிக்குருடு இப்பத் தெளியாதோ, சிப்பிவளர் முத்துக்கள் நதிக்குள் விளை யாதோ, செப்பமுடன் உன்கிருபை வைத்தடுவையானால் சீர்மேவு தம்பிலுவில்

சேரும் மாதாவே! என்ற காவியப் பாடல் குறிப்பிடுகின்றது. மேலும் இவர் தனது காவியத்தில் கண்டி மன்னனான இரண்டாம் இராச்சிங்களையும் புகழ்ந்துரைக்கத் தவறவில்லை. 'நீதி செறி கண்டி மகாராசசிங்கன் வாழி' என்று கண்டிமன்னனை இவர் குறிப்பிடுகின்றார்.[3]

இதன் வாயிலாக கண்டிமன்னனான இரண்டாம் இராசசிங்கன் இவ்வூர் மக்களுடன் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பினை அறிய முடிகின்றது. இலங்கையில் ஆட்சிபுரிந்த சிறந்த மன்னர்களுள் ஒருவனான இவன், மதுரையி லிருந்து பெண் கொண்டுவந்து அவளைத்தன் தேவியாகக் கொண்டிருந்தான். கண்டியில் சிறையிலிருந்த 'றொபர்ட் நொக்ஸ்' என்னும் ஆங்கிலேயர் இரண்டாம் இராசசிங்கனின் (மனைவி) பட்டத்துராணி ஒரு தமிழ் அரசி என்று குறிப்பிடுகின்றார். இவன் ஆட்சிக்கு வந்தகாலத்தில் (கி.பி.1635) மட்டக்களப்புத் தமிழகத்தில் போர்த்துக்கேயரின் ஆதிக்கம் நிலைத்திருந்தது. இவர்களைத் தாக்கி வெளியேற்றுவதற்கு ஒல்லாந்தர் கண்டி மன்னனுக்கு உதவியளித்தனர்.

இதற்குப் பிரதியுபகாரமாக ஒல்லாந்தர் இலங்கையின் கரையோரப் பகுதிகளை பெற்றனர். ஆனால் மட்டக்களப்பு (அம்பாரையை உள்ளடக்கியது) திருமலை மாவட்டங்களை கண்டி மன்னனான இரண்டாம் இராசசிங்கன் தனது அதிகாரத்தின் கீழ் வைத்திருந்தான்.[4] இவ்வாறு வரலாறு குறிப்பிடுகின்றது. ஆனால் அக்காலத்தில் மட்டக்களப்பை ஆட்சிபுரிந்து வந்த தமிழ்ச் சிற்றரசர்கள் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகவே இப்பிரதேசத்தில் ஆட்சி புரிந்து வந்தனர். இவர்கள் கண்டி மன்னருடன் நல்லுறவுகள் கொண்டிருந்தனர். இதன் காரணமாக கண்டி மன்னனின் செல்வாக்கு இப்பிரதேசத்தில் நிலைத்திருந்தது என்பதே வரலாற்றுண்மைகளாகும்.

---

2. 'கொப்புமா வின்கனிய தாகமுன்னி ருந்தாய்
கோகனக தம்பிலுவில் கோமிலி லமர்ந்தாய்
இப்பவூ ரக்கவெளி யாற்றிடைமி ருந்தாய்
யெப்பம்மா மழைதருவ தென்றினிருந்தாய் ' என்ற காவிய வரிகள்
(பாடல் 5. வரி 3 – 6) இதனை உறுதி செய்கின்றன.

3. தம்பிலுவில் மழைக்காவியம் – பாடல்: 15 வரி 3
இதேபோன்று அக்காலத்தில் (கி.பி.17ம்நூ) திருகோணமலை தம்பலகாமத்தைச் சேர்ந்த வீரக்கோன் முதலியார் பாடிய 'சித்திரவேலாயுதர் காதல்' என்ற காவியமும் கண்டி மன்னனான இரண்டாம் இராசசிங்கனைப் புகழ்ந்துரைக்கின்றது.
'தமிழ் சிங்கள இலக்கிய உறவு' பக்: 59,60 தமிழ்மணி புலவர் த.கனகரெத்தினம் – 1996

4. இலங்கைச் சரித்திரம் பாகம்–I –பக்:59,60 எல்.எவ்.டி.சில்வா–1952

கண்ணகி வழிபாட்டில் கலை இலக்கியம்

பண்டைக் காலம் தொடக்கம் சைவமும் தமிழும் செழிப்புடன் விளங்கி வரும் தம்பிலுவில் பழம் பதியில் அக்காலத்தில் கலை, இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணைகாகக் கண்ணகி வழிபாடு இருந்து வந்துள்ளது. இலக்கியம் என்பது காலக்கண்ணாடியாகும். இதற்கொப்ப இவ்வூரில் தோன்றிய பழைய இலக்கியங் களில் பெரும்பாலானவை கண்ணகி வழிபாட்டையே அடிப்படையாகக் கொண்டு உருவானவைகளாகும். இவற்றின் வாயிலாக அக்காலத்தில் இவ்வூரில் வாழ்ந்து வந்த தமிழரது வாழ்வியலில் கண்ணகி வழிபாடு பெற்றிருந்த செல்வாக்கு நன்கு தெளிவாகின்றது.

இதேபோன்று அக்காலத்தில் இவ்வூரில் செழிப்புடன் விளங்கியிருந்த கலைகளுக்கும் கண்ணகி வழிபாடே நிலைக்களனாக இருந்து வந்துள்ள தெனலாம். இவ்வூரில் கண்ணகி வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு உருவான பழைய இலக்கியங்களுள் இன்று காணக்கிடைக்கும் மிகப் பழைய இலக்கியம் 'தம்பிலுவில் கண்ணகை அம்மன் மழைக்காவியம்' ஆகும். கி.பி.பதினேழாம் நூற்றாண்டளவில் இவ்வூரைச்சேர்ந்த திரு.கண்ணப்பன் என்பவரால் உருவாக்கப் பட்ட இக்கிராமிய இலக்கியமானது அக்காலத்தில் (கி.பி.பதினேழாம் நூற்றாண்டு) இவ்வூரில் வாழ்ந்து வந்த மக்களது வாழ்வியல் பற்றியும் ஓரளவு குறிப்பிடுகின்றது.

மேலும் இம்மக்களால் பத்தினித் தெய்வமாகவும் கண்ணகை அம்மனாகவும் கண்ணகி போற்றப்பட்டு வந்ததையும் இந்நூல் குறிப்பிடுகின்றது. கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டளவில் இவ்வூரில் கண்ணகி வழிபாடு உன்னத நிலையிலிருந்த காலத்தில் இங்கு தோன்றிய கண்ணகி வழிபாட்டு இலக்கியங் களில் 'தம்பிலுவில் கண்ணகி அம்மன் பள்ளு' குறிப்பிடத்தக்கதாகும். இதன் வாயிலாக கண்ணகி வழிபாட்டின் ஒரு அங்கமான கொம்பு விளையாடலும்

அக்காலத்தில் இங்கு சிறப்புற்றிருந்ததை அறிய முடிகின்றது.[1] இக்கிராமிய இலக்கியமானது அக்காலத்தில் இவ்வூருடன் நெருங்கிய உறவினைக் கொண்டிருந்த கண்டி மன்னனான ஸ்ரீ வீரநரேந்திரசிங்கனையும் (கி.பி.1706-1739) புகழ்ந்துரைக்கத் தவறவில்லை.

இதனை உருவாக்கிய இவ்வூரைச் சேர்ந்த புலவர் தனது வழிபாட்டுக் குரியதெய்வமான சித்திரவேலாயுதரையும் (திரைகடல் சூழ்தென் திருக்கோவில்) போற்றுகின்றார். இதனைத்தொடர்ந்து 1950ம் ஆண்டுவரையுள்ள காலப் பகுதியில் (1735 - 1950) இவ்வூரில் ஏராளமான கண்ணகி வழிபாட்டு இலக்கி யங்கள் உருவாகியுள்ளன என்பதை அறிய முடிகின்றது. இவற்றில் கொம்பு விளையாட்டுக் காலங்களில் அவ்வப்போது இவ்வூர் புலவர்கள் பாடிய பாடல்களும் அடங்கும். அக்கால கட்டத்தில் இவ்வூரில் தோன்றிய கண்ணகி வழிபாட்டு இலக்கியங்களில் சிலவற்றை ஏட்டுச்சுவடிகளாக இன்று காணமுடி கின்றது. மேலும் வாய்மொழியாக நிலவி வந்த சில வாய்மொழி இலக்கியங்கள் இன்று மறைந்து வருகின்றதெனலாம்.

ஏட்டுச் சுவடிகளாக இன்று காணக்கிடைக்கும் அக்காலத்தைச் சேர்ந்த கண்ணகி வழிபாட்டு இலங்கியங்கள் சிலவற்றைக் கடந்த காலத்தில் வாழ்ந்து வந்த இவ்வூரைச்சேர்ந்த சான்றோர் சிலர் நன்கு ஆராய்ந்து பிரதி பண்ணிவைத்துள்ளனர். இவற்றில் இவ்வூரைச்சேர்ந்த புலவரொருவரால் உருவாக்கப்பட்ட 'சீர் உற்ற தம்பிலுவில் நகர் வாழ் எங்கள் செல்வியாரும் கண்ணகை... என்று தொடங்கும் அம்மன் கும்மி என்ற இலக்கிய வடிவம் குறிப்பிடத்தக்கது. இலக்கியச் சுவையும் கற்பனை வளமும் நிரம்பப் பெற்ற இப்பக்தி இலக்கியமானது இவ்வூர் மக்களிடையே அக்காலத்தில் கண்ணகி வழிபாடு பெற்றிருந்த செல்வாக்கைத் தெளிவுறுத்துகின்றது.

இக்கிராமிய இலக்கியம் தெய்வத் திருமகளான கண்ணகியை மாது பங்காளன் சிவனுடன் நின்று வாதாடும் காளிமனோன்மணியாகச் சித்தரிப்ப தையும் நோக்கலாம். தாது உள்ள சருகுக்கு உயிர் கொடுக்கும் தையலே கண்ணகைத் தாயாரே என்று கூறும் புலவர் கண்ணகை அம்மனின் வடிவமாக

1. இப்பள்ளுப் பாடல்கள் குறிப்பாக அக்காலத்தில் கொம்பு விளை யாட்டுக் காலங்களிலேயே பாடப்பட்டு வந்தன. இன்று உற்சவ காலங்களில் அம்மன் ஊர்வலம் இடம்பெறும் போது பாடப்பட்டு வருகின்றன.

பத்திரம் என்ற வேப்பிலையைக் காணுகின்றார். இவற்றின் வாயிலாக அக்காலத்தில் இவ்வூரில் வாழ்ந்து வந்த பழந்தமிழரிடையே சக்தி மிக்கதொரு பெண்தெய்வமாகக் கண்ணகி விளங்கி வந்ததை அறியமுடிகின்றது.

இதற்குப் பிற்பட்ட காலத்தில் இவ்வூரில் தோன்றிய கண்ணகி வழிபாட்டு இலக்கியங்களில் பண்டிதர் திரு.த.குஞ்சித்தம்பி அவர்கள் இயற்றிய 'பஜனாமிர்தம்' புகழ்பெற்றதெனலாம். 1950 ம் ஆண்டளவில் உருவான இக்கிராமிய இலக்கியம் 1953ம் ஆண்டு அச்சில் வெளிவந்துள்ளதும் குறிப்பிடத் தக்கது. பருத்தித்துறை கலாநிதி யாந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்ட செழுமை மிக்க இப்பக்தி இலக்கியம் இக்கிராமத்தில் குடிகொண்டிருக்கும் கண்ணகை யம்மனைப் புகழ்ந்துரைக்கின்றது. மேலும் அக்காலத்தில் இவ்வூர் செல்வச் செழிப்புடன் விளங்கியிருந்ததையும் நெல்விளைச்சலுக்குப் பேர்போன இவ்வூரில் மாரிமழை தவறாது பொழியும் காலங்களில் குறைவேதுமின்றிச் செழித்திருந் ததையும் இதற்கான காரணம் கண்ணகியைக் குலதெய்வமாக இவ்வூர் மக்கள் வழிபட்டு வருவதேயாகும் என்றும்இந்த இலக்கியம் கூறுகின்றது.

பல்லவி

நீயினி யிரங்குதல் நீதி - அதிக்யாதி
பெற்ற ஆயி அபிராமி
சரணம்

மாரி நிகர்த்தவண் கை மாநாய்கன் கூவி
மகளேயென வழைக்க வளர்தருகியாதி
வாரிபுடை சூழ் புகார் மாநகர்க்கீடு
வருதம்பிலுவிற் கனுகூலி
புகழ்பாடி உனைச்சேவி, எனதாவி
ஆகுலஞ்சிறிதல்ல அருட்பிரகாசி...
('பஜனாமிர்தம்' பாடல் - பண்டிதர் குஞ்சித்தம்பி - 53)

இதனைத் தொடர்ந்து இவ்வூரில் காலத்துக்குக் காலம் கண்ணகி வழிபாட்டு இலக்கியங்கள் பல உருவாகி வந்துள்ளன. இவற்றில் சில வாய்மொழி இலக்கியங்களாகவும் சில கையெழுத்துப் பிரதிகளாகவும் உள்ளன. இவற்றில் கையெழுத்துப் பிரதிகளாக இன்று காணக்கிடைக்கும் ''தம்பிலுவில்

கண்ணகி அம்மன் பாமாலை (1967) ", ''அம்மன் ஊர்வலக்கும்மி(1968)" என்பன குறிப்பிடத்தக்கனவாகும். இவ்வூரைச் சேர்ந்த பெரியார் திரு.அ. கனபதிப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்) அவர்கள் எழுதிய இக்கிராமிய இலக்கியங்கள் அச்சில் வரவேண்டியவைகளாகும். அம்மன் ஆலய உற்சவ காலங்களில் அம்மன் ஊர்வலம் வரும் வேளைகளில் இன்று இவை பாடப்பட்டு வருகின்றன.

கலைகள் பற்றிக் குறிப்பிடுமிடத்து அக்காலத்தில் இவ்வூரில் செழித் திருந்த நாட்டுக்கூத்து,வசந்தன், கும்மி போன்ற பாரம்பரியக் கலைவடிவங்களும் பிற்காலத்தில் இங்கு அறிமுகமாகிப் புகழ்பெற்றிருந்த இசை நாடக வடிவமும் கண்ணகி வழிபாட்டுடன் இணைந்தே வளர்ச்சியடைந்து புகழ் பெற்றிருந்தன. கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டளவில் இவ்வூரில் அறிமுகமான கூத்துக் கலை பற்றி நோக்குமிடத்து கண்ணகி வழிபாட்டை ஆதாரமாகக் கொண்டே இக்கலை வளர்ச்சியுற்று வந்ததென்பதை அறியமுடிகின்றது. இவ்வூரில் ஆயிரத்தித் தொள்ளாயிரத்திப் பன்னிரெண்டுகளில் கூத்து உன்னத நிலையை எய்தியி ருந்தது.

இக்காலம் தொடக்கம் ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எண்பத்தி ஆறாம்(1986) ஆண்டுவரையும் இவ்வூரில் நாட்டுக்கூத்து நிலவியிருந்தது.இக் கால கட்டத்தில் (1912-1986) இவ்வூரில் பெரும்பாலும் கண்ணகி வழிபாட்டுடன் இணைந்தே இக்கலை செழித்திருந்ததெனலாம். கண்ணகை அம்மன் குளிர்த்தி கொம்புவிளையாடல் போன்ற நிகழ்வுகளில் நாட்டுக்கூத்து முக்கிய இடத்தினைப் பெற்றிருந்ததை இதற்குச் சான்றாகும். ஆயிரத்தித் தொளாயிரத்தி ஐம்பதுக்குப் பிற்பட்ட காலத்தில் சித்திரை போன்ற பண்டிகைக் காலங்களிலும் கூத்துக்கள் ஆடப்பட்டு வந்துள்ளன.[2]

ஆயினும், கண்ணகை அம்மன் வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டே கூத்துக்கள் பயிற்றுவிக்கப்பட்டு அரங்கேற்றப்பட்டு வந்தன எனலாம். சில கூத்துக்கள் அம்மனுக்கு நேர்த்திக் கடன் நிறைவேற்ற வேண்டியும் பயிற்றுவிக்கப்பட்டு அரங்கேற்றப்பட்டன. இவ்வாறு இவ்வூர் மக்களது வாழ்க்கை

---

2. திருக்கோவில் பிரதேசத்தில் நாட்டுக்கூத்துக்கலை – கட்டுரை, தினகரன் வாரமலர் 27.10.1996– நா.நவநாயகமூர்த்தி

யுடன் ஒன்றிணைந்ததாகக் கண்ணகி வழிபாடும் கூத்தும் அக்காலத்தில் இருந்து வந்தன எனலாம்.[3]

தமிழுக்குக் கிடைத்த கலை வடிவங்களுள் இசை நாடக வடிவம் தனித்துவமானது. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த இக்கலை வடிவம் 1928, 29 களில் தம்பிலுவில் கிராமத்திலும் அறிமுகமானது. இதற்கு முந்திய காலத்தில் நாடக வடிவமாக இவ்வூரில் மிளிர்ந்து வந்தது. கூத்தாகும். 1928, 29 களில் தென்னிந்தியாவைச் சேர்ந்த திரு. வேல்நாயக்கர் என்பவரது நாடகக்குழு இவ்வூரில் தங்கியிருந்து இசைநாடகங்களை மேடையேற்றியதைத் தொடர்ந்து இவ்வூர் மக்களுக்கும் இக்கலைமீது ஆர்வம் ஏற்படலாயிற்று.[4] இவ்வூரைச் சேர்ந்த திரு.உவில்லியம்பிள்ளை, பண்டிதர் திரு.த.குஞ்சித்தம்பி ஆகியோர் 1930 - 1937 வரையுள்ள காலப்பகுதியில் பல இசை நாடகங்களை இயற்றித் தயாரித்து மேடையேற்றியுள்ளனர்.

1938ல் இவ்வூரைச் சேர்ந்த திரு.க.நாகமணி, திரு.க.கந்தக்குட்டி, திரு.வே.சாமித்தம்பி, திரு.பெ.இராசையா ஆகியோர் ஒன்று சேர்ந்து திருக் கோவில் கிராமத்தைச் சேர்ந்த திரு.சி.கணபதிப்பிள்ளை (சங்கீத பூஷணம்) அவர்களது தலைமையில் 'ஸ்ரீபால கணேசானந்த சபா' என்ற பெயரில் நாடக மன்றம் ஒன்றைத் துவக்கினர். அதே ஆண்டில் (1938) அம்மன் குளிர்த்தியின் போது 'பாமாவிஜயம்' என்ற இவர்களது முதல் நாடகம் மேடை யேறிப் புகழ்பெற்றது. இதனைத் தொடர்ந்து 1959ம் ஆண்டு வரையும் ஏராளமான இசைநாடகங்களை இம்மன்றம் மேடையேற்றி வந்துள்ளது. இவற்றின் கதை, வசனம், பாடல்கள் என்பனவற்றை திரு.சி.கணபதிப்பிள்ளையவர்கள் எழுதியிருந் தார். அத்துடன் இயக்குனராகவும் அவரே பணியாற்றியிருந்தார் என்பதை அறிய முடிகின்றது.

---

3. திருக்கோவில் பிரதேசத்திலி நாட்டுக் கூத்து – கட்டுரை – நா.நவநாயகமூர்த்தி, தினகரன் வாரமலர் – 12.01.97

4. 1930க்கு முன்னர் பி.எல்.வேல்நாயக்கர் என்பவரது நாடக்கக் குழு தம்பிலுவிலில் பல இசைநாடங்களை மேடையேற்றியுள்ளது. 1940ல் திரு.க.கருணாலயபகவதர், திரு.பகவதிராஜ், திரு.எஸ்.வி.சுப்பையா, திரு.பி.எல்.வேல்நாயக்கர், அனந்த நாராயண ஐயர், திரு.கிருஷ்ணமூர்த்தி இங்கு இசைநாடகங்கள் பலவற்றை மேடையேற்றியுள்ளனர். (இசைநாடக வரலாறு–கட்டுரை,காரைகந்தரம்பிள்ளை – தமிழ்நாட்டார் வழக்காற்றியல் – பதிப்பாசிரியர். திரு.க.சண்முகலிங்கம். பக்: 309– 327)

இந்நாடக மன்றத்தைச் சேர்ந்த திரு.க.பெரியதம்பி, திரு.க.நாகமணி, திரு.வி.செல்லையா, திரு.பெ.இராசையா, திரு.வே.சாமித்தம்பி, திரு.ச.பொன்னம் பலம்,திரு.வி.வயிரமுத்து, திரு.ஐ.புண்ணிமூர்த்தி, திரு.செ.தில்லைநாயகம், திரு .மா.கந்தக்குட்டி ஆகியோர் முக்கிய நடிகர்களாவர்.[5] அக்காலத்தில் கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு அருகாமையில் அமைந்திருந்த 'ஸ்ரீபா கணேசானந்த சபா' அம்மன் குளிர்த்தி, கொம்பு விளையாடல் போன்ற கண்ணகி வழிபாட்டுக் காலங்களிலேயே இசைநாடகங்களை மேடையேற்றி வந்தது எனலாம். ஆதலால் இக்கலைவடிவமும் கண்ணகி வழிபாட்டைத் துணைக்கொண்டே அக்காலத்தில் இவ்வூரில் செழித்திருந்ததென்பது தெளிவு.

அக்காலத்தில் கண்ணகி வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு இவ்வூரில் கட்டிடம், சிற்பம், ஓவியம் ஆகிய கலைகளும் வளர்ச்சியடைந்து வந்தன. திராவிடக் கட்டிடக் கலையைப் பின்பற்றி ஏடகம், தேர், வாயில் தோரணம் என்பன வடிவமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு வந்தன. இவற்றில் இணைக்கப்பட்டிருந்த யாழி, குதிரை, புலி, ஆஞ்சநேயர், போன்ற உருவங்கள் சிற்பக்கலைக்குச் சான்றுகளாகவிருந்தன. இதேபோன்று ஏடகம், தேர், வாயில் தோரணம் என்பனவற்றில் வரையப்பட்டிருந்த ஓவியங்களும் பழந்தமிழரது ஓவியக் கலையைப் பிரதிபலிப்பனவாக அமைந்திருந்ததெனலாம்.

அக்காலத்தில் ஏடகங்கள், தேர்கள், தோரணங்கள் என்பனவற்றை வடிவமைத்து நிர்மாணித்துவந்தவர்களில் இவ்வூரைச்சேர்ந்த திரு.மா.கணபதிப் பிள்ளை (ஓடாவியார்) , திரு.த.குமரப்பெருமாள், திரு.கு.தம்பிமுத்து, திரு.சி. வேலுப்பிள்ளை, திரு.வி.நவரெத்தினம், திரு.வ.வேலாச்சிப்போடி, திரு.இளைய தம்பி, திரு.பெ.சங்கமன், திரு.பெ.நாகமணி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர் இதேபோன்று திரு.க.ஞானசூரியம், திரு.கிருஷ்ணபிள்ளை (டெயிலர்), திரு.சி.வை. கோணாமலை, திரு.வே.மகேந்திரன் ஆகியோர் சிற்பம், ஓவியம் ஆகிய கலைகளிலும் சோடனை புரிவதிலும் சிறந்து விளங்கினர்.[6]

---

5. திருகோவில் நாடகக்கலையின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் – கடடுரை – நாநவநாயகமூர்த்தி – தினகரன் வாரமலர் – 28.07.1996

6. தகவல் திரு.பூ.குகதாஸ் அவர்கள், தம்பிலுவில்.

வரலாற்றுப்பின்னணி

இலங்கை வரலாற்றில் மட்டக்களப்பு என்று குறிப்பிடும் பொழுது வெருகல் தொடக்கம் கூமுனை வரையும் பரந்திருந்த பழைய மட்டக்களப்பையே அது குறிப்பதாகும். இப்பழைய மட்டக்களப்பையே (அம்பாரை, மட்டக்களப்பு மாவட்டங்கள்) மரபு இலக்கியங்கள், செப்பேடுகள், பட்டயங்கள் என்பன மட்டக்களப்பு தேசம் என்று குறிப்பிடுகின்றன. பண்டைக் காலம் தொடக்கம் தமிழும் சைவமும் சிறப்புடன் விளங்கி வரும் இப்பிரதேசத்தை வித்துவான் பண்டிதர் வி.சி.கந்தையா அவர்கள் மட்டக்களப்புத் தமிழகம் என்று குறிப்பிடு கின்றார்.

மட்டக்களப்பின் பண்டைய வரலாற்றினை அறிவதற்குப் போதிய சான்றுகள் இல்லையென்றே கூறலாம். ஆயினும் மட்டக்களப்பு மான்மியம் ஏட்டுச்சுவடி, வீரமுனைச் செப்பேடு, திருக்கோவில் செப்பேடு, நாடுகாடு பரவணிக் கல்வெட்டு என்பனவற்றின் வாயிலாகவும் சம்மாந்துறை, சாகாமம், சங்கமன் கண்டி ஆகிய இடங்களில் காணப்படும் பொறிப்புக்கள் (கல்வெட்டுக்கள்) மூலமாகவும் ஓரளவு அறியமுடிகின்றது. மேலும் தாந்தாமலை தொடக்கம் உகந்தை வரையுள்ள இடங்களில் காணப்படும் தொல்லியல் சான்றுகள் மட்டக்களப்பின் பண்டைய வரலாற்றைத் தெளிவுறுத்தும் வரலாற்றுச் சின்னங் களாக விளங்குகின்றன.

கிழக்கிலங்கையின் தென்பகுதியான மட்டக்களப்பு நெடுங்காலந் தொடக்கம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் வரையும் தனியானதொரு அரசியல் பிரிவாகவே இருந்து வந்துள்ளது. இதனை வரலாற்றாய்வுகள் உறுதி செய் கின்றன. மட்டக்களப்பை ஆட்சிபுரிந்து வந்த மன்னர்கள், சிற்றரசர்கள் என்போர் சுதந்திரமுள்ள அரசர்களாகவே இப்பிரதேசத்தை ஆட்சி புரிந்து வந்தனர். இவர்கள் சில காலங்களில் சிங்கள மன்னர்களின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்த போதும் சுதந்திரமுள்ள அரசர்களாகவே செயற்பட்டு வந்தனர். அந்நியர்களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரது ஆட்சிக் காலங்களிலும் இந்நிலையே நிலைத்திருந்ததென்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

பண்டைக்காலத்தில் தமிழியல் செல்வாக்கும் இந்து சமயச் செல்வாக்கும் செழித்திருந்த மட்டக்களப்பில் கந்தப்புராணக் கலாசாரமும் நிலவியிருந்தது. இத்துணை சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டிருந்த பண்டைய மட்டக்களப்பில் பழந்தமிழர் நாகரிகம், கலாசாரம், பண்பாடு என்பன செழித்திருந்த இடமாகத் ''திருக்கோவில் தம்பிலுவில்'' பிரதேசம் விளங்கியிருந்தது. இதனை வரலாற்றாய்வுகள், தொல்லியல் சான்றுகள் என்பன தெளிவுறுத்துகின்றன. ''திருக்கோவில் தம்பிலுவில்'' பிரதேசம் என்று இங்கு குறிப்பிடப்படுவது இன்றைய திருக்கோவில் செயலகப் பிரிவையே குறிப்பதாகும்.

பண்டைய மட்டக்களப்பு வரலாற்றில் 'திருக்கோவில் தம்பிலுவில்'' பிரதேசம் தனியானதொரு நிர்வாகப் பிரிவாகவே இருந்து வந்துள்ளது. இப்பிரதேசத்தைச் சேர்ந்த சங்கமன்கண்டி, வில்காமம், கஞ்சிகுடிஆறு, றூபஸ், சாகாமம் ஆகிய இடங்கள், இலங்கை வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றிருந்ததும் வரலாற்றுண்மையாகும். இலங்கையின் வரலாறு விஜயன் காலத்திலிருந்து (கி.மு.5ம் நூற்றாண்டு) ஆரம்பமாகின்றது என்று கொள்ளுமிடத்து இதற்குமுந்திய காலத்திலும் விஜயன் காலத்திலும் 'திருக்கோவில் தம்பிலுவில்' பிரதேசத்தில் வாழ்ந்து வந்தவர்கள் நாகர் என்ற ஆதித்திராவிடர்களே யாவர். இதனைத் தொல்லியல் சான்றுகள் உறுதிசெய்கின்றன.

இலங்கையில் பெருங்கற் கலாசாரம் நிலவியிருந்த இக்காலத்தில் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன்னர் இப்பிரதேசத்தில் நாகர் குடியினர் நாகரிகச் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர். இதனை சங்கமன் கண்டி சாகாமம் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட திராவிடவியல் சார்ந்த (சார்பான) பெருங்கற் பண்பாட்டுச் சின்னங்கள் தெளிவுறுத்துகின்றன. இலங்கையில் பெருங்கற் கலாசாரத்தைத் தோற்றுவித்தவர்கள் ஆதித் திராவிடரான நாகர், இயக்கர் குடியினராவர். இலங்கையில் பெருங்கற் கலாசாரம் கி.மு.1000 ஆண்டளவில் தோற்றம் பெற்றது[1] என்பதை அறிய முடிகின்றது.

கி.மு.1000 - கி.மு.600 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 'திருக்கோவில் தம்பிலுவில்' பிரதேசம் 'நாகர்முனை' என்ற பெயரினைப் பெற்றிருந்தது.[2] இப்பிரதேசத்தை நாகர் குல முதல்வர்கள் பரிபாலித்து வந்தனர்.

1. பண்டைய தமிழகம் – பேராசிரியர் கலாநிதி சி.க.சிற்றம்பலம் – பதிப்பு 1991
2. மட்டக்களப்பு மான்மியம் – பதிப்பாசிரியர் எப்.எக்ஸ்.நடராசா. பக்.25 – பதிப்பு 1965

இவர்களது இராசதானியாகச் சங்கமன்கண்டி விளங்கியிருந்தது.[3] கி.மு 7ம் 6ம் நூற்றாண்டுகளில் நாகர்முனையில் வாழ்ந்து வந்த நாகரிடையே வேல் வழிபாடு அறிமுகமாகிச் சிறப்புற்றிருந்தது. இவ்வழிபாட்டை இங்கு தோற்று வித்தவர்கள் அக்காலத்தில் காடகாவிருந்த சித்திரவேலாயுதர் ஆலயத்தைச் சூழவுள்ள இடங்களில் வாழ்ந்து வந்த நாகர் இனத்தைச் சேர்ந்த வேடர்களாவர்.[4]

கி.மு.6ம் நூற்றாண்டவில் சங்கமன்கண்டியிலிருந்து நாகர்முனையை (திருக்கோவல் தம்பிலுவில் பிரதேசம்) ஆட்சிபுரிந்து வந்த நாகர்குலத்துச் சிற்றரசன் வேல் வழிபாட்டைச் சிறப்படையச் செய்தான். இவன் மண்ணாலும் மரத்தாலும் கொண்டு ஆலயமொன்றை நிர்மாணித்து வேலினைப் பிரதிஸ்டை செய்து வழிபாட்டுக்கு ஒழுங்கு செய்து வைத்தான். அன்று தொட்டு இவ்வழி பாட்டுத்தலம் (ஆலயம்) தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருந்த வர்களும் இலங்கையின் பூர்வீகக் குடியினரில் ஒருபிரிவினருமான நாகர் என்ற திராவிட இனத்தவரின் வழிபாட்டுத் தலமாகவிருந்து வந்தது.[5] இக்காலத்தில் உகந்தைப் பகுதியலும் நாகர் குடியினர் நாகரிகச் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர்[6].

இங்கு வாழ்ந்து வந்த நாகர்களுடன் 'நாகர்முனை'யில் வாழ்ந்து வந்த நாகர்குடியினர் நெருங்கிய உறவுகள் கொண்டிருந்தனர். இக்காலத்தில் உகந்தையிலும் வேல்வழிபாடு தோன்றி அங்கு வாழ்ந்து வந்த மக்களிடையே சிறப்புற்றிருந்தது. இதனை வரலாற்றாய்வுகள், தொல்லியல் சான்றுகள் என்பன உறுதி செய்கின்றன.[7] இவ்வாறு இலங்கையின் பூர்வீகக் குடியினரில் ஒரு

---

3. பண்டைத்தமிழர் பண்பாட்டுக் கோலங்கள் – பக்.10 நா.நவநாயகமூர்த்தி – பதிப்பு 1996
4. சோழ பாண்டியனின் கட்டிட சிற்பக்கலைகளைப் பிரதிபலிக்கும் சித்திரவேலாயுதர் திருக்கோவில் –கட்டுரை, தினகரன் வாரமலர் 13.8.1995 – நா.நவநாயகமூர்த்தி
5. பண்டைத்தமிழ் மன்னர்கள் போற்றிய ஸ்ரீ சித்திரவேலாயுதன் உறையும் திருக்கோவில் – கட்டுரை, தினகரன் வாரமலர் 03.8.1997– நா.நவநாயகமூர்த்தி.
6. இலங்கையில் வாழ்ந்த நாகர்கள் திராவிடர் நாகரிகச்சிறப்புடையவர்கள். இவர்கள் ஒழுங்கான அரசியல் அமைப்பைக் கொண்டிருந்தனர். அத்துடன் தங்களைத் தாங்களே ஆட்சிபுரிந்தார்கள். (என்சன்ற் சிலோன் – பக்.14, 15 திரு.எச். பார்க்கர்)
7. மட்டக்களப்பில் பெருங்கற்காலசாரம் நிலவியிருந்த இடங்களில் உகந்தையும் அடங்கும். பெருங்கற்கால ஈமத்தாழிகள் உகந்தையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. (மட்டக்களப்பு தொல்லியல் தடயங்கள் கட்டுரை. க.தங்கேஸ்வரி, பி.ஏ. தொல்லியல் சிறப்பு – தேனகம் முத்தமிழ் சிறப்புமலர் – 1997)

பிரிவினரான நாகர் என்ற திராவிட இனத்தவரின் அரசியல் செல்வாக்கு உகந்தையிலும் நாகர் முனையிலும் (திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசம்) செழித்திருந்த காலத்திலேயே கி.மு.5ம் நூற்றாண்டளவில் (கி.மு.483) விஜயன் இலங்கையில் காலடி எடுத்து வைத்தான்.

விஜயன் பாண்டிய நாட்டிலிருந்து (மதுரை) தனது அரசியாகப் பாண்டிய இளவரசி ஒருத்தியை வரவழைத்து அவளை மணந்து இலங்கையின் மன்னனாக முடிசூடிக்கொண்டான்.[8] இவன் தம்பபன்னியில் அரசுபுரிந்த காலத்திலும் அதற்குப் பின்னரும் நாகர்முனையில் (திருக்கோவல் தம்பிலுவில் பிரதேசம்) நாகர் குடியினரின் அரசியல் செல்வாக்குச் செழித்திருந்தது. இப் பிரதேசத்தை சங்கமன்கண்டியிலிருந்து நாகர்குலத்துச் சிற்றரசனே ஆட்சிபுரிந்து வந்தான். கி.மு.4ம் நூற்றாண்டு வரையும் இந்நிலை நீடித்திருந்ததெனலாம்.

கி.மு. நாலாம் நூற்றாண்டளவில் உறுகுணையில் பாண்டியர் குடி யேற்றங்கள் நிகழ்ந்தன. தமிழரான இவர்கள் திருக்கோவில் தொடக்கம், அம்பாந்தோட்டை, மொனராகலை, அம்பாரையை உள்ளடக்கிய மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் குடியேறி வாழ்ந்து வந்ததுடன் அரசியலிலும் செல் வாக்குப் பெற்றிருந்தனர்.[9] கி.மு.3ம் நூற்றாண்டளவில் உறுகுணைில் இவர்களது அரசியல் செல்வாக்கும் திராவிட நாகரிகமும் உன்னத நிலையிலிருந்தன எனலாம். குறிப்பாக இக்காலத்தில் உறுகுணையின் தென் கரையில் மாணிக்க கங்கைக் கரையிலும் வடபகுதியில் பட்டிப்பளை (கல்லோயா) ஆற்றின் கரை யிலும் திராவிட நாகரிகம் செழித்திருந்தது.

இக்காலத்தில் (கி.மு.3ம்நூற்றாண்டு) அம்பாந்தோட்டை மாவட்டமும் மட்டக்களப்பும் (அம்பாரையை உள்ளடக்கிய) இணைந்து ஒரு பிரதேசமாக விருந்தது. இப்பெரும் பிரதேசத்தைப் பாண்டிய குலத்துத் தமிழ் அரசர்கள் ஆட்சிபுரிந்து வந்தனர். இத்தமிழ் அரசர்களில் மூத்தோர் வம்சம் கதிர்காமத்தி லிருந்தும் இளையோர் வம்சம் சந்தனகாமத்திலிருந்தும் ஆட்சிபுரிந்துவந்தனர்[10].

8. மாகாவம்சம் – அதிகாரம் VII வரி 49,50 பக். 59 வில்லியம் கைகர்(மறு) பதிப்பு–1986
9. பண்டைய ஈழத்தமிழர் – பக்.43 நா.நவநாயகமூர்த்தி – பதிப்பு 1998
10.மகாவம்சத்தில் சத்திரியர்கள் என்று சித்திரிக்கப்பட்டுள்ள இவர்கள் கூட்டாச்சி செய்தனர் என்பதற்கான கல்வெட்டுச் சான்றுகள் உண்டு. தமிழர் சமய வரலாறு பக்.224 – 225. கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை –1980 தமிழர் வரலாறும் இலங்கை இடப் பெயர் ஆய்வும் பக்.83 கதிர். தணிகாசலம்இத்தமிழ் மன்னர்கள் கதிர்காமம் , சாகாமம் (தம்பிலுவில்) சந்தணகாமம் (கல்லோயா) ஆகிய இடங்களிலிருந்து உறுகுணையை ஆட்சிபுரிந்தனர் என்பதே தெளிவான குறிப்பாகும்.

இந்துக்களான இத்தமிழ் மன்னர்கள் அனுரதபுரி அரசுக்குக் கட்டுப்படாத சுதந்திர அரசர்களாகவே உறுகுணையை ஆட்சிபுரிந்து வந்தனர்.[11] இவர்களை மகாவம்சம் கதிர்காமச்சந்தணகாமத்துச் சத்திரியர் என்று குறிப்பிடுகின்றது.

இத்தமிழ் அரசர்களில் சந்தணகாமத்துத் தமிழ் அரசர்கள் ஆட்சி மட்டக்களப்பில் (அம்பாரை, மட்டக்களப்பு மாவட்டங்கள்) நிலைபெற்றிருந்தது.[12] இவர்களில் ஒருவன் சாகாமத்திலிருந்து (தம்பிலுவில் மேற்கு) திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தை ஆட்சிபுரிந்து வந்தான். இதனை தம்பிலுவில் சாகாமம் என்னுமிடத்திலுள்ள 'மொட்டையாகல்லு'பிராமிக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. மேலும் கதிர்காமத்து அரசர்களின் மூன்று தலைமுறை ஆட்சி இங்கு நடந்த தையும் கதிர்காமத்து அரசர்களின் இளையோனாகிய 'மகாநாகாவின்' ஆட்சி மட்டக்களப்பில் பரந்திருந்ததையும் இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது.[13] இக்காலத்தில் இந்துக்களான சந்தணகாமத்துத் தமிழ் அரசர்களால் திருக கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம் ஆதரிக்கப்பட்டு வந்தது.[14] இது வரலாற் றுண்மையாகும்.

இக்காலத்தில் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தின் மேற்குப் பகுதியான சங்கமன்கண்டி, வில்காமம், கஞ்சிகுடிஆறு, றூபஸ், சாகாமம் ஆகிய இடங்களிலேயே மக்கள் பெருமளவில் வாழ்ந்து வந்தனர். கிழக்குப் பகுதியிலுள்ள இடங்கள் பெரும்பாலும் காடாகவேயிருந்து வந்தன எனலாம். திருக்கோவில் துறைமுகம் பிரபல்யம் பெற்றிருந்தது. இத்துறைமுகத்தினூடாக வர்த்தகம்,போக்குவரத்து என்பனவற்றில் சந்தணகாமத்துத் தமிழ் அரசர் ஈடுபட்டு வந்தனர் என்பதையும் அறியமுடிகின்றது. இவ்வாறு தமிழ் மன்னர்களது ஆட்சியும் இந்துசமயச் செல்வாக்கும், திராவிட நாகரிகமும் உன்னத நிலை யிலிருந்த காலத்திலேயே 'திருக்கோவில் தம்பிலுவில்' பிரதேசத்தில் வாழ்ந்து வந்த மக்களிடையே (நாகர், இயக்கர், பாண்டியர்) பௌத்தம் அறிமுகமானது.

தேவநம்பியதீசன் காலத்தில் (கி.மு247 - 207) அனுரதபுரியில்

---

11. பண்டைய ஈழம் பாகம் – I பக்.74.வே.நடராசா – சேது நூலகம், கரவெட்டி.
12. ஈழத்து இந்து சமய வரலாறு பாகம் – I பக்.110 பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் – 1996
13. ஈழத்து இந்து சமய் வரலாறு பாகம் – I பக்கம் 125 போராசிரியர் சி.க.சிற்றம்பலம்–1996
14. பண்டைய ஈழத்தமிழர் – பக்.47 நா.நவநாயகமூர்த்தி
இவர்களது காலத்தில் (கி.மு.3ம்நூற்.) முருகவழிபாடு சிறப்புடன் விளங்கியது. இதனை இவர்களது காலத்துப் பிராமிச் சாசனங்கள் உறுதிசெய்கின்றன.

நடைபெற்ற போதிமர நடுகை விழாவில் அவனது அழைப்பை ஏற்று உறுகுணை யில் ஆட்சிபுரிந்த கதிர்காமத்து அரசர்களும் சந்தணகாமத்து அரசர்களும் கலந்து கொண்டனர். இவ்வாறு அரசமரநாட்டு விழாவில் கலந்து கொண்ட இவர்கள் அரசமரக்கன்றுகளைப் பெற்று வந்து தங்களது ஆட்சிப் பகுதிகளில் நட்டுப் பௌத்தம் பரவுவதற்கு ஆதரவளித்தனர்.[15] இதன் காரணமாக உறுகுணையில் வாழ்ந்து வந்த தமிழரிடையே (நாகர், பாண்டியர்) பௌத்தம் பரவியது. திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் பௌத்த தமிழர்கள் பலர் உருவாகினர். ஆதலால் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் (திருக் கோவில் செயலகப்பிரிவு) வாழ்ந்து வந்த தமிழரிடையே பௌத்தம் அறிமுக மாகிப் பரவுவதற்குக் காரணகர்த்தாக்களாக விருந்தவர்கள் இப்பிரதேசத்தை ஆட்சிபுரிந்து வந்த தமிழ் அரசர்கள் ஆவர் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு பௌத்தம் பரவிக்கொண்டிருந்த அக் காலத்தில் அனுரதபுரி யில் நடந்த சம்பவம் ஒன்றின் காரணமாகத் தண்டனைக்குப் பயந்த தேவ நம்பியதீசனின் தம்பி மகாநாகன் மனைவி மக்களுடன் உறுகுணைக்குத் தப்பியோடிவந்து கதிர்காமத்து அரசர்களிடம் தஞ்சமடைந்தான். பின்னர் மகாநாகன் கதிர்காமத்து அரசர்களின் துணையுடன் மாகம (மகாகமம்) நகரத்தை நிர்மாணித்து அங்கு அரசொன்றை அமைத்து உறுகுணையில் ஆட்சிபுரிந்து வந்தான். இதனைத் தொடர்ந்து கதிர்காமத்து அரசர்களுக்கும் மாகம ஆட்சி யாளருக்குமிடையில் நல்லுறவுகள் நிலவி வந்ததுடன் திருமணத் தொடர்பும் இருந்து வந்தது. இந்நிலையானது மகாநாகனின் மகனான யட்டலாயதீசனின் காலம் வரை நீடித்திருந்தது.

இதன் பின்னர் மன்னனான கோதபாயன் என்பவன் தமிழர்கள் மீது வெறுப்புணர்வு கொண்டவனாகவிருந்தான். இவன் அக்காலத்தில் உறுகுணை யில் நிலவியிருந்த தமிழ் அரசர்களது செல்வாக்கை முடிவுக்குக் கொண்டு வர நினைத்துப் பல முயற்சிகள் மேற்கொண்டு வந்தான். இறுதியில் அவனுக்கு வெற்றியும் கிடைத்தது. மகாநாகனின் பேரனான இவன் பத்துக் கதிர்காமத்து அரசர்களைக் கொலை செய்ததன் மூலமாக உறுகுணையில் தனது ஆட்சியைப் பலப்படுத்திக் கொண்டான்.16 ஆயினும் கதிர்காமப் பகுதியில் தமிழ் அரசர்களது செல்வாக்கு முற்றாக நீங்கவில்லை. அவர்களது ஆதிக்கம் ஓரளவு இருந்து வந்ததெனலாம்.

15. மகாவம்சம் – அத் XIX வரி:61,63 பக்.133 கைகர் பதிப்பு – 1986

இதே காலத்தில் இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் தமிழ் அரசர்களது ஆதிக்கமே தொடர்ந்து நிலவிவந்தது. பத்துத் தமிழ் அரசர்களில் மூத்தவனின் மகனான தர்மராஜா என்பவனின் மகன் மகாதீசன் என்பவன் இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் (உறுகுணையின் வடக்குக் கிழக்குப் பகுதியான அம்பாரை, மட்டக்களப்பு மாவட்டங்கள்) ஆதிக்கம் பெற்றிருந்தான்.17 இக்காலத்தில் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசம் இத்தமிழ் மன்னனின் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. சாகாமம் (தம்பிலுவில்) சந்தணகாமம் (கல்லோயா) ஆகிய இடங்களை மையமாகக்கொண்டு இப்பாண்டிய குலத்துத் தமிழ் மன்னன் ஆட்சிபுரிந்து வந்தான் என்பதை அறியமுடிகின்றது.

கி.மு.2ம் நூற்றாண்டளவில் சேனன், கூத்திகன் (கி.மு.177 - 155) என்ற இரு தமிழ் மன்னர்கள் அனுரதபுரியிலிருந்து இலங்கை முழுவதையும் இருபத்திரண்டு வருடங்கள் நல்லாட்சிபுரிந்துள்ளர். இதனை மகாவம்சம் (கைகர் பதிப்பு, பக்:142-143) குறிப்பிடுகின்றது. இக்காலத்தில் தமிழ் மன்னனான கூத்திகன் இன்றைய வீரமுனைக்கருகாமையில் மட்டக்களப்பு என்ற நகரத்தை நிர்மாணித்து அந்நகரினை இராஜதானியாகக் கொண்டு மட்டக்களப்பை (அம்பாரையை உள்ளடக்கியிருந்த மட்டக்களப்பு) ஆட்சிபுரிந்தான்.இவன் தனது ஆட்சிக் காலத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றியதாக அறியமுடிகின்றது. காணி நீர்ப்பாசனம் விவசாயம் என்பன இவற்றில் அடங்கும்.

மேலும் கூத்திகன் தனது ஆட்சிக் காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து கலிங்க குலத்துத் தமிழ்க் குடியினரை வரவழைத்து பல இடங்களிலும் அவர்களை குடியேற்றினான். பல புதிய கிராமங்கள் இவனால் உருவாக்கப் பட்டன.[18] இக்காலத்தில் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் தென்னிந்தியக் குடியேற்றங்கள் பல நிகழ்ந்தன. சங்கமன்கண்டி, கஞ்சிகுடிஆறு, சாகமம் ஆகிய இடங்களில் இவர்கள் குடியேறி வாழ்ந்து வந்தனர். கலிங்க குலத்துத் தமிழ்ச் சைவரான இம்மக்கள் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்த நாகர், பாண்டியர்

16. History of Ceylon - Page 60 .C.W.Nicholas and Paranavidana-1961
கோதபாயன் காலத்தில் கதிர்காமத்து ஆட்சியாளருக்கும் மாகம ஆட்சியாளருக்குமிடையில் நடந்த தகராறு பற்றியும் இதனால் கதிர்காமத்து ஆட்சியாளர் கொலையுண்டமைபற்றியும் போவத்தகல கல்வெட்டு கூறும். (பண்டைய ஈழம் , பாகம் ஐ – பக்.75 வே.க.நடசாரா)
17. ஈழத்தவர் வரலாறு – பக்.39 கலாநிதி க.குணராசா – 1996
18. மட்டக்களப்பு மான்மியம் – பக்.39 பதிப்பாசிரியர். எப்.எக்ஸ்.நடராசா – 1962

ஆகிய தமிழ் குடியினருடன் சேர்ந்து ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர். கூத்திகனது காலந்தொட்டு மட்டக்களப்புத் தனியானதொரு அரசியல் பிரிவாக விருந்து வந்தது. இப்பரந்த பெரும் பிரதேசத்தை கூத்தினால் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு நகரிலிருந்து (வீரமுனைக்கருகாமையில் அமைந்திருந்த) தமிழ் அரசர்கள் ஆட்சிபுரிந்து வந்தனர். இக்காலத்தில் மட்டக்களப்பில் (அம்பாரையை உள்ளடக்கியிருந்த மட்டக்களப்பு) பழந்தமிழர் நாகரிகம் நிலவியிருந்த பிரிவாகத் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசம் விளங்கியிருந்தது.

சேனன், கூத்திகன் ஆகிய தமிழ் அரசர்களிடமிருந்து அசேலன் (கி.மு.155-145) என்ற சிங்கள மன்னன் அனுரதபுரியைக் கைப்பற்றிப் பத்து வருடங்கள் ஆட்சிபுரிந்தான். இவனிடமிருந்து ஈழராஜா என்ற எல்லாளன் அனுரதபுரியைக் கைப்பற்றி நாப்பத்திநாலு வருடங்கள் ஆட்சிபுரிந்தான். தமிழ் மன்னனான இவனை நீதிதவறாத மன்னன் என்று மகாவம்சம் புகழ்ந்துரைக் கின்றது. இலங்கை முழுவதிலும் இவனது ஆட்சி (கி.மு.145-101) நிலவி யிருந்தது.19 இக்காலத்தில் மட்டக்களப்பில் தமிழரது அரசியல் செல்வாக்கு உன்னத நிலையிலிருந்தது தமிழ்ச் சைவனான எல்லாளனது சைவப்பணிகள் திருக்கோவில் தம்பிலுவில் வரை பரந்திருந்தன. அக்காலத்தில் மண்ணினாலும் மரத்தாலும் அமைந்திருந்த ஸ்ரீ சித்திரவேலாயுதர் ஆலயம் 'மனுமன்னன்' (மனுராசா) என்று இன்றும் இப்பிரதேச மக்களால் புகழ்ந்துரைக்கப்படும் எல்லா ளனால் சிறியதொரு கற்கோயிலாக நிர்மாணிக்கப்பட்டது. [20] இக்காலத்தில் தமிழரிடையே பௌத்தமும் இப்பிரதேசத்தில் நிலவியிருந்தது.[21]

---

19. Senavereatan, M.John, Dutugemunu - Shnha Publication - Colombo - 1946 . Page:2 கல்யாணி மாகம (உறுகுணை) ஆகிய இருதென்னிலங்கைச் சிற்றரசுகள் எல்லாளனின் ஆட்சியை ஏற்றிருந்தன. கல்யாணி இராசதானியின் மன்னன் களனித்தீசனும், மாகமை அரசன் சவந்தத்தீசனும் எல்லாளனின் மேலாதிக்கத்தை ஏற்றுத் திறை செலுத்தி வந்தனர். (ஈழத்தவர் வரலாறு பக்.39 கலாநிதி க.குணராசா –1996)

20. தென்கிழக்கு இலங்கையில் தமிழ் மன்னனின் நல்லாட்சி, மகாவம்சம் போற்றும் மனு மன்னன் எல்லாளன் – கட்டுரை வீரகேசரி வாரமலர். 28.9.1997. நா.நவநாயகமூர்த்தி

21. திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் தமிழ் அரசர்களால் பௌத்தம் அறிமுகப்படுத்தப் பட்டது. ஆயினும் இதன் வளர்ச்சிக்குப் பெரும் ஆதரவளித்து வந்தவர்கள் மாகமையில் ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்களான மகாநாகன், யட்டலதிஸ, கோதபாயன், கவந்தீசன் ஆகியோராவர். இம்மன்னர்களின் சமயப் பணி திருக்கோவில் தம்பிலுவில் வரை பரந்திருந்தது. (Kavantissa Found his Queen here- கட்டுரை - Noeyal Peiris - Daily News - 24.09.1984)

கி.மு.முதலாம் நூற்றாண்டளவில் துட்டகாமினியின் (கி.மு.101 -77) ஆட்சிக்காலத்தில் மட்டக்களப்பில் தமிழரது அரசியல் செல்வாக்கு நலிவுற்றி ருந்தது. இக்காலத்தில் துட்டகாமினியின் தம்பியான சதாதீசன் திகவாபியிலிருந்து மட்டக்களப்பை ஆட்சிபுரிந்து வந்தான். இவனுக்குக் கீழிருந்து தமிழ்ப் பிரதானிகள் குறுநிலமன்னர்களாக இப்பிரதேசத்தைப் பரிபாலித்து வந்தனர். இக்காலகட்டத்தில் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் தமிழரிடையே பௌத்தம் செல்வாக்குப் பெற்றிருந்ததுடன் பௌத்த சிங்களவர்களும் இங்கு குடியேறி நெற்செய்கையில் ஈடுபட்டு வந்தனர். இக்காலத்தில் 'சாகாமக்குளம்' சதாதீசனால் புனரமைக்கப்பட்டு விவசாயத்துக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இதனை வரலாற்றுச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

கி.மு.44ல் வட்டகாமினி என்பவனது ஆட்சிக்காலத்தில் அனுரதபுரியில் தமிழர் படையெடுப்பொன்று நிகழ்ந்தது. இதனை மேற்கொண்டவர்கள் ஏழு தமிழ் அரசர்கள் என்று மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இவர்கள் வட்டகாமினி யிடமிருந்து அனுரதபுரியைக் கைப்பற்றி இலங்கை முழுவதையும் தங்களது ஆட்சியின் கீழிருத்திப் பதினாலு வருடங்கள் ஆட்சிபுரிந்தனர். இவர்களது ஆட்சிக்காலத்தில் வட்டகாமினி இவர்களுக்குப் பயந்து ஒளித்து வாழ்ந்ததாக அறியமுடிகின்றது.22 சைவர்களான தமிழ் அரசர்கள் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் வாழ்ந்துவந்த மக்களுடன் நல்லுறவுகள் கொண்டிருந்தனர். இவர்களால் திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயத் திருப்பணியொன்று செய்யப்பட்டது. இதனை ஆலயப் பதிகம் ஒன்று குறிப்பிடுகின்றது.

சோரநாகன் (கி.மு.3- கி.பி.9) என்பவன் அனுரதபுரியை ஆட்சி புரிந்த காலத்தில் 23 மட்டக்களப்பில் தமிழரது செல்வாக்கு மீண்டும் செழிப் படையத் தொடங்கியது. இதற்குக் காரண கர்த்தாவாக விளங்கியவன் கலிங்க குலத்துத் தமிழ் அரசனான இரஞ்சலன் என்பவனாவான். இவன் கூத்திகனால் உருவாக்கப்பட்ட மட்டக்களப்பு நகரில் அரசொன்றை அமைத்து மட்டக்களப்புத் தமிழகத்தை ஆட்சிபுரிந்து வந்தான். சுதந்திரமுள்ள சிற்றரசனாக மட்டக்களப்பை (அம்பாரையை உள்ளடக்கிய மட்டக்களப்பு) ஆட்சிபுரிந்து வந்த இரஞ்சலன்

22. இலங்கையின் சுருக்கவரலாறு – பக்.19 .எச்.டபிள்யு. கொடிநின்றன்–1960

23. வர்த்த சாமினியின் மகனான இவனை கிளர்ச்சிக்காரன் என்றும் பதினெட்டு விகாரைகளை அழித்தவன் என்றும் மகாவம்சம் (அத்தி XXXIV வரி 11,12,13 பக்:239 கைகர் பதிப்பு –1986) கூறுகின்றது.

அனுரதபுரி மன்னனான சோரநாகனுடன் நெருங்கிய உறவினை கொண்டி ருந்தான். இவ்விருவரும் நெருங்கிய நண்பர்களாகவிருந்து வந்தனர்.[24]

இக்காலம் தொடக்கம் மட்டக்களப்பை ஆட்சிபுரிந்து வந்த அரசர்கள் இலங்கையில் ஆட்சிபுரிந்து வந்த சிங்கள மன்னர்களுடன் நெருங்கிய உறவினைக் கொண்டிருந்தனர் எனலாம். இவர்கள் சில காலங்களில் சிங்கள மன்னரது மேலாதிக்கத்தை ஏற்றிருந்த போதிலும் சுதந்திமுள்ள சிற்றரசர் களாகவே மட்டக்களப்பை ஆட்சிபுரிந்து வந்துள்ளனர். இதனை வரலாற் றாய்வுகள் தெளிவுறுத்துகின்றன. இக்காலகட்ட மட்டக்களப்புத் தமிழக வரலாற்றில் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசம் முக்கியத்துவம் பெற்றிருந்ததும் வரலாற்றுண்மையாகும். கி.பி.1ம் நூற்றாண்டளவில் மட்டக்களப்புத் தமிழகத்தில் தமிழரது அரசியல் செல்வாக்கு உன்னத நிலையிலிருந்தது.

அத்துடன் தமிழர் நாகரிகமும் செழிப்புற்றிருந்த தெனலாம். தமிழகத்துக்கும் மட்டக்களப்புக்குமிடையில் இக்காலத்தில் நிலவியிருந்த நெருங்கிய சமூக, சமய, கலாசாரத் தொடர்புகள் இதற்குக் காரணிகளாக அமைந்தன. இக்காலத்தில் மட்டக்களப்பை 'பிரசன்னசித்து' என்ற மன்னன் ஆட்சிபுரிந்து வந்தான்.[25]

கி.பி.முதலாம் நூற்றாண்டளவில் பிரசன்னசித்து மட்டக்களப்பு நகரிலிருந்து (வீரமுனைக்கு அருகாமையில் அமைந்திருந்தது) மட்டக்களப்புத் தமிழகத்தை ஆட்சிபுரிந்து வந்த காலத்தில் சோழநாட்டு மன்னனான திருச் சோழன் மகள் 'தம்பதிநல்லாள்' என்பவள் தனது கணவனான கலிங்க இளவரசன் புவனேயகஜபாகுவுடன் தலயாத்திரையாக ஈழம் வந்திருந்தாள். இவர்கள் இருவரும் கோணேசப்பெருமானைத் தரிசித்துப் பின்னர் மட்டக்களப்பை வந்தடைந்து மன்னன் பிரசன்னசித்துவைச் சந்தித்து அவனது விருந்தினராகத் தங்கியிருந்தனர். இவ்வேளையில் பிரசன்னசித்து நாகர்முனையில் (திருக்கோ வில் தம்பிலுவில் பிரதேசம்) அமைந்திருந்த சித்திரவேலாயுதர் ஆலயத்தைப் புனரமைத்துக் தருமாறு புவனேயகஜபாகுவிடம் வேண்டுகோள் விடுத்தான்.

---

24. மட்டக்களப்பு மான்மியம் – பக்.22, 23 பதிப்பாசிரியர் எப்.எக்ஸ்.நடராசா பதிப்பு–1962

25. இரஞ்சலனும் சோரநாகனும் சமகாலத்து மன்னர்கள் எனக்கொள்ளுமிடத்து சோரநாகனின் ஆட்சிக்காலம் கி.மு.3 – கி.பி.9 வரை என மகாவம்சம் கூறும். இக்காலத்தில் மட்டக்களப்பை ஆட்சிபுரிந்த இரஞ்சலனுக்குப் பின் இவனது மகனான வாகூரன் நாற்பது வருடங்களும் ஆட்சிபுரிந்ததாக மட்– மான்மியம் (பக்.23,24) கூறுகின்றது. ஆதலால் பிரசன்னசித்து ஆட்சிக்கு வந்த காலம் (கி.பி.9+ 50+ 40= 99) கி.பி.99 ஆகும் என்று கொள்ளலாம்.

இவ்வேண்டுகோளினை ஏற்றுக்கொண்ட புவனேயகஜபாகு தனது மாமனாரான திருச்சோழனின் உதவியைப் பெற்றுச் சித்திரவேலாயுதர் ஆலயத் திருப்பணியைப் பூர்த்தி செய்தான். பின்னர் அந்தணரது ஆலோசனையின் படி கும்பாபிஷேகம் செய்து இவ்வாலயத்திற்கு திருக்கோவில் என்ற பெயரையும் இட்டு மட்டக்களப்பு மன்னன் பிரசன்ன சித்துவிடம் கையளித்தான். இதன் பின்னர் புவனேயகஜபாகு தம்பதிநல்லாள் ஆகிய இருவரும் மன்னன் பிரசன்ன சித்துவின் விருந்தினராகச் சிலகாலம் மட்டக்களப்பில் தங்கியிருந்தனர். இவ்வேளையில் தம்பதிநல்லாள் கர்ப்பவதியானாள். இதனையறிந்த பிரசன்ன சித்து உளம் மகிழ்ந்து தனது நாட்டின் தென்பகுதியை ஒரு அரசியல் பிரிவாக (இராச்சியம்) உருவாக்கி புவனேகஜபாகுவுக்குக் கையளித்தான். 'உன்னரசுகிரி' என்ற இப்புதிய அரசியல் பிரிவு மட்டக்களப்புத் தமிழ் அரசுக்கு ஆதரவாக இருந்து வந்தது.[26]

கி.பின் இரண்டாம் நூற்றாண்டளவில் மட்டக்களப்பு நகரிலிருந்து பிரசன்னசித்துவின் மகனான தாசகனும், உன்னரசு கிரியிலிருந்து புவனேயகஜ பாகுவின் மகனான மேகவண்ணனும் மட்டக்களப்பை (அம்பாரையை உள்ளடக்கிய மட்டக்களப்பு) ஆட்சிபுரிந்து வந்தனர். இக்காலத்தில் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தின் சமய, சமூக, பொருளாதார வளர்ச்சியில் இம்மன்னர்களிருவரும் அதிக அக்கறை கொண்டிருந்தனர் என்பதை அறியமுடிகின்றது. மேகவண்ணனால் சித்திரவேலாயுதர் ஆலயம் திருப்பணி செய்யப்பட்டு கும்பாபிஷேகமும் நடாத்தி வைக்கப்பட்டது.

இதன் பின்னர் இம்மன்னர்கள் இருவரும் சேர்ந்து இவ்வாலயப் பராமரிப்புக்காக நெற்காணிகள் பலவற்றை மானியமாக வழங்கியதுடன் இவற் றிற்கு நீர்ப்பாசன வசதிகளும் செய்து கொடுத்தனர்.[27]

---

26. இவ்வாட்சிப் பிரிவு உகந்தைக்கும் பாணமைக்குமிடைமிலுள்ள சன்னியாசி மலை என பண்டிதர் வி.சி.கந்தையா அவர்கள் கருதுகின்றார். இவ்வாட்சிப் பிரிவானது பாணமை தொடக்கம் கூமுனை வரை பரந்திருந்தது எனலாம். இதன் இராஜதானியாக குடும்பிமலை பகுதி விளங்கி மிருந்தது என்பதே ஆய்வுகள் கண்ட உண்மையாகும்.

27. இப்பணிகள் யாவும் சங்கமன் கண்டி தொடக்கம் சாகாமம் வரையுள்ள இடங்களில் (திருக்கோவில் தம்பிலுவில் மேற்கு மேற்கொள்ளப்பட்டன)மட்டக்களப்பு மான்மியம் பக்:27, 28 பதிப்பாசிரியர் எப்.எக்ஸ்.நடராசா – 1962

இம்மன்னர்களது காலத்தில் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் மேகவண்ணனால் மேலும் பல பணிகள் நிறைவேற்றி வைக்கப்பட்டன. சித்திர வேலாயுதர் ஆலயத்தில் அர்ச்சகர்களாகக் கடமை புரிவதற்காக ஸ்ரீ சைலம் நாட்டைச்சேர்ந்த மல்லிகார்ச்சுனம் என்னுமிடத்திலிருந்து வீரசைவக்குருமார் வரவழைக்கப்பட்டனர். இவர்களை 'தம்' பட்டர் என வாழ்த்தி இவர்களைக் குடியேற்றிய ஊருக்கு தம்பட்டர் ஊரெனப் பெயரும் இடப்பட்டது. மேலும் இவர்களது வழிபாட்டுக்காக மல்லிகார்ச்சுன புரத்திலிருந்து கணேச விக்கிரகம் ஒன்றும் பெறப்பட்டு இவ்வூரில் பிரதிஸ்டை செய்யப்பட்டது. [28] மேலும் மேகவண்ணன் தனது தாயாராகிய தம்பதிநல்லாள் பெயரில் வாவியொன்றையும் வெட்டுவித்து அவ்வாவிக்கு 'தம்பதிவில்' என்ற பெயரையும் இட்டான் என்பதை யும் அறிய முடிகின்றது. [29]

மேற்குறிப்பிட்ட செய்திகள் கி.பி.முதலாம் இரண்டாம் நூற்றாண்டு களில் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் தமிழரது அரசியல் செல்வாக்கு (ஆட்சி) நிலை பெற்றிருந்ததையும் இப்பிரதேசம் நாகரிகத்தில் மேம்பாடுற்று விளங்கியிருந்ததையும் தெளிவுறுத்துகின்றன. மேலும் இவற்றின் வாயிலாக தமிழகத்துக்கும் இப்பிரதேசத்துக்கு மிடையில் நெருங்கிய சமூக சமய கலாசார உறவுகள் இருந்து வந்ததையும் அறியமுடிகின்றது. கி.பி.முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகளில் தமிழகத்தின் செல்வாக்கு இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பரந்திருந்ததைத் தொல்லியல் சான்றுகளும் உறுதிசெய்கின்றன. இக்காலகட்டத்தில் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்திலும் இந்நிலையே நிலவியிருந்ததெனலாம்.

வரலாற்றாய்வுகள் மூலமாக நோக்குமிடத்து இக்கால கட்டத்தில் (கி.பி.1ம் 2ம் நூற்றாண்டு) திருக்கோவில் துறை பிரபல்யம் பெற்றிருந்ததையும் இத்துறையினூடாகத் தமிழகத்துக்கும் இப்பிரதேச்தைச் சேர்ந்த சங்கமன் கண்டி (கோமாரி உள்ளிட்ட) வில்காமம், கஞ்சிகுடிஆறு, சாகாமம் ஆகிய

---

28. இவ்வூர் இன்று தம்பட்டை என்ற பெயருடன் விளங்குகின்றது. இங்கு வாழ்ந்துவரும் வீரசைவக்குருமார் சங்கமர்கள் என அழைக்கப்படுகின்றனர்
.(தொல்லியல் சிந்தனைகள்– பக்.26,27 நா.நவநாயகமூர்த்திபதிப்பு–1995)

29. கிழக்கிலங்கைத் தமிழரின் பேச்சுவழக்கில் வில் என்பது பெரியகுளத்தையோ அல்லது நீர்த் தேக்கத்தையோ குறிக்கும் சொல்லாகும்.
(இலங்கை இடப்பெயர் ஆய்வு – 2 பக். 51 கலாநிதி இ.பாலசுந்தரம்

நாகரிகம் நிலவியிருந்த இடங்களுக்குமிடையில் போக்குவரத்து, வர்த்தகம் என்பன நடைபெற்று வந்ததையும் அறியமுடிகின்றது. கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கோவலன் சங்கமன்கண்டியுடன் வர்த்தகத் தொடர்பினை வைத்திருந்ததாக மரபுரையொன்று குறிப்பிடுகின்றது. கண்ணகியின் காற் சிலம்புக்கு கந்தப்பாணந்துறை (திருக்கோவில்துறை) யூடாகவே நாகமணி எடுத்துச் செல்லப்பட்டதாக 'கண்ணகி வழக்குரை' என்ற கிராம இலக்கியம் குறிப்பிடுகின்றது.[30]

மேலும் இக்காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்த தமிழரிடையே பௌத்த மதமும் நிலவியிருந்ததென்பதை அறிய முடிகின்றது. இதனை சங்கமன் கண்டி தொடக்கம் வடக்கே சாகாமம் வரையுள்ள (இப்பிரதேசத்தின் மேற்குப் பகுதி) இடங்களில் காணக்கிடைக்கும் தொல்லியல் சான்றுகள் தெளிவுறுத்து கின்றன. இவை தமிழரான இந்து பௌத்தமக்கள் அக்காலத்தில் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்ததை உறுதி செய்கின்றன. இதே காலத்தில் தமிழரிடையே பௌத்தம் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்ததையும் நோக்கலாம். சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களும் வரலாற்று நூல்களும் தொல்லியல் சான்றுகளும் இதனை உறுதி செய்கின்றன. இந்நிலையே திருக் கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் இக்காலகட்டத்தில் வாழ்ந்து வந்த தமிழ ரிடையே நிலவியிருந்தது.[31]

இக்காலம் தொடக்கம் (கி.பி2ம்நூற்றாண்டு) கி.பி.எட்டாம் நூற்றாண்டு வரையும் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் இந்நிலையே நிலைத்திருந்த தெனலாம். இக்காலத்தில் மட்டக்களப்புப் பிராந்தியமானது (அம்பாரையை உள்ளடக்கிய மட்டக்களப்பு) தனியானதொரு அரசியல் பிரிவாகவே இருந்து வந்தது. சுந்திரமுள்ள தமிழ்ச்சிற்றரசர்கள் இப்பிராந்தியத்தை ஆட்சிபுரிந்து வந்தனர்.32 இக்காலகட்டத்தில் (கி.பி.2ம் நூற்றாண்டு - கி.பி.8ம் நூற்றாண்டு)

30. தொல்லியல் சிந்தனைகள் – பக்:50 நாதவநாயகமூர்த்தி – பதிப்பு 1995
31. கிழக்கிலங்கையில் தமிழ்ப் பௌத்தர்கள் பண்டைக்காலத்தில் வாழ்ந்துள்ளனர்.
(திருகோணமலை மாவட்டத்திருத்தலங்கள் – பக்:325 திரு.இ.வடிவேல்)
இலங்கைத் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் பௌத்தர்களாக இருந்தமைபற்றி இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்ச் சாசனங்களில் குறிப்பிடத்தக்க ஒரு பகுதி தெளிவுறுத்துகின்றன.
(நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாடு நினைவு மலர் – கட்டுரைகள் இலங்கை தமிழ்ச் சாசன வழக்காறுகள் கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை)
32. இவர்கள் சிலவேளைகளில் பெயரளவில் சிங்கள மன்னரின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்த போதும் சுதந்திர மன்னர்களாகவே மட்டக்களப்பை ஆட்சிபுரிந்து வந்தனர்.

இலங்கையில் காலத்துக்குக் காலம் நிகழ்ந்து வந்த அரசியல் நெருக்கடிகளும் (அரசுரிமைப் போட்டிகள்) இவற்றின் பயனாக இலங்கை அரசியலில் அவ்வப் போது நிலவிவந்த தமிழரது (அரசியல்) செல்வாக்கும் (பல்லவர், பாண்டியர் உட்பட) இதற்குச் சாதகமாக அமைந்தன எனலாம். இவை மறுக்கமுடியாத வரலாற்றுண்மைகளாகும். வரலாற்றாய்வுகள் இதனை தெளிவுறுத்துகின்றன.

கி.பி.எட்டாம் நூற்றாண்டளவில் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசம் மட்டக்களப்பு வரலாற்றில் மட்டுமன்றி இலங்கை வரலாற்றிலும் முக்கியத்தும் பெற்றிருந்ததெனலாம். இதற்கான காரணம் இரண்டாம் மகிந்தனின் ஆட்சிக் காலத்தில் (கி.பி.777 -797) இராசரெட்டையின் தெற்கு எல்லையானது கல்லோயா வரை (இக்கினியாகல, அம்பாரை) விரிவடைந்ததேயாகும். இதன் பயனாக அனுரதபுரிக்கும் மட்டக்களப்புக்கு மிடையில் நெருக்கமான உறவுகள் ஏற்பட்டதுடன் அனுரதபுரி மன்னர்களின் செல்வாக்கும் மட்டக்களப்பில் வேரூன்றத் தொடங்கியது. இரண்டாம் மகிந்தன் தமிழர்களுடன் நல்லுறவுகள் கொண்டிருந்ததுடன் அக்காலத்தில் பாழடைந்திருந்த சைவக்கோயில்களையும் திருத்திக் கொடுத்தான். சைவத்தையும் பேணிக்காத்தான். முதலாம் சேனன்(கி.பி.189-939) சைவனாகவே வாழ்ந்து வந்தான். இதனை நிகாய சங்கிரகம் என்ற நூல் குறிப்பிடுகின்றது. இக்காலத்தில் அம்பாரை, இங்கினியா கலை ஆகிய பகுதிகளில் சைவத்தமிழர்கள் பெருமளவில் வாழ்ந்து வந்தனர். சிவாலயங்களும் நிறைந்திருந்தன. இரண்டாம் மகிந்தன் முதலாம் சேனன் ஆகிய மன்னர்களது சமய, சமூகப்பணிகள் திருக்கோவில் தம்பிலுவில் வரை பரந்திருந்தன.

கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டளவில் இரண்டாம் சேனன் (கி.பி.839-873) காலத்தில் மட்டக்களப்பைத் தருமசிங்கன் என்பவன் சிற்றரசனாக விருந்து ஆட்சிபுரிந்து வந்தான். இவன் அனுரதபுரி மன்னனின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்த போதும் சுதந்திரமுள்ள மன்னனாகவே மட்டக்களப்பை ஆட்சிபுரிந்து வந்தான். இக்காலம் (கி.பி.840) தொடக்கம் இலங்கையை சோழர் கைப்பற்றிய காலம் (கி.பி.993) வரையும் அனுரதபுரியில் ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்கள் பாண்டியருடன் நெருங்கிய அரசியல் சமய, கலாசாரத் தொடர்புகள் கொண்டிருந்தனர். இத்தொடர்புகள் மட்டக்களப்பில் வாழ்ந்து வந்த தமிழரது அரசியல் சமய, பண்பாட்டு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி வந்தன என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

அனுரதபுரியில் தமிழரது செல்வாக்கு நிலவியிருந்த இக்காலத்தில் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசம் பாண்டிய நாட்டுடன் நெருங்கிய தொடர்பு களைக் கொண்டிருந்தது. இதன் பயனாக சைவமும் தமிழும் இப்பிரதேசத்தில் உன்னத நிலையிலிருந்தன. அனுரதபுரியில் ஆட்சிபுரிந்து வந்த மன்னர்களது சமூக,சமய, பொருளாதார அபிவிருத்திப் பணிகள் சாகாமம் வரை பரந்திருந்தன. தப்புலன் என்ற மன்னனால் சாகாமக் குளம் புனரமைக்கப்பட்டுப் பயனப்படுத்தப் பட்டது. இக்குளத்தின் நீர் எவ்வாறு பங்கிடப்படவேண்டும் என்பதை இக்காலத் தைச் சேர்ந்த சமஸ்திருதக்கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகின்றது. முற்காலப் பாண்டியர் காலமாகிய இக்காலத்தில் சங்கமன்கண்டி, சாகாமம் (தம்பிலுவில்) ஆகிய நகரங்கள் (பண்டைய) இலங்கையில் பிரபல்யம் பெற்றிருந்தன.

கி.பி.பத்தாம், பதினோராம் நூற்றாண்டுகளில் இலங்கை சோழரது ஆட்சிக்குட்பட்டிருந்தது. இக்காலத்தில் (கி.பி.993-1070) மட்டக்களப்பை முறையே கதிர்சுதன் (1013) மதிசுதன் ஆகிய சிற்றரசர்கள் ஆட்சிபுரிந்துவந்தனர். இக்கால கட்டத்தில் ரோகணத்தின் தென்பகுதி மீது சோழர்கள் மேற்கொண்ட படை யெடுப்புக்கள் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தினூடாகவே நிகழ்ந்தன. இக்காலத்தில் சங்கமன்கண்டி, வில்காமம், சாகாமம் ஆகிய இடங்களில் சோழரது செல்வாக்கு நிலைத்திருந்தது. மட்டக்களப்பிலுள்ள முக்கிய நகரங்களி லொன்றாக சாகாமம் விளங்கியிருந்தது. இந்நகரைச் சூழவுள்ள இடங்களில் மக்கள் குடியிருப்புக்கள் நிறைந்திருந்தன.[33] இக்காலத்தில் சோழரின் பெரிய இராணுவத்தளம் ஒன்று சாகாமத்தில் (திருக்கோவில் தம்பிலுவில் மேற்கு) கி.பி.1067 வரையும் நிலைபெற்றிருந்தது. முதலாம் விஜயபாகு சோழருக்கெதி ரான தனது இறுதிப்படையெடுப்பை மேற்கொண்ட போது (கி.பி.1067) சாகாமத்தி லிருந்த முகாமும் இதனைத் தொடர்ந்திருந்த முகாம்களும் தாக்கப்பட்டன.[34]

கி.பி.பதினோராம் நூற்றாண்டளவில் சோழரிடமிருந்து முதலாம் விஜயபாகு (கி.பி.1070-1111) இலங்கையைக்கைப்பற்றி பொலநறுவையிலிருந்து ஆட்சிபுரிந்து வந்தான். இவனது ஆட்சி இலங்கை முழுவதும் நிலவியிருந்தது. இக்காலத்தில் மட்டக்களப்பில் ஆட்சிபுரிந்து வந்த சிற்றரசன் விஜயபாகுவின்

33. சோழரது ஆட்சிக்காலத்தில் தென்கிழக்கிலங்கை – கட்டுரை தினகரன் வாரமலர் 29.6.97 நா.நவநாயகமூர்த்தி

34. பண்டைய ஈழம் பாகம் II பக்: 254 வே.க.நடராசா History Of Ceylon - Page 191 S.Paranavidana and C.W.Nicholas - 1961.

மேலாதிக்கத்தை ஏற்றிருந்தான். முதலாம் விஜயபாகு தமிழர்களுடன் நல்லுறவுகள் கொண்டிருந்ததுடன் தமிழ்மொழியையும் சைவத்தையும் ஆதரித்து வந்தான். தமிழ்படைகளையும் தனது சேனையில் வைத்திருந்த இவன் தமிழ் எழுதுனர்களையும் நிர்வாக சேவையில் அமர்த்தியிருந்தான்.[35] இவ்வாறு தமிழர்களுடன் நல்லுறவுகள் கொண்டிருந்த விஜயபாகுவின் ஆட்சிக்காலத்தில் (கி.பி.1070-1111) திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசம் செழிப்புடன் விளங்கிய தெனலாம். இக்காலகட்டத்தில் இப்பிரதேசம் பெற்றிருந்த முக்கியத்துவம் பற்றி சூளவம்சம், கந்தஉபாத போன்ற நூல்கள் விபரமாகக் குறிப்பிடுகின்றன.[36]

இக்காலம் தொடக்கம் கி.பி.12ம் நூற்றாண்டுவரையும் இலங்கை வரலாற்றில் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இதனை வரலாற்றாய்வுகள் தெளிவுறுத்துகின்றன. முதலாம் விஜயபாகு காலத்திலும் இதற்குப் பின்னரும் இப்பிரதேசம் செழிப்புடன் விளங்கியிருந்தது. இவ்வாறு தொடர்ச்சியாக நாகரிகம் நிலவியிருந்த திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் இந்து பௌத்த உறவுகளும் இன உறவுகளும் நன்னிலையில் இருந்துவந்தன. தமிழரிடையே பௌத்தமும் நிலவியிருந்தது.[37] இக்காலத்தில் (கி.பி.11ம்,12ம் நூற்றாண்டு) தென்னிந்தியக் குடியேற்றங்களும் இப்பிரதேசத்தில் இடம்பெற்று வந்துள்ளன. திருக்கோவில் துறை 'துங்ககோள' என்ற பெயருடன் பிரபல்யம் பெற்றிருந்ததுடன் போக்குவரத்து, வர்த்தகம் என்பனவற்றிலும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. கி.பி.1215ம் ஆண்டுவரை இந்நிலை நீடித்திருந்தது.

II

கி.பி.1215ல் கலிங்க குலத்தவனான மாகன் என்ற மன்னன் இலங்கை மீது படையெடுத்து வந்து பொலநறுவையைக் கைப்பற்றி கி.பி.1236ம் ஆண்டு

---

35. தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும் – பக்: 77, 78 கதிர் தணிகாசலம் – 1992 பொலநறுவைமிலுள்ள வேளைக்காரச் சாசனம், பழமோட்டைத் தமிழச் சாசனம் என்பன வற்றின் வாயிலாக இவற்றை அறியமுடிகின்றது.

36. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி – பக்.104 திருமதி. ஜி.தனபாக்கியம் எம்.ஏ.(தொல்லியல்)

37. கி.பி.1215 வரை இலங்கைத் தமிழர் பௌத்த மதத்தையும் பின்பற்றியிருந்தனர். இதனைத் தொல்லியல் ஆய்வுகள் உறுதிசெய்கின்றன.
(இலங்கையிற் தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாசாரமும் பக்:183 திருமதி.ஜி.தனபாக்கியம் தொல்லியல எம்.ஏ)

வரை ஆட்சிபுரிந்ததாக வரலாறுகள் குறிப்பிடுகின்றன. தமிழனான மாகன் இருபத்திநாலாயிரம் வீரர்களுடன் படையெடுத்து வந்து பொலநறுவையைக் கைப்பற்றி அப்போது ஆட்சிபுரிந்துவந்த பராக்கிரம பாண்டியனை நீக்கி அரசனானான் என்று சூளவம்சம் கூறும். மேலும் இவன் விகாரைகளை இடித்துப் பௌத்தர்களைக் கொடுமைப்படுத்தித் துன்புறுத்தியதாகவும் இந்நூல் குறிப்பிடுகின்றது. இவனது ஆட்சிக்காலத்தில் (கி.பி.1215-1236) புனித பற்சின்னமும் கிண்ணச் சின்னமும் கொத்மலைக்கு எடுத்துச் சென்று ஒளித்து வைக்கப்பட்டன. பௌத்த மதகுருமார் வெவ்வேறு திசைகளிலும் சென்றனர். சிலர் சோழ, பாண்டிய நாடுகளுக்குச் சென்றனர் என்பதையும் அறியமுடிகின்றது.[38]

இவற்றின் வாயிலாக தமிழ்மன்னனான மாகன் இலங்கைமீது மேற்கொண்ட படையெடுப்பானது மதரீதியாக மேற்கொள்ளப்பட்டதென்பது தெளிவாகின்றது. இதற்குக் காரணம் அக்காலத்தில் (கி.பி.1215ல்) மட்டக்களப்பில் (அம்பாரையை உள்ளடக்கிய மட்டக்களப்பு) வாழ்ந்து வந்த சிங்கள மக்கள் தமிழர்களுடைய சைவாலங்களை இடித்தும் தமிழ்ச்சைவர்களது இருப்பிடங்களைத் தாக்கியும் வந்ததேயாகும். இதனைப் பொறுக்கமாட்டாத தமிழ்சைவனான மாகன் பெரும்படை திரட்டி வந்து சிங்களவர்களுக்கும் பௌத்தமதத்திற்கும் எதிராகச் செயற்பட்டான் என அறியமுடிகின்றது. [39]. தமிழ் மன்னான மாகனின் மதரீதியான படையெடுப்பு இலங்கை அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. இப்படையெடுப்பின் பயனாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர்கள் தனிப்பெரும்பான்மையினரானதும் வரலாற் றுண்மையாகும்.

தமிழ் மன்னனான மாகனின் படையெடுப்பானது 'திருக்கோவில் தம்பிலுவில்' பிரதேசத்தில் வாழ்ந்துவந்த மக்களது வாழ்வில் பெரும் மாற்றங் களை ஏற்படுத்தியது. மதரீதியில் மேற்கொள்ளப்பட்ட இப்படையெடுப்பின் காரணமாக இப்பிரதேசத்தில் நெடுங்காலம் தொட்டு மக்கள் வாழ்ந்து வந்த இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து வேறிடங்களுக்குச் செல்லநேரிட்டது. இதன் பயனாக பண்டைக் காலம் தொடக்கம் நாகரீகம் நிலவி வந்த இடங்கள்

38. இலங்கையின் சுருக்கவரலாறு – பக்: 62 எச்.டபிள்யு. கொடிறின்றன் – 1960

39. குளக்கோட்டன் தரிசனம் –பக். 52.க.தங்கேஸ்வரி தொல்லியல் பீ.ஏ. – பதிப்பு 1993 தமிழனான மாகனின் இலங்கைப் படையெடுப்பினைப் பற்றியும் அவனது ஆட்சிபற்றியும் மாகோன் வரலாறு (செல்வி க.தங்கேஸ்வரி B.A.Hons 1995) விபரமாகக் குறிப்பிடுகின்றது.

பொலிவிழக்கத் தொடங்கின. குறிப்பாக இப்பிரதேசத்தைச் சேர்ந்த சங்கமன் கண்டி, கஞ்சிகுடிஆறு, வில்காமம், றூபஸ், சாகாமம் ஆகிய இடங்களில் வாழ்ந்து வந்த மக்கள் இந்த இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து வேறிடங் களுக்குச் சென்றனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்து சென்றவர்களில் ஒரு பகுதியினர் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தின் மேற்குப் பகுதிக்கு அப்பால் உள்ள இடங்களை நோக்கிச் சென்றனர். பௌத்தர்களான இவர்களில் பெரும்பாலா னோர் தமிழ்ப் பௌத்தர்களாவர்.[40] இதேவேளை நாகரிகம் நிலவியிருந்த இடங்களில் வாழ்ந்து வந்த மக்களில் ஒரு தொகையினர் கிழக்குப் பகுதியி லுள்ள இடங்களை நோக்கி இடம் பெயரத் தொடங்கினர். இவர்களில் பெரும் பாலானோர் தமிழ்ச் சைவர்களாவர். ஏனையோரான சிறுதொகையினர் இந்து மதத்தெய்வங்களைப் போற்றி வந்த சிங்களக் குடியினராவர்.[41] இவ்வாறு இப்பிரதேசத்தின் கிழக்குப் பகுதியை நோக்கி இடம்பெயர்ந்த மக்கள் முதலில் சாகாமத்தின் கிழக்குப்பகுதி பரசுராமன் குளம், ஆரைப்பற்றைக்குடா (மேட்டுப் பகுதி) கோரைக்களப்பு வடக்கு (சின்னத்தோட்டம் உட்பட) தாமரைக்குளம் கிழக்கு தற்போதைய சங்கமன்கிராமம் (திருப்பதி) ஆகிய இடங்களில் குடியிருப்புகளை அமைத்து வாழ்ந்து வந்தனர்.

தமிழ் மன்னனான மாகனும் இவனது உபராஜனான ஜயபாகு என்ற குளக்கோட்டனும் இலங்கையில் ஆட்சி புரிந்து வந்த அக்காலத்தில் (கி.பி.1215-1241) தமிழ்ச்சைவர்கள் வாழ்ந்து வந்த திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தின் சமய, சமூக வளர்ச்சிக்கு இவர்களிருவரும் அருந்தொண்டுகள் புரிந்துள்ளனர். சித்திரவேலாயுதர் ஆலயம் மாகனால் புதிதாக நிர்மாணிக்கப் பட்டது. சோழர் கட்டிடக் கலையைப் பின்பற்றி மாகனால் எடுப்பிக்கப்பட்ட இவ்வாலயம் பிற்காலச் சோழர் கட்டிடக்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கு கின்றது.42 இப்பணியை முன்னின்று செய்து முடித்தவன் உபராஜனான ஜயபாகு என்ற குளக்கோட்டனாவான். இதனை

40. இவ்வாறு சென்றவர்கள் நாளடைவில் பௌத்த சிங்களவராகினர் என்பது வரலாற்றுண் மையாகும்.

41. இவர்கள் நாளடைவில் தமிழர்களாயினர். ஆயினும் சிங்களக்குடிஎன்றே இவர்கள் இன்று அழைக்கப்படுகின்றனர்.

42. இலங்கையிற் தொல்லியலாய்வுகளும் திராவிடக்கலாசாரமும் – பக்:133, 134 திருமதி.ஜி. தனபாக்கியம்

''சீர்மேவு இலங்கைப்பதி வாழ்வுதரு செல்வமும்
சிவநேச இருசமயமும் '' என்று தொடங்கும் கோணேசர் கல்வெட்டுப் பாடல் தெளிவுறுத்துகின்றது.

கலிங்க குலத்தவனான மாகன் இப்பிரதேசத்துக்கு வருகை தந்து இங்கு வாழ்ந்து வந்த கலிங்க வேளாளர் என்ற காராளர் வம்சத்தினரை ஏழு குடிகளாக வகுத்து மட்டக்களப்பிலுள்ள (அம்பாரையை உள்ளடக்கிய மட்டக் களப்பு) திருப்படைக்கோயில்களின் நிர்வாகப் பொறுப்புக்கு நியமித்தான். இவ்வாறு நியமிக்கப்பட்டவர்களில் முதல் குடிகளான கண்டன்குடி, சருவிலிகுடி, கட்டப்பத்தான்குடி ஆகிய மூன்று குடிகளும் சித்திரவேலாயுதர் ஆலய நிர்வாகத் திற்காக (ஆலயப்பணி) இப்பிரதேசத்தில் தங்கியிருந்தனர்.[43] ஏனைய குடி களான கவுத்தன்குடி, அத்தியாகுடி, பொன்னாச்சிகுடி, வயித்திகுடி ஆகிய நாலு குடிகளும் கோயில் போரதீவு சித்திரவேலாயுதர் ஆலயம், மண்டூர் முருகன் ஆலயம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் ஆகிய வற்றில் நிர்வாகப் பணிக்காக பளுகாமம், களுவாஞ்சிக்குடி ஆகிய இடங்களில் குடியேற்றப்பட்டனர்[44] என்பதையும் அறியமுடிகின்றது.

இப்பிரதேசத்தில் வாழ்ந்துவந்த கலிங்ககுல வேளாளர்களை தமிழ் மன்னனான மாகன் ஏழுகுடிகளாக வகுத்தமை பற்றிக் குளிக்கல்வெட்டு முறைப் பட்டயம் இவ்வாறு கூறுகின்றது.

---

43. மட்டக்களப்பு சைவக்கோவில்கள் ஐ பக்: 50 வித்துவான் வி.சி.கந்தையா –1983 மட்டக்களப்பு மான்மியம் ஆராய்ச்சி – பக்.145, திருமதி.ஜி.தனபாக்கியம். பீ.ஏ.சிறப்பு, தொல்லியல் எம்.ஏ.

44. கோயில் போரதீவு சித்திரவேலாயுதர் ஆலயத்தின் வண்ணக்கராகக் கவுத்தன் குடியைச் சேர்ந்தோரே பணியாற்றி வந்தனர். பதினாலு தலைமுறைமினர் இவ்வாறு பணியாற்றிவந்ததாய் அறியமுடிகின்றது. மண்டூர் முருகன் ஆலயத்திலும் வண்ணக்கராக ஆரம்பத்தில் இருந்து வந்தவர்கள் கலிங்கவேளாளர்களேயாவர். (மட்டக்களப்பு சைவக்கோயில்கள் – 1 பக். 80,81,67) பொன்னாச்சிகுடி, அத்தியாகுடி, வைமித்திகுடி ஆகிய மூன்றுகுடிகளும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துடன் தொடர்புடையோராகவிருந்து வந்தனர். இவ்வாலயத்தில் கவாமியைத் தூக்கி ஊர் சுற்றும் உரிமை கூடக் கலிங்க வேளாளருக்கு பழங்காலத்தில் இருந்து வந்தது. (தேரோட்டம் –கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய கும்பாபிஷேக சிறப்புமலர் 1998.கட்டுரை மட்டக்களப்பு பிரதேசத்தின் பராம்பரிய நில உடமை முறையும் அவற்றின் பொருளியல் வழக்காறும் – குமாரவேல் தம்பையா விரிவுரையாளர் கிழக்கு பல்கலைக்கழகம்)

கண்டனொடு சருகுபில்லி கட்டப்பத்தன்
கருதாரிய கவுத்தனு மத்தியாயன்
மண்டலத்தில் பொன்னாச்சி வயித்தியென்று
கோவசியர் மக்களிலே வருணமாக்கி
பண்டுமுறை தவறாமல் ஏழுகுடியாய்
பகுத்தீசர் பணிபுரிய பரவணியாய்
அண்டர்தமைச் சாட்சி வைத்துத் தத்தம்
செய்தான்
அணிதிகழும் மாகோனாம் அரசன்தானே.

இதேபோன்று மாகனின் உபராஜனாகவிருந்த ஜயபாகு என்ற குளக்கோட்டனது சைவப்பணிகள் சங்கமன்கண்டி வரையும் பரந்திருந்ததைக் கோணேசர் கல்வெட்டுப் பாடல்வரிகள் தெளிவுறுத்துகின்றன.

'வரவுறு வடக்கு வருகரம் பகமாந்
திரமுறு மேற்குச் சிறந்த முனீசுரத்
தரைபுகழ் தெற்குச் சங்கமக் கண்டி
உரமிகு கிழக்கு உகந்தவங்காளம். 45

இவ்வாறு இத்தமிழ் மன்னர்கள் இருவரும் தங்கள் ஆட்சிக் காலத்தில் (கி.பி.1215-1241) இப்பிரதேசவளர்ச்சியில் அதிககவனம் செலுத்திவந்தனரெனலாம்.

தமிழ் மன்னனான மாகோனைத் தொடர்ந்து இலங்கையில் ஆட்சி புரிந்து வந்த சிங்கள மன்னர் காலத்தில் (கி.பி.1241 -1284) பாண்டியர் படை யெடுப்புக்கள் பல நிகழ்ந்தன. இவற்றில் இறுதியாக கி.பி.1284ம் ஆண்டு பாண்டியன் குலசேகரனால் மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பானது இலங்கை அரசியலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியதெனலாம். இப்படையெடுப்பினைத் தொடர்ந்து இலங்கை ஏறக்குறைய இருபது ஆண்டுகள் பாண்டியப் பேரரசின் ஒரு பகுதியாகவிருந்தது. பாண்டியர் இலங்கையில் அரசு செலுத்திய இக்காலத் தில் மட்டக்களப்புத் தமிழகத்தை (அம்பாரையை உள்ளடக்கிய மட்டக்களப்பு) தமிழ்ச் சிற்றரசனொருவன் ஆட்சி புரிந்து வந்தான்.

45. கோணேசர்கல்வெட்டு – பதிப்பு பு.பொ.வைத்திய லிங்கதேசிகர்– 1931 பக்.12 அத்III- 20,24 இக்காலத்தில் சங்கமன்கண்டியில் அமைந்திருந்த சிவாலயத்தின் திருப்பணியை குளக்கோட்டன் செவ்வனே நிறைவேற்றி வைத்தான் என அறியமுடிகின்றது. விரிவாக ஆராய வேண்டிய விடயம்.

இக்காலத்தில் திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம் பாண்டியரால் திருப்பணி செய்யப்பட்டது. கற்கோயிலான கருவறையின் மேற்பகுதியிலுள்ள யாழிவரிசைச் சிற்பங்கள் இக்காலத்தை (பிற்காலப் பாண்டியர் காலம்) சேர்ந்ததென பேராசிரியர் இந்திரபாலா குறிப்பிடுகின்றார். இக்காலத்தில் பாண்டிய நாட்டுக்கும் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்துக்குமிடையில் நேரடித் தொடர்புகள் இருந்து வந்துள்ளன. மேலும் இக்காலத்தில் பாண்டியநாட்டுத் தமிழ்க் குடிகள் இப்பிரதேசத்தில் குடியேறினர். திருக்கோவில் துறையானது புகழ்பெற்ற துறை முகமாக விளங்கியிருந்தது.[46] இத்துறையினூடாகப் போக்குவரத்து, வர்த்தகம் என்பன இடம்பெற்று வந்தன.

இலங்கை பாண்டியப் பேரரசின் ஒரு பிரிவாக ஏறத்தாள இருபது வருடங்கள் (1284-1304) இருந்து வந்ததைத் தொடர்ந்து இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த அரசியல் சம்பவங்கள், மாற்றங்கள் என்பன திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்திலும் பல மாற்றங்களைத் தோற்றுவித்தன. குறிப்பாகப் பண்டைய நாகரிகம் நிலவியிருந்த இடங்களிலிருந்து (திருக்கோவில் தம்பிலுவில் மேற்கு) மாகோனது படையெடுப்பின் காரணமாக இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்த மக்கள் மேலும் கிழக்குக் கரையோரப் பகுதியிலுள்ள இடங்களை நோக்கி இடம் பெயரத் தொடங்கினர். இவ்வாறு இடம் பெயர்ந்தவர்களில் பெரும்பாலானோர் கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் தமிழ்ச் சிற்றரசனான மேகவண்ணன் என்ற மனுநேய கஜவாகுவால் வெட்டப்பட்டதும் அவனது தாயாரின் பெயரினைக் கொண்டிருந்ததுமான தம்பதிவில் ஏரியைச் சூழவுள்ள இடங்களில் குடியேறி வாழ்ந்து வந்தனர். இந்த இடம் தம்பவில் என்ற பெயரினைப் பெற்றது.[47]

கி.பி.பதிமூன்றாம் நூற்றாண்டில் பாண்டியப்பேரரசின் கீழ் இலங்கை இருந்த காலத்தில் வட இலங்கையில் நிலைத்திருந்த யாழ்ப்பாணத் தமிழ் அரசு மேலும் வளர்ச்சியுற்று யாழ்ப்பாண இராச்சியமாக மலர்ந்தது. கி.பி. பதினாலாம் நூற்றாண்டளவில் தென்னிலங்கையில் ஆட்சிபுரிந்து வந்த சிங்கள மன்னனிடம் திறைபெறும் அளவுக்கு இத்தமிழ் அரசு பலம்மிக்கதாக விளங்கியிருந்தது. கி.பி.1349ம் ஆண்டு கம்பளையிலிருந்து ஆட்சிபுரிந்து வந்த நாலாம்

46. பண்டைய ஈழத்தமிழர் – பக்.67,68 நா.நவநாயகமூர்த்தி – 1998

47. தம்புவில் என்ற பெயரும் பிற்காலத்தில் தம்பலவில் என்று வழங்கிப் பின்னர் தம்பிலுவில் என்றாயிற்று.

புவனேகபாகுவும் அவனுக்குப் பின் வந்தோரும் ஆட்சி நடத்திய காலத்தில் யாழ்ப்பாணத் தமிழ் அரசருக்குத் திறை செலுத்தி வந்தனர். கி.பி.1450ம் ஆண்டு கோட்டை மன்னனான ஆறாம் பராக்கிரமபாகு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் வரையும் இந்நிலை நீடித்திருந்ததெனலாம்.

இக்காலத்தில் (கி.பி.1325-1450) மட்டக்களப்பில் ஆட்சிபுரிந்து வந்த வன்னியர் என்ற சிற்றரசர்கள் யாழ்ப்பாண அரசரின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்த போதும் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகவே இப்பிரதேசத்தை (வெருகல் தொடக்கம் கூமுனை வரை) ஆட்சிபுரிந்து வந்தனர். யாழ்ப்பாண அரசில் தமிழ் மொழியே உத்தியோக மொழியாக விளங்கியிருந்த இக்காலத்தில் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் வாழ்ந்துவந்த தமிழ்ச் சைவர்கள் தங்கள் மொழியையும் சமயத்தையும் பேணிப் பாதுகாக்க ஆர்வம் கொண்டவர் களாக விளங்கினர். இவர்களுக்கு யாழ்ப்பாணத் தமிழ் அரசர்களது ஆதரவும் இருந்து வந்தது. இதன் பயனாகத் தமிழும் சைவமும் இப்பிரதேசத்தில் செழித் திருந்தன. வடக்குக் கிழக்கு பகுதிகளில் வாழ்ந்து வந்த தமிழ்ச்சைவர்களின் வழிபாட்டுத் தலமாகச் சித்திரவேலாயுதர் ஆலயம் விளங்கியிருந்தது.

கண்டிமன்னர் காலம்

கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் இலங்கையில் காலடி எடுத்து வைத்த காலத்தில் (கி.பி.1505) மட்டக்களப்பை (மட்டக்களப்பு அம்பாரை மாவட்டங்கள்) ஆட்சிபுரிந்துவந்த வன்னிச் சிற்றரசர்கள் சுதந்திர முள்ளவர்களாக இப்பிரதேசத்தை ஆட்சிபுரிந்து வந்தனர். இவர்கள் பழுகாமம் சிங்காரபுரம் (அட்டப்பள்ளம்) பாணகை ஆகிய இடங்களிலிருந்து ஆட்சிபுரிந்து வந்தனர்.[48] இவ்வாறு சுதந்திரமுள்ள சிற்றரசர்களாக ஆட்சிபுரிந்து வந்த இவர்கள் கி.பி.பதினாறாம் நூற்றாண்டளவில் கண்டி அரசானது தனியரசாகப் பலம் பெற்றிருந்த காலகட்டத்தில் முதலாம் விமலதர்ம சூரியன் (கி.பி.1592 -1604) கண்டியரசனாக முடிசூடிக்கொண்டவேளையில் கண்டியரசனின் மேலாதிக் கத்தை ஏற்றனர். இக்காலம் தொடங்கி ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரையும் (கி.பி.1803) வன்னியர் என்ற சிற்றரசர்களது ஆட்சி மட்டக்களப்புத் தமிழகத்தில் நிலைத்திருந்தது.

---

48. சுதந்திரமான தமிழ் இராச்சியங்கள் – கட்டுரை வீரகேசரி வாரமலர் 14.6.1998 நாதவநாயகமூர்த்தி

இக்கால கட்டத்தில் (கி.பி.1604-1803) மட்டக்களப்பில் நிலைத்திருந்த வன்னிச் சிற்றரசுகள் கண்டி அரசர்களினதும் போர்த்துக்கேய, ஒல்லாந்து அரசுகளினதும் மேலாதிக்கத்தை ஏற்றிருந்த போதும் கண்டி இராச்சியமோ அன்றிப் போர்த்துகேய, ஒல்லாந்து அரசுகளோ அடிமைப் படுத்தப்படாத சுதந்திர அரசுகளாக இருந்து வந்துள்ளன. இது வரலாற்றுண்மையாகும். கி.பி.1766ம் ஆண்டு கண்டிமன்னனான கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனுக்கும் ஒல்லாந்த ருக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் கண்டி அரசன் சகல கரையோரப் பிரதேசங்களையும் கையளித்தான். இதன் பிரகாரம் மட்டக் களப்பு ஒல்லாந்தர் வசமானது.[49] இதன் பின்னர் ஒல்லாந்தர் மட்டக்களப்பை இரு மாகாணங்களாகப் பிரித்து ஆட்சிபுரிந்த வேளையில் மாகாண ஆளுநர் களாக திரு.அறுமக்குட்டி, திரு.கந்தப்போடி ஆகிய தமிழர்களை நியமித்து தமது அதிகாரங்களை வழங்கியிருந்தனர்.[50] ஆயினும் வன்னிச் சிற்றரசுகள் முழுமையாக அடிமைப்படுத்தப்படாத சுதந்திர அரசுகளாக விளங்கி வந்துள்ளன.

இவ்வாறு சுதந்திரமுள்ள தனிச்சிற்றரசுகளாக இருந்துவந்த வன்னிச் சிற்றரசுகள் ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கிய காலத்தில் மட்டக்களப்புத் தமிழகத்தில் பாணமை, பொத்துவில், திருக்கோவில் (தம்பிலுவில்) அக்கரைப் பற்று, சம்மாந்துறை, மண்முனை, ஏறாவூர் ஆகிய இடங்களில் நிலைத்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இதேவேளை இக்காலகட்டத்தில் (கி.பி.1604-1803) கண்டி மன்னரது செல்வாக்கும் மட்டக்களப்புத் தமிழகத்தில் நிலைத் திருந்தது. இதற்கான காரணம் கண்டி மன்னர்கள் மட்டக்களப்புத் தமிழகத்துடன் கொண்டிருந்த நல்லுறவுகளாகும். இக்காலத்தில் கண்டி மன்னர்கள் இங்குள்ள இடங்களுக்கு வந்து தங்கியிருந்து செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இப்பிரதேசத்தில் அமைந்திருந்த பண்டைய சிவாலயங்கள் பல. கண்டிமன்னரின் மானியங்கள் பெற்று வந்துள்ளன. கண்டிமன்னர்கள் மட்டக்களப்புத் தமிழ் மக்களுடன் நெருங்கிய உறவுகள் கொண்டிருந்தனர். அக்காலத்தில் மட்டக் களப்புத் தமிழகத்தில் தோன்றிய கிராமிய இலக்கிய வடிவங்கள் இதற்குச் சான்று பகருகின்றன. கண்டி அரசுடன் மட்டக்களப்பு வர்த்தகம், போக்குவரத்து, அரசியல், கலாசாரம் ஆகிய தொடர்புகளையும் கொண்டிருந்தது.[51]

---

49. இலங்கைச்சரித்திரம் பாகம்ஐ பக்.68, 71 எஸ்.எவ்.டி.சில்வா. பதிப்பு 1952

50. மட்டக்களப்பு மான்மியம் – பக்.68, 69 பதிப்பாசிரியர் வித்துவான்எப்.எக்ஸ்.நடராசா

51. கண்டிமன்னன் வீரநரேந்திர சிங்கனைப் புகழ்ந்து பாடிய மட்டக்களப்பு புலவர் –கட்டுரை வீரகேசரி வாரமலர் –15.11.98 நா.நவநாயகமூர்த்தி

இவ்வாறு மட்டக்களப்புத் தமிழகத்தில் கண்டிமன்னரது செல்வாக்கு நிலவியிருந்த இக்காலத்தில் தன்னாட்சித் தமிழ்ப் பிரிவுகளாக வன்னிச் சிற்றரசுகள் விளங்கியிருந்தபோதும் சிங்களவரும் இப்பிரதேசத்தில் குடியேறி வந்தனர். [52] கண்டி மன்னனான கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கள் காலத்தில் மட்டக் களப்பில் இராஜபக்ஷிமுதலியார் தலைமையில் சிங்களக் குடும்பங்கள் குடியேறியதாகப் பரவணிக் கல்வெட்டு கூறுகின்றது. மேலும் இக்கல்வெட்டு அபூபக்கர் என்பவர் தலைமையில் குடியேறிய முஸ்லீம்கள் பற்றியும் குறிப்பிடுகின்றது.53 இதற்கு முந்திய காலத்தில் கண்டி மன்னனான செனரதன் (கி.பி.1605 - 1635) மட்டக்களப்பில் நாலாயிரம் முஸ்லீம்களைக் குடியேற்றினான் என்று வரலாறுகள் குறிப்பிடுகின்றன.54

கண்டி மன்னரது ஆட்சிக் காலத்தில் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசம் (செலயகப்பிரிவு) உன்னத நிலையிலிருந்தது. தமிழும் சைவமும் இங்கு செழித்திருந்தன. இப்பிரதேச மக்களுடன் கண்டி மன்னர்கள் நெருங்கிய உறவுகள் கொண்டிருந்தனர். சித்திரவேலாயுதர் ஆலயம் கண்டிமன்னர்களால் ஆதரிக்கப்பட்டு மானியங்கள் பெற்று வந்தது. தமிழ் அரசியைத் தனது பட்டத்து இராணியாகக் கொண்டிருந்த இரண்டாம் இராசசிங்கன் (கி.பி.1635-1687) இப்பிரதேச மக்களுடன் நெருங்கிய உறவினைக் கொண்டிருந்தான்.[55] இவனுக்குப் பின் ஆட்சிபுரிந்த கண்டி மன்னர்களான இரண்டாம் விமலதர்ம சூரியன்(1687 - 1707) சிறி வீர நரேந்திர சிங்கன் (1707-1739) சிறி விஜயராச சிங்கன் (1739-1747) கீர்த்தி ஸ்ரீ ராசசிங்கன் (1747-1782) இராசாதி இராச சிங்கன் (1782-1798) ஆகிய மன்னர்கள் இப்பிரதேசத்துடன் நெருங்கிய உறவுகள் கொண்டிருந்தனர். இதனை இலக்கியதொல்லியல் சான்றுகள் வாயிலாக அறியலாம்.

இக்காலத்தில் தம்பிலுவில் திருக்கோவில் பிரதேசத்தில் மக்கள் பெருமளவில் வாழ்ந்து வந்த இடமாகத் தம்பிலுவில் கிராமம் விளங்கியிருந்தது.

52. நாம் தமிழர் – பக்.137 பொ.சங்கரப்பிள்ளை – 1991
53. இக்குடியேற்றம் சிங்காரபுரவன்னி அரசனின் ஆதரவுடன் இடம் பெற்றதாக பரவணிக் கல்வெட்டு கூறுகின்றது.
54. புதுமுறைச் சரித்திரம் பகுதி III பக்:129,130 திரு.ஏ.ஏ.ஞாரம். M.A. திரு.T.V.K.மூர்த்தி B.A.Hons
55. கண்டி மன்னன் வீரநரேந்திர சிங்கனைப் புகழ்ந்து பாடிய மட்டக்களப்பு புலவர் – கட்டுரை வீரகேசரி வாரமலர் 15.11.1998

இக்காலத்தில் குறிப்பாக பிரதான வீதிக்கு மேற்குப் பக்கமாக முனையூர் வீதியிலிருந்து கண்ணகை அம்மன் ஆலயம் வரையுள்ள இடங்களிலும் இதனை யண்டிய கிழக்குப் பகுதியிலும் மக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் இதற்கு முற்பட்ட காலத்தில் நாகரிகம் நிலவியிருந்த இப்பிரதேசத்தின் (திருக்கோவில் தம்பிலுவில்) மேற்குப் பகுதியிலுள்ள இடங்களில் வாழ்ந்திருந்தவர்களின் சந்ததியினராவர். மேலும் புதுக்குளம் (கள்ளியந்தீவு மேற்கு) ,கோரைக்களப்பு, ஆகிய இடங்களிலும் சிலகுடும்பங்கள் வாழ்ந்து வந்தனர். தம்பட்டையில் வீரசைவக்குருமார் என்ற சிவப்பிராமணர்கள் (சங்கமர்) வாழ்ந்து வந்தனர். இவர்கள் சித்திரவேலாயுதர் ஆலயம் உள்ளிட்ட இப்பிரதேசத்தில் அமைந்திருந்த அனைத்துச் சைவாலயங்களிலும் அர்ச்சகர்களாகக் கடமைபுரிந்து வந்தனர்.

இக்காலத்தில் திருக்கோவில் கிராமம் சிறுமக்கள் தொகையினரைக் கொண்டதாகவிருந்தது. குறிப்பாக சித்திரவேலாயுதர் ஆலயத்தைச் சூழவுள்ள இடங்களில் மக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் இதற்கு முந்திய காலத்தில் சித்திரவேலாயுதர் ஆலயப் பணிக்கெனச் சோழநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டு இங்கு குடியேற்றப்பட்டவர்களின் சந்ததியினராவர்.

கண்டி மன்னர் காலத்தில் (1595 - 1803) கண்டி மன்னர்கள் இப்பிரதேசத்திற்கு வருகைதந்து சித்திரவேலாயுதரைத் தரிசித்து நன்கொடைகள் வழங்கிச் செல்வதும் உண்டு.இக்காலத்தில் சங்கமன்கண்டியிலிருந்து கண்டிக்குச் செல்ல ஒரு பாதை இருந்தது. கண்டிமன்னர்கள் இப்பிரதேசத்திற்கு வருகை தரும் வேளைகளில் தம்பிலுவிலில் வாழ்ந்துவந்த சித்திரவேலாயுதர் ஆலய வண்ணக்கர் மற்றும் பிரமுகர்கள் என்போர் மன்னரையும் பரிவாரங்களையும் வரவேற்று உபசரித்து வழியனுப்பி வைத்து வந்ததாக வரலாற்றுச் செய்திகள் உண்டு. கண்டி மன்னர்கள் தம்பிலுவிலில் தங்கியிருந்து சென்ற சமயங்களில் இவ்வூரில் வாழ்ந்திருந்த புலவர்கள் மன்னரைப் புகழ்ந்து பாடிப் பரிசுகளும் பெற்று வந்துள்ளனர்.

ஆங்கிலேயர் காலம்

இலங்கையில் ஆங்கிலேயரது ஆட்சி ஆரம்பமான காலத்தில் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் தமிழும் சைவமும் செழித்திருந்தன. திண்ணைப் பள்ளிக்கூடக் கல்வியும் நிலைத்திருந்தது. இவ்வேளையில் இப்பிரதேசத்தில் குடியேறிய ஆங்கிலேயர்கள் தெங்குப் பயிர்ச் செய்கைக்கு

இப்பிரதேசம் ஏற்றதென்பதைக் அறிந்து தென்னந்தோட்டங்களை அமைக்கத் தொடங்கினர். இதன் காரணமாகக் கோரைக்களப்பு முதலிய இடங்களில் வாழ்ந்து வந்த மக்கள் அந்த இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்து தம்விலுவிலில் குடியேறினர். இக்காலத்தில் ஆங்கிலேயர் தென்னந்தோட்டங் களை உருவாக்கியதுடன் இங்குள்ள மக்களும் தெங்குப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கு ஊக்கம் அளித்து வந்தனர்.

இவ்வாறு ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட தென்னந்தோட்டங் களில் வேலை செய்வதற்காக ஆரையம்பதி, களுதாவளை, கல்லாறு போன்ற இடங்களிலிருந்து தொழிலாளர் பலர் வரவழைக்கப்பட்டனர்.56 இவ்வேளையில் தம்விலுவில் கிராமத்தைச் சேர்ந்த சிலரும் ஆங்கிலேயரது தென்னந்தோட்டங் களில் வேலை செய்து வந்தனர். 1910ம் ஆண்டளவில் ஆங்கிலேயரான கிறின்துரை என்பவரது தோட்டத்தில் தம்பிலுவிலைச் சேர்ந்த திரு.உவில்லியம் பிள்ளை (முத்ததம்பிப்பிள்ளை) என்பவர் வேலைக்குச் சேர்ந்தார். மேற்பார்வை யாளராகப் பணிபுரிந்து வந்த இவர் ஆங்கிலேயரான கிறின்துரை அவர்களது பாராட்டுதலைப் பெற்றவராவார். இதற்கான காரணம் இவர் ஆங்கிலத்தில் பெரும் புலமை பெற்றிருந்ததேயாகும். அக்காலத்தில் ஆங்கிலேயரைப் போன்று நாட்குறிப்பேடு எழுதும் பழக்கத்தைக் கொண்டிருந்த இப்பெரியாரது நாட்குறிப் பேடுகள் வரலாற்றுத் தகவல்கள் பலவற்றை உள்ளடக்கியுள்ளன.

இப்பிரதேசத்தில் ஆங்கிலேயர் காலத்தில் தென்னந்தோட்டங்கள் எழுந்த காலத்தின் பிற்காலத்தில் (கி.பி.1815-1945) திருக்கோவில் துறைமுகம் இலங்கையில் பிரபல்யம் பெற்றிருந்த துறைமுகங்களிலொன்றாக விளங்கி யிருந்தது. இத்துறைமுகத்தினூடாக கொப்பறா ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இத்துறைமுகத்தை அபிவிருத்தி செய்த பெருமை ஆங்கிலேயரையே சாரும் எனலாம். 1925ம் ஆண்டளவில் ஆங்கிலேயரது செல்வாக்கு இப்பிரதேசத்தில் உன்னதநிலையில் இருந்தது. 1948ம் ஆண்டு நாடு சுதந்திரமடைந்ததுடன் ஆங்கிலேயர்கள் இப்பிரதேசத்தை விட்டுப் போவதற்கு மனமில்லாமல் அகன்றதும் வரலாற்று உண்மையாகும்.

---

56. இவ்வாறு ஆரயம்பதி , களுதாவளை, கல்லாறு ஆகிய இடங்களிலிருந்து வந்தவர்கள் ஆங்கிலேயர் காலத்தின் பின்னர் இப்பிரதேசத்தில் நிரந்தரமாக வாழத்தொடங்கியதுடன் மீன்பிடித்தல் சேனைப்பயிர்ச்செய்கை, விவசாயம் ஆகிய தொழில்களிலும் ஈடுபட்டுவந்தனர்.

வரலாற்றுத் தடயங்கள்:

(i) பண்டைக்காலத்தில் 'தம்பதிவில்' என்ற பெயருடன் விசாலமான தொரு ஏரியாகவிருந்து வந்த ஏரியானது இன்று ராமன்குளம் என்ற பெயருடன் சிறியதொரு குளமாகக் காட்சியளிக்கின்றது. சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு வரையும் இக்குளமும் இதன் சூழலும் பழமைக்குச் சான்றாக விருந்தன. அத்துடன் நெடுங்காலம் தொடக்கம் இக்குளம் விவசாயத்துக்கும் பயன்பட்டு வந்தது.

(ii) இலங்கையிலுள்ள வரலாற்றுச்சிறப்பு மிக்க முருக தலங்களுள் கதிர்காமத்துக்கு அடுத்ததாக விளங்குவது திருக்கோவில் சித்திவேலாயுதர் ஆலயமாகும். இப்பழம்பதியுடன் நெடுங்காலம் தொடக்கம் தம்பிலுவில் கிராம மக்கள் நெருங்கிய உறவுகள் கொண்டிருந்தனர். குறிப்பாக இவ்வூர் மக்கள் ஆலய நிர்வாகம், பரிபாலனம், பூசைகள், வழிபாடுகள் என்பனவற்றில் பங்கினை வகித்து வந்துள்ளனர்.

கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் மாகன் என்ற தமிழ் மன்னன் இலங்கையில் ஆட்சிபுரிந்த (கி.பி.1215-1241) காலத்தில் இம்மன்னன் இவ்வாலயத் திருப்பணி செய்து ஆலய நிர்வாக ஒழுங்கு முறைகளையும் செய்தான். இதனடிப்படையில் ஆலய நிர்வாகம் பரிபாலனம் என்பனவற்றில் இவ்வூர் மக்களும் முக்கிய பங்கினை வகித்தனர். இதனைக் குளிக்கல்வெட்டுப் பட்டயம் குறிப்பிடுகின்றது. இத்தமிழ் மன்னன் வகுத்த நிர்வாக முறையே இன்றும் நிலவிவருகின்றது.

(iii) கிழக்கிலங்கையிலுள்ள பண்டைய துறைமுகங்களில் திருக் கோவில் துறையும் ஒன்றாகும். கி.மு.நாலாம் நூற்றாண்டு தொடக்கம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் வரையும் இத்துறை பிரபல்யம் பெற்றிருந்தது. கி.பி.எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டுகளிலும் கி.பி.பத்தாம், பதினொராம், பதின் மூன்றாம் நூற்றாண்டுகளிலும் இத்துறைமுகம் வியாபாரம், போக்குவரத்து என்பனவற்றில் புகழ்பெற்றிருந்தது. இத்துறையின் வடபகுதி (கடற்கரைப் பகுதி)யானது அக்காலத்தில் வணிகமையமாகவிருந்தது. இங்கு சத்திரம் ஒன்று அமைந்திருந்தது. இதனை வரலாற்றுச் செய்தியொன்று குறிப்பிடுகின்றது.

இத்துறையினூடாக திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்திற்கு வரும் வர்த்தகர்கள் பயணிகள் என்போர் இங்கு தங்கியிருந்து சித்திரவேலாயுதரைத் தரிசித்து தங்கள் பயணத்தைத் தொடர்வர் என்பதை அறியமுடிகின்றது. அக்காலத்தில் சத்திரம் அமைந்திருந்த இடத்திலேயே இன்று திருநாவுக்கரசு நாயனார் குருகுலம் அமைந்துள்ளது.

இதனைச் சூழவுள்ள இடங்களில் மக்கள் குடியேறிக் குடியிருப்புக் களை அமைத்துக்கொண்ட வேளையில் சில இடங்களில் பண்டைய நாண யங்கள் கண்டெடுக்கப்பட்டன. இவை வரலாற்றில் இப்பகுதி பெற்றிருந்த முக்கியத்துவத்தைத் தெளிவுறுத்தும் சான்றுகளாகும்.

தம்பிலுவில் கண்ணகி வழிபாடு தோற்றம்

இலங்கையில் கண்ணகி வழிபாடு தோற்றம்

ஈழத்தில் பௌத்த சிங்களவரிடையே பத்தினித்தெய்வம் என்றும் மட்டக்களப்புத் தமிழரிடையே கண்ணகை அம்மன் என்றும் போற்றப்பட்டுவரும் கண்ணகி வழிபாடு நெடுங்காலம் தொட்டு இலங்கையில் நிலவி வருகின்றது. இவற்றில் பௌத்த சிங்களவரிடையே இருந்து வரும் பத்தினித்தெய்யோ என்ற பத்தினித்தெய்வ வழிபாடே மிகப்பழைய கண்ணகி வழிபாடு எனலாம். இலங்கையில் இவ்வழிபாடு எக்காலத்தில் தோன்றியது என்பதை ஆராயுமிடத்து இலங்கையில் முதன் முதலாகக் கண்ணகி வழிபாடு அனுரதபுரி ஆட்சிக் காலத்தில் தோன்றியதென்பதை அறியமுடிகின்றது.

கி.பி.இரண்டாம் நூற்றாண்டளவில் அனுரதபுரியிலிருந்து ஆட்சிபுரிந்த கஜபாகு என்ற மன்னனால் கண்ணகி வழிபாடு இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டதாக வரலாறுகள் குறிப்பிடுகின்றன.[1] இம்மன்னன் கி.பி.171-193 வரை இலங்கையில் ஆட்சி புரிந்ததாக மாகவம்சம் குறிப்பிடுகின்றது. இவனது ஆட்சிக்காலத்தில் தமிழகத்தில் கண்ணகி தேவிக்கு முதன் முதலில் ஆலயம் அமைத்து பிரதிஸ்டை செய்து வழிபாடு செய்தவன் சேரநாட்டு மன்னனான செங்குட்டுவனாவான். இதனைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

சேரமன்னனான செங்குட்டுவன் தனது தலைநகராகிய வஞ்சியில் கண்ணகிக்குக் கோயில் அமைத்துப் பெருவிழா எடுத்த காலத்தில் இலங்கை மன்னனாகிய கஜபாகுவையும் அவ்விழாவுக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்தான். இவ்வழைப்பை ஏற்றுச் செங்குட்டுவனது நண்பனாகிய கஜபாகு

---

1) History Of Ceylon - Page: 79,80 C.W.Nicholas and S.Paranavidana
The Early History Of Ceylon - Page: 26 G.C.Mendice - 1938

வேந்தனும் அங்கு சென்று விழாவில் கலந்து கொண்டான்.[2] இவ்விழாவில் பாண்டிய மன்னன் வெற்றிவேற்செழியனும், சோழஅரசன் பெருநற்கிள்ளியும் கொங்குதேச அரசகுமாரன் இளங்கோஅடிகளும் மகததேச மன்னரும் கலந்து கொண்டதாக அறியமுடிகின்றது.

கண்ணகி விழாவில் கலந்து கொண்ட இலங்கை மன்னன் கஜபாகு கண்ணகித் தெய்வத்தின் அற்புதங்களைக் கண்டுவியந்து நின்றான். இவ்வேளையில் செங்குட்டுவன் பத்தினித் தெய்வத்துக்கு நித்திய பூசை செய்யும்படி கூறிதான் அத்தெய்வத்தை மும்முறை வலம் வந்து வணங்கி நின்றான். அப்பொழுது கஜபாகு மன்னனும் அங்கு வந்து கண்ணகியை வணங்கி, இச்செங்குட்டுவனைப் போன்று எங்கள் நாட்டில் (ஈழத்தில்) நாங்கள் உங்களுக்குச் செய்யும் பூசையில் நீ எழுந்தருளி எங்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று பிரார்த்தித்தான். அப்பொழுது நீங்கள் விரும்பியபடி வரம் தந்தேன் என்ற ஓர் ஒலி கேட்டது. இதனைக் கேட்ட எல்லோரும் மகிழ்ச்சியுற்றனர்.[3]

கஜபாகு மன்னனும் தனது நாட்டில் கண்ணகி வழிபாட்டைப் பரப்ப எண்ணித் தனது விருப்பத்தைச் சேரமன்னனிடம் தெரிவித்தாள். செங்குட்டுவன் சந்தண மரத்தால் செய்த கண்ணகி உருவமும் ஒரு காற்சிலம்பும் சந்தண மரப்பலகையால் செய்த பேழையில் வைத்துக் கஜபாகுவுக்குக் கையளித்தான். பாண்டிய மன்னனாகிய வெற்றிவேற்செழியன் சந்தணப் பேழையையும் கஜபாகுவையும் ஒரு யானை மீதேற்றிக் கொண்டு வந்து வேதாரிணியத்தில் கொண்டு வந்து விட்டு வழியனுப்பி வைத்தான். அங்கிருந்து கடல் மார்க்கமாக கஜபாகு இலங்கைக் கரையை வந்தடைந்தான்.[4] சேர நாட்டிலிருந்து கஜபாகு மன்னன் இலங்கை திரும்பும் போது பத்தினி சிலைகளையும் (படிமம்) பலகுடிமக்களையும் அழைத்து வந்தான். இவர்கள் பன்னிரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தொகையினராவர். இதனை 'ராஜவலிய' குறிப்பிடுகின்றது.[5]

---

2. கண்ணகி விழாவுக்கு கஜபாகு வந்த காலம் கி.பி.178 எனக்கணிக்கப்பட்டுள்ளது. (ஆரியதிராவிடரும் அழிந்துபோன சங்கங்களும். பக் –88,89 துரைஜெயநாதன் – 1982)
3. சிலப்பதிகாரம் – வரந்தரு காதை பாடல்வரிகள் 155– 165
4. பத்தினி வழிபாடு – பக்.5 தொகுப்பாசிரியர் திரு.சி.கணபதிப்பிள்ளை –1978
5. தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும். பக்61 கதிர் தணிகாசலம் – 1992

இலங்கை வேந்தனான கஜபாகு கண்ணகி சிலைகளையும் கண்ணகியின் காற்சிலம்பையும் எடுத்துக்கொண்டு தனது பரிவாரங்களுடன் யாழ்ப்பாணத்துக்கு அருகாயுள்ள சம்புகோள என்னும் திருவடி நிலையில் இறங்கினான். இவ்வாறு இலங்கை திரும்பிய கஜபாகு கண்ணகி வழிபாட்டை இங்கு தொடங்கிக் கண்ணகிக்குப் பெருவிழா எடுத்தான் என அறிய முடிகின்றது. இலங்கையில் இம்மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது கண்ணகி ஆலயம் யாழ்ப்பாணம் திருவடி நிலைக்கு அருகாமையிலுள்ள அங்கணாகடவையில் அமைந்திருந்தது. [6] இதன் பின்னர் இம்மன்னன் அங்கிருந்து அனுரதபுரம் செல்லும் பாதைகளிலுள்ள பல ஊர்களில் கண்ணகிக்கு ஆலயங்களை நிர்மாணித்ததுடன் அவற்றில் பூசைகள் செய்வதற்காகப் பூசாரிகளையும் நியமித்தான்.

இவ்வாறு கஜபாகு மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட கண்ணகி ஆலயங்களில் பத்தாவது ஆலயம் வற்றாப்பளையிலுள்ள கண்ணகி ஆலயமாகும். இறுதியாக இவன் அனுரதபுரியில் ஒரு கண்ணகி ஆலயத்தை நிர்மாணித்தான். இவ்வாலயம் இசுருமுனிய விகாரைக்கருகிலுள்ள தடாகத்தின் முன்னால் நிர்மாணிக்கப்பட்டது இதனைத் தொடர்ந்து இவன் வருடந்தோறும் ஆடிமாதம் பூரணையில் பத்தினித் தெய்வமான கண்ணகிக்கு திருவிழாச் செய்து வந்தான். இத்திருவிழா ஊர்வலத்தைச் சிங்களத்தில் பெரஹரா என்று குறிப்பிட்டு வந்தனர். ஆடிமாதம் இத்திருவிழா நடந்து வந்ததால் எசல (ஆடி)ப் பெரஹரா என இதனை அழைத்து வந்தனர். ஊர்வலமாகவரும் இத்திருவிழா வானது கஜபாகு காலத்தில் பத்தினித்தெய்வ விழாவாக விளங்கிவந்தது. இதன் காரணமாக இலங்கை மழைவளம் பொழிந்து விளைச்சல் பெருகிச் செழிப்புள்ள நாடாகியது7. இதனை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

மட்டக்களப்பில் கண்ணகி வழிபாடு அறிமுகம்:

இவ்வாறு அனுரதபுரி மன்னனான கஜபாகுவால் இலங்கையில் அறிமுகப்படுதப்பட்ட கண்ணகி வழிபாடு இம்மன்னனது ஆட்சிக்காலத்திலேயே (கி.பி.171-193) மட்டக்களப்புத் தமிழகத்திலும் அறிமுகமானதாகச் சிலர் குறிப்பிடு கின்றனர்.[7] அனுரதபுரியில் பத்தினி வழிபாடு என்ற கண்ணகி வழிபாடு

6. யாழ்ப்பாணச் சரித்திரம் – பக் 17 முதலியார் செ.இராசநாயகம் அவர்கள் பதிப்பு – 1933
7. கஜபாகு மன்னன் நடத்திவந்த பத்தினித் தெய்வத்திருவிழாவின் தொடர்ச்சியே இன்று கண்டியில் நடைபெற்றுவரும் எசலப்பெரஹராவாகும்.

நிறுவப்பட்ட காலத்தில் இலங்கையின் பிறபகுதிகளில் ஆட்சிபுரிந்து வந்த சிற்றரசர்கள் தங்கள் தங்கள் ஆட்சிப்பிரதேசங்களிலும் கண்ணகி வழிபாட்டை ஏற்படுத்தியதாக வரலாற்றுக் குறிப்புண்டு. இதன்படி இவ்வழிபாடு இலங்கையின் மத்திய பிரதேசங்களினூடாக மட்டக்களப்புத் தமிழகத்திலும் (அம்பாரை உள்ளடங்கிய மட்டக்களப்பு) பரவியிருக்கலாம் என்ற கருத்தும் சிலரிடையே நிலவி வருகின்றது. மேலும் இவ்வழிபாடானது முல்லைத்தீவிலிருந்து (வற்றாப் பளை) கடல் மார்க்கமாக மட்டக்களப்புத் தமிழகத்துக்கு வந்திருத்தல் கூடும் என்பதும் சிலரது கருத்தாகும். [8] ஆனால் இதற்குப் போதிய தெளிவான சான்றுகள் இல்லை என்றே கூறலாம்.

மட்டக்களப்பில் கண்ணகி வழிபாடு அறிமுகமான காலம் பற்றி வரலாற்று ரீதியாக நோக்குமிடத்து கி.பி.பதினாறாம் நூற்றாண்டளவில் இவ்வழிபாடு மட்டக்களப்புத் தமிழகத்தில் அறிமுகமானதாக மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகின்றது. செனரதன் (கி.பி.1605-1635) என்ற மன்னன் கண்டியை ஆட்சிபுரிந்த காலத்தில் மட்டக்களப்பைத் தமிழ்ச் சிற்றரசர்கள் ஆட்சிபுரிந்து வந்தனர். [10] இக்காலத்தில் போர்த்துக்கேயர் யாழ்குடாப் பண்ணைப் பகுதியை அறுபத்திநான்காகப் பிரித்து (கிராமங்கள்) கிறிஸ்தவ ஆலயங்களை இக்கிராமங்களில் அமைத்து சைவ ஆலயங்களை இடிப்பித்துக் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பிவந்தனர். [11] இச்சமயத்தில் மட்டக்களப்பிலும் இவர்கள் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப நடவடிக்கை மேற்கொண்டு வந்தனர்.

இதனை மட்டக்களப்பிலுள்ள வன்னிச்சிற்றரசர்கள் கண்டி மன்னனுக்கு அறிவித்தனர். இதையறிந்த கண்டிமன்னனான செனரதன் மலாயவீரர்கள் துணை கொண்டு (கி.பி.1626) போர்த்துக்கேயரை மட்டக்களப்பிலிருந்து அகற்றி மலாய வீரர்களைக் காவல் வைத்தான். இக்காலத்தில் மட்டக்களப்பில் நாடார் குடியேற்றமொன்று நிகழ்ந்தது. இவர்கள் யாழ்குடா நாட்டிலிருந்து கந்தப்பர்

---

8. பத்தினி வழிபாடு பக். 5 தொகுப்பாசிரியர் திரு.சி.கணப்பதிப்பிள்ளை –1978
9. மட்டக்களப்புத் தமிழகம் – பக்.157 வித்துவான் பண்டிதர் வீ.சி.கந்தையா
10. இவர்கள் கண்டிமன்னனின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்த போதும் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகவே இப்பிரதேசத்தை ஆட்சிபுரிந்து வந்தனர்.
11. கி.பி.1620ல் போர்த்துகேயரது ஆட்சி வடஇலங்கையில் (குடாநாடு) நிலைபெற்றது. முதற் தேசாதிபதியாக பிலிப்தேஒலிவேறா நல்லூரை விடமாக் கொண்டான். இவன் நல்லூர் கந்தசுவாமி கோயிலை இடித்து அக்கோயிலின் கற்களைக் கொண்டு கோட்டையும் வீடும் கட்டினான். (யாழ்ப்பாணச் சரித்திரம். பக்.131 முதலியார் செ.இராசநாயகம். பதி.1933

என்பவரது தலைமையில் புலம்பெயர்ந்துவந்த வேளையில் ஏழு கண்ணகை அம்மன் விக்கிரகங்களைத் தங்களுடன் எடுத்து வந்தனர். இவ்வாறு வந்த நாடார் குடிகள் மண்முனைக்கு அருகாமையில் குடியேறி வாழ்ந்து வந்தனர். இவர்கள் கொண்டுவந்த ஏழு கண்ணகை அம்மன் விக்கிரகங் களும் ஏழு கிராமங்களில் ஆலயங்கள் அமைத்துப் பிரதிஸ்டை செய்யப்பட்டன. இவ்வாறு மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது.[12] இந்த ஏழு கண்ணகி விக்கிரகங்களும் மட்டக்களப்பின் வடபகுதியில் அமைந்திருந்த ஏழு கிராமங்களிலேயே பிரதிஸ்டை செய்யப்பட்டன என்பதை அறியமுடிகின்றது.

இதே காலத்தில் (கி.பி.16ம்நூற்.) மட்டக்களப்புத் தமிழகத்தின் தென் பகுதியில் கண்ணகி வழிபாடு நிலவியிருந்த தென்பதை ஆய்வுகள் மூலமாக அறியமுடிகின்றது. ஆதலால் இக்காலத்தில் மட்டக்களப்பில் நிகழ்ந்த நாடார் குடியேற்றங்களே மட்டக்களப்பில் கண்ணகி வழிபாட்டில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியதெனலாம். இதற்கானி காரணம் இக்காலத்தில் மட்டக்களப்பின் தென்கோடியில் பாணமை, தம்பிலுவில், பட்டிநகர், வீரமுனை ஆகிய இடங்களில் கண்ணகி வழிபாடு இருந்து வந்ததாகும். இந்த இடங்களில் மிகப்பழமையான கண்ணகி வழிபாட்டுப் பாரம்பரியம் நிலவியிருந்த இடமாக விளங்கியிருந்தது தம்பிலுவில் கிராமமாகும்.

தம்பிலுவில் கண்ணகி வழிபாடு தோற்றம் - வளர்ச்சி

திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் பத்தினி வழிபாடு என்ற கண்ணகி வழிபாடு ஆரம்பமானது பற்றி வரலாற்றுச் செய்தியொன்று இவ்வாறு குறிப்பிடுகின்றது. கிழக்கிலங்கையில் தமிழ் மன்னர்கள் ஆட்சிபுரிந்த காலத்தில் அக்காலத்தில் பிரபல்யம் பெற்றிருந்த 'இலங்கைத்துறை' என்னும் துறைமுகத் தினூடாகப் பாண்டிய நாட்டின் மதுரையிலிருந்து மூன்று அம்மன் விக்கிரகங்கள் கொண்டுவரப்பட்டன. இவற்றில் ஒன்று இலங்கைத் துறையிலும் மற்றது சம்பூரிலும் ஆலயங்கள் அமைத்துப் பிரதிஸ்டை செய்யப்பட்டன. மற்ற அம்மன் சிலை மட்டக்களப்பிலுள்ள தம்பிலுவில் கிராமத்தில் கோயில் கொண்டிருப்பதாக அறியமுடிகின்றது.[13] இவ்வாறு வரலாற்றுச் செய்தி குறிப்பிடுகின்றது. இதன்

12. மட்டக்களப்பு மான்மியம் – பக்.60–62 பதிப்பாசிரியர். எப்.எக்ஸ்.நடராசா – 1962

13. திருகோணமலை மாவட்டத்திருத்தலங்கள்– பக்.131. சைவப்புலவர் பண்டிதர் இ.வடிவேல் –1982

வாயிலாக கஜபாகு மன்னன் காலத்தில் கண்ணகி வழிபாடு அறிமுகமான இடங்களிலிருந்து இங்கு நேரடியாக வந்து சேரவில்லையென்பது தெளிவாகின்றது.

இவ்வரலாற்றுச் செய்தியை நான்கு ஆராயுமிடத்து கி.பி.இரண்டாம் நூற்றாண்டளவில் கண்ணகி வழிபாடு இங்கு அறிமுகமானது என்பதை அறிய முடிகின்றது. சமய, சமூக, ஆய்வுகளும் இதனை வலியுறுத்துகின்றன.[14] பாண்டிய நாட்டிலிருந்து கண்ணகி வழிபாடு திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தை நேரடியாக வந்தடைந்த இக்காலத்தில் (கி.பி.2ம்நூ) பாண்டிய நாட்டிலும் கண்ணகி வழிபாடு சிறந்திருந்தது. கஜபாகு மன்னனால் இலங்கையில் கண்ணகி வழிபாடு அறிமுகம் செய்யப்பட்டு பரப்பப்பட்டு வந்த காலத்தில் பாண்டிய நாட்டில் வெற்றிவேற்செழியனும், சோழநாட்டில் பெருநற்கிள்ளியும் கண்ணகி ஆலயங்களை நிர்மாணித்து கண்ணகி வழிபாட்டைப் பரப்பி வந்தனர். இதனைத் தொடர்ந்து தமிழகத்தில் கண்ணகிக்குக் கோயில்களும் வழிபாடுகளும் எழலாயின. இக்காலத்தில் பாண்டிய நாட்டில் கண்ணகி வழிபாடு உன்னத நிலையிலிருந்தது. இக்காலத்திலேயே பாண்டிய நாட்டின் மதுரையிலிருந்து இவ்வழிபாடு இப்பிரதேசத்திற்கு வந்து சேர்ந்தது.

இக்காலத்தில் (கி.பி.2ம்நூற்.) திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் நிலவியிருந்த அரசியல், சமூக, கலாசார நிலைகள் என்பன இங்கு தமிழகத்தின் பாண்டிய நாட்டிலிருந்து நேரடியாகக் கண்ணகி வழிபாடு வந்து சேருவதற்குக் காரணிகளாக அமைந்தன எனலாம்.[15] இவ்வரலாற்றுச் செய்திபற்றி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். மட்டக்களப்பின் வெருகல் ஆற்றுக்குக் கிழக்கேயுள்ள துறைமுகத்தில் மதுரை நகரிலிருந்து செண்பகநாச்சியம்மன், பத்திரகாளியம்மன், கண்ணகி அம்மன் ஆகியோரது சிலைகள் மூன்று கொண்டுவரப்பட்டதாகவும் செண்பகநாச்சியார் சிலையை

---

14. இவ்வரலாற்றுச் செய்தியை அடிப்படையாகக்கொண்டே கி.பி.எட்டாம் நூற்றாண்டில் (முற்காலப் பாண்டியர் காலம்) இங்கு கண்ணகி வழிபாடு அறிமுகமானதாக பண்டைய ஈழத்தமிழர் பக்55 குறிப்பிடுகின்றது. இக்காலத்தில் கிழக்கிலங்கையில் நிலவியிருந்த பாண்டியர் செல்வாக்கும் பாண்டிய நாட்டுக்கும் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்திற்கும் இடையிலிருந்து வந்த சமய சமூக கலாசார உறவுகள் என்பனவும் இதற்குத் துணை நின்றன. மேலும் இலக்கிய தொல்லியல் சான்றுகள் வாயிலாக இதனை ஆராயுமிடத்து இதற்கு முற்பட்ட காலத்திலேயே கண்ணகி வழிபாடு இப்பிரதேசத்தில் ஆரம்பமாகி விட்டதென்பதை அறியமுடிகின்றது.

ஈச்சிலம்பற்றையிலும் பத்திரகாளியம்மன் சிலையை சம்பூர் கடற்கரையிலும் கண்ணகி அம்மன் சிலையை மட்டக்களப்பின் தென்பாகத்தில் உள்ள ஊரிலும் வைத்து வழிபட்டதாக வரலாற்றுச் செய்தி உண்டு.

இச்செய்தியானது தமிழகத்திலிருந்து நேரடியாக இவ்வழிபாடு ஈழத்தின் கரையை அடைந்ததென்பதற்கு சான்றாக அமைகின்றது. ஈழத்தின் கிழக்குப் பகுதி பண்டைய தமிழகத்துடன் கொண்டிருந்த வர்த்தகத் தொடர்பால் இச்சிலைகளும் இவ்வாறு இப்பிரதேசத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்காலம். கஜபாகு காலத்தில் தமிழகத்தின் செல்வாக்கு ஈழத்தின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பரந்திருந்தமைக்கான இலக்கியத் தொல்லியல் சான்றுகளும் உண்டு.[16] இவ்வாறு அவர் குறிப்பிடுகின்றார். இதன் வாயிலாகக் கஜபாகு மன்னனது ஆட்சிக் காலமாகிய கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் கண்ணகி வழிபாடு இப்பிரதேசத்தில் அறிமுகமான தென்பதைக் குறிப்பிடுகின்றார். மேலும் மட்டக்களப்புத் தமிழக்தில் முதன் முதலாகக் கண்ணகி வழிபாடு திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்திலலேயே அறிமுகமான தென்பதை இவ்வரலாற்றுச் செய்தி தெளிவுறுத்துகின்றது எனலாம்.

இதேவேளை கஜபாகு மன்னனது ஆட்சிக் காலத்தில் கண்ணகி வழிபாடு இங்கு அறிமுகமாகவில்லை யெனலாம். இவனது ஆட்சிக் காலத்தின் பின்பே கி.பி.இரண்டாம் நூற்றாண்டளவில் இவ்வழிபாடு இப்பிரதேசத்தை வந்தடைந்தது, இதனை ஆய்வுகள் உறுதிசெய்கின்றன. கஜபாகு மன்னன் இலங்கையில் ஆட்சி புரிந்த காலம் கி.பி.171-193 வரையுள்ள காலமாகும். இதேகாலத்தில் சேரநாட்டில் ஆட்சிபுரிந்த செங்குட்டுவனால் நடத்தப்பட்ட

---

15. இக்காலத்தில் மட்டக்களப்பைத் தமிழ்ச் சிற்றரசர்கள் ஆட்சிபுரிந்து வந்தனர். இவர்கள் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தின் சமூக, சமய அபிவிருத்திப் பணிகளில் அதிக கவனம் செலுத்தி வந்தனர். சோழரது ஆதரவுடன் சித்திரவேலாயுதர் ஆலயம் திருப்பணி செய்யப்பட்டது. இவ்வாலயத்தில் பூசகர்களாகக் கடமை புரிவதற்காக மல்லிகார்ச்சுனபுரத்திலிருந்து (ஸ்ரீசைலம்) சங்கமர் என்ற வீரசைவர்வக்குருமார் வரவழைக்கப்பட்டுத் தம்பட்டையில் குடியேற்றப்பட்டனர். சங்ககாலத்துக்குச் சமமான இக்காலத்தில் முருகனின் அறுபடை வீடுகள் சிறப்புற்றிருந்ததை சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இதேபோன்று இப்பிரதேசத்தில் சித்திரவேலாயுதர் ஆலயமும் சிறப்புற்றிருந்தது.
(பண்டைத் தமிழ் மன்னர்கள் போற்றிய ஸ்ரீ சித்திரவேலாயுதர் உறையும் திருக்கோவில் பதி – கட்டுரை. தினகரம் வாரமலர் 03.08.1997. நா.நவநாயகமூர்த்தி)

16. ஈழத்து இந்துசமய வரலாறு பாகம் I பக்:264,265 பேராசிரியர். சி.க.சிற்றம்பலம் –1996

கண்ணகி விழாவுக்கு கஜபாகுவும் சென்று கலந்து கொண்டான். சேரநாட்டை செங்குட்டுவன் ஐம்பத்தைந்து வருடங்கள் ஆட்சிபுரிந்துள்ளான். இதனைப் பதிற்றுப்பத்து ஐந்தாம் பாடல் குறிப்பிடுகின்றது. இவன் கண்ணகிக்குப் படிமம் அமைக்கத்தொடங்கி வஞ்சியில் தங்கியிருந்தபோது இவனுக்கு ஆட்சியாண்டு ஐம்பதாகும்.

இதனை மாடலன் ''வையங்காவல் பூண்ட நின்யாண்டு
ஐயைந் திரட்டி சென்றநற் பின்னும் '' என உணர்த்துகின்றான். இந்நிலையிலேயே கண்ணகி விழா நடைபெற்றுள்ளது. ஆதலால் கண்ணகி விழா வஞ்சியில் நடைபெற்ற காலம் கி.பி.178 என்று கணிக்கலாம்.[17] ஆதலால் கஜபாகு வஞ்சியில் நடந்த கண்ணகி விழாவுக்கு வந்த காலம் கி.பி.178 ஆகும். இதன் பின்னர் இவன் இலங்கையில் பதினைந்து ஆண்டுகளே (கி.பி.193 வரை) ஆட்சிபுரிந்துள்ளான். இக்கால கட்டத்தில் மட்டக்களப்புத் தமிழகத்தின் எப்பாகத்திலும் கண்ணகி வழிபாடு அறிமுகமாகியிருக்கவில்லை. இதற்குப் பிற்பட்ட காலத்திலேயே கி.பி.2ம் நூற்றாண்டளவில் மட்டக்களப்பின் தென்பகுதி யாகிய திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு அறிமுக மானது[18] என்பதை அறியமுடிகின்றது.

கி.பி.இரண்டாம் நூற்றாண்டளவில் பாண்டிய நாட்டின் மதுரையி லிருந்து கொண்டுவரப்பட்ட செண்பகச் செல்வி என்ற கண்ணகி விக்கிரகம் தம்பிலுவிலைச் சேர்ந்த ஊரக்கை என்னுமிடத்தில் ஆலயமொன்றமைத்துப் பிரதிஸ்டை செய்யப்பட்டது.[19] இக்காலத்தில் திருக்கோவில் தம்பிலுவில்

---

17. ஆரியதிராவிடமும் அழிந்துபோன சங்கங்களும் – பக்.88,89 துரை ஜெகநாதன் பதிப்பு1982
18. கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் கண்ணகி வழிபாடு மட்டக்களப்பில் பரவியிருந்தது இவ்வாறு தொல்லியல் ஆய்வாளர் திருமதி ஜி.தனபாக்கியம் (மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி.பக்81) குறிப்பிடுகின்றார். திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு இக்காலத்தில் பரவியிருந்தமையையே இது குறிக்கும். இங்கிருந்தே பிற்காலத்தில் இவ்வழிபாடு பட்டிநகர், வீரமுனை, பாணகை ஆகிய இடங்களுக்கும் சென்றது. மட்டக்களப்பில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிக் கண்ணகை அம்மன் பறந்து வந்தனள் என்று வழங்கும் கதைகள் இதனைத் தெளிவுறுத்துகின்றன.
19. மதுரையில் கண்ணகிக்கு செண்பகசெல்லி என்ற பெயரில் ஒரு கோயில் உண்டு. இங்குதான் கண்ணகியை பிடாரியம்மன் என்ற கிழவியிடம் கோவலன் கொலை செய்யப்படுவதற்கு முன் விட்டுச் சென்றான். இங்கிருந்துதான் முந்தைய திருவாங்கூருக்கு கண்ணகி புறப்பட்டுச் சென்றதாக சிலம்பு கூறுகின்றது.(தொல்லியல் சிந்தனைகள் – பக்.49 நா.நவநாயகமூர்த்தி– 1995)

பிரதேசத்தில் வாழ்ந்து வந்த தமிழிரிடையே பௌத்த மதமும் நிலைத்திருந்தது. இதே காலகட்டத்தில் தமிழகத்தின் பாண்டிய நாட்டிலும் இந்நிலையே நிலவியிருந்தது. இது வரலாற்றுண்மையாகும். இந்நிலையிலே திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு அறிமுகமானது. இக்காலம் தொடங்கி கண்ணகி வழிபாடாகவும் பத்தினி வழிபாடாகவும் விளங்கி வந்த இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு இந்து பௌத்த மதங்களைச் சேர்ந்த தமிழர்கள் மட்டுமன்றிப் பௌத்த சிங்களவர்களும் ஆதரவளித்து வந்துள்ளனர்.

மேலும் இக்காலம் (கி.பி.இரண்டாம் நூற்றாண்டு) தொடக்கம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையும் (கி.பி.1215) பத்தினி வழிபாடு என்ற கண்ணகிவழிபாடு இப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்த மக்களிடையே செழித்திருந்தது என்பதையும் அறியமுடிகின்றது. பௌத்த சிங்கள அரசர்களும் தமிழ் அரசர்களும் தமிழச்சிற்றரசர்களும் இதற்குத் தங்கள் ஆதரவை அளித்து வந்துள்ளனர். அக்காலத்தில் (கி.பி2ம் நூ - கி.பி.12ம்நூற்) பத்தினித் தெய்வமாக வும் கண்ணகை அம்மனாகவும் இப்பிரதேச மக்களால் போற்றப்பட்டுவந்து ஊரக்கை கண்ணகை அம்மன் ஆலயத்தின் (வழிபாடு) தொடர்ச்சியே தற்போதுள்ள தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயமாகும்.

கி.பி.பதினோராம் நூற்றாண்டளவில் இலங்கையில் ஆட்சிபுரிந்து வந்த முதலாவது விஜயபாகு (கி.பி.1056- 1111) தம்பிலுவில் ஊரக்கையில் குடிகொண்டிருந்த கண்ணகை அம்மன் மீது அளவற்ற பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருந்தான். சிங்கள பௌத்தனான இம்மன்னன் ஊரக்கையில் குடிகொண் டிருந்த பத்தினித் தெய்வமான கண்ணகிக்கு நன்கொடைகளும் வழங்கியுள்ளான். இதனைக் கிராமிய இலக்கியமொன்று குறிப்பிடுகின்றது. மேற்படி நாட்டுப் பாடலில் முதலாம் விஜயபாகு மன்னன் சோழரது ஆட்சியிலிருந்து இலங்கையை விடுவிப்பதற்காக முயற்சித்துக் கொண்டிருக்கும் வேளையில் எதிரிகளுக்கு எதிராகப் பொலநறுவையில் இரு கத்தித்தாக்குதல்களுக்குத் திட்டமிட்டான். அவன் ஒரு இராணுவப்பிரிவை மேற்கு மலைகளினூடாகவும் அடுத்த பிரிவை கிழக்கு மாகாணத்தின் சாகாமம் (தம்பிலுவில்) ஊடாகவும் அனுப்பி வைத்தான்.

இவ்வேளையில் கிழக்கு மாகாணத்தினூடாகச் சென்ற இராணுவத் தளபதி தம்பிலுவில் சாகாமத்தைக் கைப்பற்றினான். இதனைத் தொடர்ந்து இவன் பத்தினிக் கோயிலைச் சென்றடைந்து இங்கு கோயில் கொண்டிருந்த

பத்தினித் தெய்வமான கண்ணகியை வணங்கினான். பின்பு கண்ணகியை நோக்கி அரசனுடைய (முதலாம் விஜயபாகு) வெற்றிக்கு அருள்புரிந்தால் நிலங்களும் தங்கநகைகளும் ஆலயத்திற்கு நன்கொடைகளாக அளிப்பார் என்று பத்தினித் தெய்வத்திடம் வாக்குறுதி அளித்தான். இதனைத் தொடர்ந்து விஜயபாகு மன்னன் இலங்கையில் தனது அரசியல் அதிகாரத்தை நிலைபெறச் செய்தான். இதன் பின்னர் முதலாம் விஜயபாகு மன்னன் இவ்வாலயத்திற்குப் பாதயாத்திரையாக வந்து வணங்கி காணிக்கைகளையும் நகைகளையும் தங்க மாம்பழம் ஒன்றையும் நன்கொடைகளாக வழங்கினான்.இவ்வாறு கிராமிய இலக்கியம் குறிப்பிடுகின்றது.[20] இக்காலம் தொடக்கம் கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டு மாகோனது ஆட்சிக் காலம் (கி.பி.1215) வரையும் இப்பிரதேசத்தில் கண்ணகிவழிபாடு உன்னதநிலையில் இருந்தது. இக்காலத்தில் கண்ணகி என்ற பத்தினியின் ஆலயம் ஊரக்கை ஆற்றுக்கு வடக்கேயுள்ள மேட்டுப் பகுதியின் தென்கிழக்கில் அமைந்திருந்தது.[21]

கி.பி.1215ல் தமிழ் மன்னனான மாகோன் இலங்கை மீது மேற்கொண்ட மதாீதியான படையெடுப்பானது இப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்த மக்களது வாழ்வில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின. குறிப்பாக இடம் பெயர்வுகள் சமூக, சமய மாற்றங்கள் என்பனவற்றுடன் இப்பிரதேசத்தில்

---

20. A Center of Folk Religion for Sinhalese and Tamils கட்டுரை Mr.N.Tharmalingam. The Ilannd 8.6.85
சூளவம்சம், கந்தஉபாத என்னும் நூலகள் முதலாம் விஜயபாகு திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்துடன் கொண்டிருந்த நெருங்கிய உறவுகள் பற்றி விபரிக்கின்றன.
முதலாம் விஜயபாகு வழங்கிய பொற்சிலம்பு, அம்மானைக் காய் என்பவற்றை தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயத்தில் இன்றும் காணலாம் . தங்கமாம்பழம் சில வருடங்களுக்கு முன்னர் ஆலயத்தில் நடந்த திருட்டுச் சம்பவத்தின்போது காணாமல் போனது. (தகவல்: பெரியவர்: திரு.அ.கணபதிப்பிள்ளை அவர்கள் – இளைப்பாறிய அதிபர்)

21. இதனை திரு.அ.கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்) திரு.ச.சங்கரப்பிள்ளை (முன்னாள் கிராமசபைத் தலைவர்) திரு.மா.சங்கமப்போடி போன்ற பெரியோர்களும் உறுதிசெய்கின்றனர்.சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு இம்மேட்டுப் பகுதி காடாகவிருந்த வேளைமில் 1963, 64 களில் எனது பாட்டனாரான திரு.சி.தம்பிமுத்து (அதிகாரியார்) அவர்கள் இந்த இடத்தை எனக்குக் காண்பித்தார். அவ்வேளைமில் அவர் என்னிடம் இங்கு பழைய காலத்தில் ஓர் ஆலயம் இருந்து அழிந்ததாகக் கூறினார். அதற்கான தடயங்களை அப்போது அங்கு காணக் கூடியதாகவிருந்தது. உடைந்த கற்றூண்கள், கட்டிடஅழிபாடுகள் என்பன இவற்றில் அடங்கும். இந்த இடம் தொடங்கி மேற்கே சாகாமம் வரையுள்ள மேட்டுப் பகுதிகளில் ஆதி காலத்தில் மக்கள் வாழ்ந்திருந்தமைக்கான சான்றுகளை பிற்காலத்தில் என்னால் அவதானிக்க முடிந்தது.

செழித்திருந்த பத்தினி வழிபாடு என்ற கண்ணகி வழிபாட்டிலும் பாதிப்பினை ஏற்படுத்தியதெனலாம். ஆயினும் இந்நிலை நீண்ட காலம் நீடித்திருக்கவில்லை. கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டில் பாண்டியர் இலங்கையை ஆட்சிபுரிந்த காலத்திலும் அதனைத் தொடர்ந்தும் (கி.பி.1284 - 1311) கண்ணகி வழிபாடு இப்பிரதேசத்தில் செழித்திருந்தது. இது வரலாற்றுண்மையாகும். இக்காலத்தில் இப்பிரதே சத்தில் வாழ்ந்து வந்த தமிழ்ச் சைவர்கள் தமிழ்ப்பெண்ணான கண்ணகியைத் தங்கள் குலதெய்வமாக வழிபடத்தொடங்கினர். அத்துடன் பயபக்தியுடன் கண்ணகி அம்மன் என்றும் தாயார் என்றும் வழிபட்டு வந்தனர்.

கி.பி.பதினாலாம் பதினைந்தாம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத்தமிழ் அரசன் செல்வாக்கு கிழக்கிலங்கையின் கூமுனை வரையும் நிலைத்திருந்தது. யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிந்து வந்த மன்னர்கள் கண்ணகி வழிபாட்டை ஆதரித்து வந்தனர். செயவீரன் (கி.பி.1380-1410) என்ற இயற்பெயரைக் கொண்ட ஐந்தாம் செகராசசேகரன் கண்ணகி வழக்குரை என்ற காவியத்தை இயற்றினான். இக்காவியத்தில் வீரமுனைக்கு அருகாமையில் அமைந்திருந்த பண்டைய மட்டக்களப்பு நகர் பற்றிய குறிப்புக்கள் உண்டு (தூரியோட்டுகாதை: பாடல்151) இலங்கையில் யாழ்ப்பாணத் தமிழ் அரசர்களின் அரசியல் செல்வாக்கு நிலவி யிருந்த இக்காலத்தில் மட்டக்களப்பில் (அம்பாரையை உள்ளடக்கியிருந்த மட்டக்களப்பு) அதிகாரம் செலுத்தி வந்த வன்னியர் என்ற சிற்றரசர்கள் யாழ்ப்பாண மன்னரின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தனர்.[22] இச்சிற்றரசர்கள் கண்ணகி வழிபாட்டை ஆதரித்துவந்தனர். இக்காலத்தில் (கி.பி.14ம் 15ம் நூற்.) திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு உன்னத நிலையிலிருந்தது.

கி.பி.1450 ம் ஆண்டில் கோட்டை மன்னனான ஆறாம் பராக்கிரமபாகு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிப் பதினழுவருடங்கள் ஆட்சி புரிந்தான். இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பில் ஆட்சிபுரிந்து வந்த வன்னியர் என்ற முக்குவ மன்னர்கள் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாக ஆட்சிபுரிந்து வந்தனர். கி.பி.1595ம் ஆண்டுவரையும் குறிப்பாக மட்டக்களப்பு (நகரப்பகுதி)என்ற பெயரினைப்

22. வன்னியர் என்ற சிற்றரசர்களை மட்டக்களப்பைச் சேர்ந்த முக்குவ மன்னர்கள் என்று வரலாற்றாசிரியரான திரு.கே.எம்டி.சில்வா அவர்கள் குறிப்பிடுகின்றார். கி.பி.1330–1450 வரையுள்ள காலம் இவர்கள் யாழ்ப்பாண மன்னரின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தனர்.

பெற்றிருந்தது. மட்டக்களப்பு வாவியின் தென் எல்லைப் பிரதேசமாகும். சம்மாந்துறை வீரமுனை, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, நிந்தவூர், அட்டப்பள்ளம் (சிங்காரபுரம்) களியோடை, (காளிஓடை) ஒலுவில் திராய்க்கோணி, மீனோடைக் கட்டு ஆகிய இடங்களை இப்பிரதேசம் உள்ளடங்கியிருந்தது. இது வரலாற் றுண்மையாகும்.

இப்பிரதேசத்தில் அக்காலத்தில் அம்மன் வழிபாடு சிறப்புற்றிருந்ததை சமய சமூக ஆய்வுகள் தெளிவுறுத்துகின்றன. சிங்காரபுரமாரியம்மன் (அட்டப் பள்ளம்) ஆலயம் ஸ்ரீ மடத்திடி (ஒலுவில்) மீனாட்சி அம்மன் ஆலயம். காளிஓடைக் காளிகோயில், வீரமுனை கண்ணகை அம்மன் ஆலயம். என்பன இதற்கச்சான்றுகளாகும். இதேபோன்று இக்காலத்தில் (கி.பி.1450 -1595) திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் பட்டிநகரிலும் (அக்கரைப்பற்றுப் பிரதேசம்) கண்ணகி வழிபாடு செழித்திருந்தது. இவ்வாறு மட்டக்களப்பு தென்பகுதியில் கண்ணகி வழிபாடு செழித்திருந்த காலத்திலேயே கண்டி மன்னனான செனரதன் காலத்தில் (1605 -1635) மட்டக்களப்பின் வடபகுதியில் நிகழ்ந்த நாடார்குடியேற்றங்களினால் கண்ணகிவழிபாடு மட்டக்களப்பின் வட பகுதியில் அறிமுகமானது என்பதை வாரலாற்றய்வுகள் தெளிவுறுத்து கின்றன. இதே காலத்தில் பண்டைக் காலத்தில் தம்பிலுவில் ஊரக்கையில் அமைந்திருந்த கண்ணகை அம்மன் ஆலயத்தின் தொடர்ச்சியாகத் தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயம் விளங்கியிருந்தது.

கண்டி மன்னர் காலம்

கி.பி.1595-1803 வரையுள்ள கண்டிமன்னர்களது காலத்தில் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு சிறப்புற்றிருந்த மைக்கு இலக்கியத் தொல்லியல் சான்றுகள் உண்டு. கண்டியுடன் இப்பிரதேசம் கொண்டிருந்த நெருக்கமான உறவுகள் இப்பிரதேசத்தின் கண்ணகி வழிபாட்டு வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வந்துள்ளன எனலாம். கண்டியில் ஆட்சி புரிந்து வந்த சிங்கள அரசர்களும் நாயக்க மன்னர்களும் கண்ணகி வழிபாட்டை ஆதரித்து மானியங்கள் வழங்கி வந்துள்ளனர். இரண்டாம் இராச சிங்கன் காலத்தில் (கி.பி.1635-1687) இப்பிரதேசத்தில் ஏற்பட்ட கொடிய வரட்சியின் போது இம்மன்னன் தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயத்தைத் திறந்து விசேட பூசைகள் புரியும்படி பணித்துள்ளான். இவ்வேளையில் தம்பிலுவிலில்

தோன்றிய இலங்கியமொன்று இம்மன்னனையும் புகழ்ந்துரைக்கின்றது.

கண்டிமன்னனான ஸ்ரீ வீர நரேந்திர சிங்கன் (கி.பி.1706 -1739) காலத்தில் தம்பிலுவில் தம்பட்டையைச் சேர்ந்த வீரசைவக்குரு ஒருவர் சித்திர வேலாயுதர் ஆலயத்தில் அர்ச்சகராக கடமைபுரிந்து வந்தார். இவர் ஒரு சமயம் கண்டி நகருக்குச் சென்றிருந்தார். அவ்வேளையில் மன்னனைத் காணவும் அவனுடன் உரையாடி மகிழ்ந்து பரிசுகள் பெறவும் விரும்பினார். இதனைக் கருத்தில் கொண்ட அவர் அரசவையைச் சென்றடைந்தார். அரசவையில் திசாவைகள் முதலிய பிரதானிகள் சூழ்ந்திருக்க கண்டி மன்னனான ஸ்ரீ வீரநரேந்திர சிங்கன் அழகிய ஆசனத்தில் அமர்ந்திருந்தான்.[23] இவ்வேளையில் அர்ச்சகர் அரசவை சென்றடைந்து மன்னனை வாழ்த்தி ஆசிர்வதித்தார். இதனை கண்ட மன்னன் உளம் மகிழ்ந்து அர்ச்சகரது வரலாற்றினைக் கேட்டறிந்தார்.

இவ்வேளையில் அரசவையிலிருந்த திசாவைகள் அரசரைப் புகழ்ந்து தங்களால் கவியொன்று பாடமுடியுமா என்று கேட்டார். அரசர் சம்மதித்தால் அவரைப் புகழ்ந்து கவிதை யொன்று பாடமுடியும் என்று அர்ச்சகர் பதிலளித்தார். இதனைக் கேட்ட கண்டிமன்னன் மனம் நெகிழ்ந்து தன் மீது கவிபாட அனுமதி யளித்தான். இதனைத் தொடர்ந்து அர்ச்சகர் கவிபாடத் தொடங்கிய பொழுது ''கன்ன மதத்தண்ணல் பதங்காப்பதாமே" என்று விநாயகப்பெருமானைப் போற்றினார்.[24] இதன் பின்னர் தனது வழிபாட்டுக்குரியவரான திருக்கோவில் சித்திரவேலயுதரை மனதில் தியானித்து இவ்வாறு பாடுகின்றார்.

காம்பழகுந் தாதகியின் பூப்பழகு மாலைமார்பன்
கண்டிவாழ்ந நரேந்திர சிங்க காவலன் மீது
நாப்பழகுஞ் செந்தமிழ்ச் சொல்வாய்ப் பிழை வராமலென்றும்
நந்து திருக்கோவில் வாழுங் கந்தர் துணையாமே.
(நரேந்திர சிங்கன் பள்ளு- 2ம்பாடல் 1- 4வரிகள்)

23.தமிழ்ப் பெண்ணைத் தாயாகக் கொண்டிருந்த இவன் பௌத்தனாமினும் பிறமதத்தவர்களுடன் நியாயமாக நடந்து கொண்டவனாவான். இவன் தமிழர்களுடன் நல்லுறவுகள் கொண்டிருந்தான். இவனுடைய ஆட்சியில் மதுரை, தஞ்சை முதலிய இடங்களிலிருந்து தமிழர்கள் கண்டிக்கு வந்து குடியேறினார். (புதுமுறைச் சரித்திரம். பகுதி-2 V.S.S.ராம் T.V.K.மூர்த்தி -1961

24. கண்டி மன்னன் வீரநரேந்திர சிங்கனைப் புகழ்ந்து பாடிய மட்டக்களப்பு புலவர் - கட்டுரை - வீரகேசரி வாரமலர்-15.11.1998.

கண்டி மன்னனைப் புகழ்ந்து பாடத் தனக்கு அருள்புரியுமாறு சித்திர வேலாயுதரை இவ்வாறு அர்ச்சகர் வேண்டினார். இதனைத் தொடர்ந்து தனது பிறந்த ஊரான தம்பிலுவிலில் கோயில் கொண்டிருக்கும் கண்ணகை யம்மனையும் பணிந்தார்.

கந்த நறுஞ் சண்பகப்பூமாலை மார்பன் தென்னிலங்கை
காவலன் நீள் மாவலி கங்கைக் குடையோன்
சந்தனப்பு யாசலனைச் செந்தமிழினால் வழுத்தத்
தம்பிலுவிற் கண்ணகைத் தாய் தஞ்சநமக்கே.
(நரேந்திர சிங்கன் பள்ளு: பாடல் 3, வரி 1 -4) 25

இதனைத் தொடர்ந்து அர்ச்சகர் மன்னரைப் புகழ்ந்து கவியொன்று பாடி முடித்தார். இக்கவியைக் கேட்ட மாத்திரத்தில் கண்டி மன்னனான ஸ்ரீ வீர நரேந்திரசிங்கன் மிகவும் மகிழ்ச்யுற்றுப் பரிசுகள் பலவற்றை அர்ச்சகருக்கு வழங்கி அவரைக் கௌரவித்தான். இதன் வாயிலாக கண்டி மன்னன் காலத்தில் இப்பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு சிறந்திருந்ததென்பதை அறியமுடிகின்றது.

கண்டி மன்னர் காலத்தைத் தொடர்ந்து தம்பிலுவிலில் கண்ணகி வழிபாடு செழிப்புற்றிருந்தது. இதனை இலக்கியங்கள குறிப்பிடுகின்றன. இக்காலத்தில் மட்டக்களப்புத் தமிழகத்தில் பத்தினி வழிபாடு என்ற கண்ணகி வழிபாடு சிறந்திருந்த ஊர்களில் தம்பிலுவிலும் ஒன்றாகும் என்பதை 'ஊர் சுற்றும் காவியம்' என்ற இலக்கிய வடிவம் குறிப்பிடுகின்றது. ஒரு சமயம் மட்டக்களப்புத் தமிழகமெங்கும் மழைகுறைந்து வரட்சி நிலவியிருந்த வேளை யில் புலவர் ஒருவர் மட்டக்களப்புத் தமிழகத்தில் கோயில் கொண்டுள்ள கண்ணகை அம்மனை நோக்கி மழைபொழிய வைக்குமாறு இரந்து வேண்டு வதாய் இக்காவியப் பாடல்கள் அமைந்துள்ளன. பதினேழு பாடல்களைக் கொண்ட இக்காவியத்தில் தம்பிலுவிலில் கோயில் கொண்டுள்ள கண்ணகை அம்மன் பற்றியும் ஒரு பாடல் இடம் பெறுகின்றது. இதனை

''அம்பிகை சடாற்சரி மனோகரி பராபரி
ஆனந்த ரூபி அகிலாண்ட நாயகி
துட்பிழுகனைப் பெற்ற காரணி நாரணி
தூய பங்கயபாத பூரணிமாதங்கி
நம்பும்படி யார்கள்வினை யோயகல நாளும்

நயமான மழைதந்து நெல்விளைவு தருவாய்
தம்பிலுவில் மாநகரில் வீற்றினிதிருக்கும்

தாயேயி ரக்கமுள்ள தருமதேவ்தையே. என்ற பாடல் (ஊர்சுற்றும் காவியம் 16ம் பாடல்) குறிப்பிடுகின்றது. இக்காலத்தில் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் வாழ்ந்திருந்த தமிழ்ச்சைவரிடையே கண்ணகை அம்மன், உமாதேவியாராகவும் வழிபடப்பட்டு வந்துள்ளார் என்பதை இப்பாடல் தெளிவுறுத்துகின்றதெனலாம்.

இதற்குப் பிற்பட்ட காலத்தில் அதாவது பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காரைதீவுக் கிராமத்தில் தோன்றிய உடுக்குச் சிந்து என்ற கிராமிய இலக்கியம் அக்காலத்தில் மட்டக்களப்புத் தமிழக்தில் கண்ணகி வழிபாடு உன்னதநிலையில் இருந்ததை உறுதிசெய்கின்றது. இக்கிராமிய இலக்கியம் அக்காலத்தில் மட்டக்களப்புத் தமிழகத்தில் (அம்பாரையை உள்ளடக்கியிருந்த மட்டக்களப்பு) தென்பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் கொண்டுள்ள இடமான தம்பிலுவில் பழம்பதியில் தொடங்கி வடக்கு நோக்கி எல்லா ஊர்களையும் வாழ்த்திச் செல்கின்றது. எழுபத்திரண்டு பாடல்களைக் கொண்ட உடுக்குச் சிந்து இலக்கியத்தில் முறையே 35ம், 69ம், 70ம், 71ம் பாடல்கள் தம்பிலுவில் கண்ணகி பற்றிக் குறிப்பிடுகின்றன.

இவற்றில் எழுபதாம் பாடலில்

''பத்தியொடு தொழுவோர்கள் இடது கலவருள்கொண்டு
பண்டுசெறி தம்பிலுவில் பட்டிமாநகரம்

மொய்த்த புகழ் வீரமுனை, கல்முனை, கல்லாறு. என்ற வரிகள் வாயிலாக (70ம்பாடல்: 1 -3 வரி) இவ்வூரில் நெடுங்காலந்தொட்டு கண்ணகி வழிபாடு நிலவி வருகின்றது என்பதையும் அறியமுடிகின்றது. அத்துடன் இவ்வூரிலிருந்து கண்ணகி வழிபாடு பட்டிநகர், வீரமுனை ஆகிய இடங்களையும் சென்றடைந்ததையும் இப்பாடல் வரிகள் தெளிவுறுத்துகின்றன.

---

25. மட்டக்களப்பு வந்தன் கவித்திரட்டு – பக்:4 தொகுப்பாசிரியர் தி.சதாசிவஐயர்.1940.

தம்பிலுவில் மழைக்காவியம்

அரியபுவி மகழுமலை கடலிலுறை பவனும்
அரவுதனை அணிபவனு மலையரசன் மகளுமையும்
பெரியதவ முனியுமிரு டிகளுமல ரயனும்
பெருமை செறிகலைமகளு மூர்வசியு மிந்திரனும்
தெரிவரிய உனதுபத மலரயனு தினமும்
தெண்டனிட் டடிபணிய வேமனமி ரங்கி
விரிவுசெறி குளமதுகள் நிறைமழை பொழியவருள்
மேவிவள ரைந்துகர விக்கினேஸ் வரனே. 1.

ஆழமுறு கடலிநீர் வானமது வருஷித்து
அகலமுறும் ஆறுகுளம் நிறைய மழைபொழியக்
கோளதுகு ணக்கிடப ராசியது மேவியுங்
கொடியவெயி லல்லாது மழையில்லை யம்மா
நாளது தெரிந்துமறை வேதியர்க ளோதவே
நாங்கள் படுதுயர் கண்டு தாங்கரிய வெள்ளம்
தாழமுறு குளமதுகள் நிறையவே யுன்கிருபை
தந்துதவு தம்பிலுவில் தங்குமாதாவே. 2.

வில்லிடப மலவனோடு கோள்கும்ப ராசிகளில்
மேவியுற வாய்வெள்ளி மேவுநா ளதனில்
நல்லமதி யனையகே சரியோக முற்று
நன்மை பெறு குருசந்ர னானதின் பின்பு
சொல்லரிய இடமுற்ற நேரமதின் முகில்கள்
சொரிகின்ற சோனைமழை யெனவே பொழிந்து
நெல்விளைவு பெறவுனது திருமன மிரங்கி
நிமிஷத்தில் மழையுதவு மலருமுக மயிலே. 3.

மலரழக மதுகுலைய வளருமிள முலைகுழைய
வடிவுறுமுன் இடைதுவள மதிநுதலி லேவேர்வை
திலகமெழு தியதழிய வெயிலின்மிசை புழுகொழுகு
திருமேனி கருகவெளி வரவேணு மோதான்
உலகமுழு தும்பெற்ற தாயல்லோ மழைவெள்ள
மொருநாழி கைப்பொழுதி லுதவவொண் ணாதோ
குலதில வணிகர்குல வனிதையே தம்பிலுவிலில்
குடிகொண்ட பத்தினிக் கோதைமா தாவே. 4.

செப்பினுள் அலைகடலின் மீதுமுன்னிருந்தாய்
இட்டமா யாரிடசேரியில்வ ளர்ந்தாய்
கொப்புமா வின்கனிய தாகமுன்னிருந்தாய்
கோகனக தம்பிலுவில் கோயிலி லமர்ந்தாய்
இப்புவூரக்கவெளி யாற்றிடையி ருந்தாய்
யெப்பம்மா மழைதருவ தென்றினிதிந்தாய்
தப்பினா லுலகமுறு வார்கள் துயர் கண்டாய்
தற்பரா பரனுதவு சக்திகண் ணகையே. 5.

தண்ணீரில் லாமல்வயல் சாலிகளிளங்கதிர்கள்
தலைசோர வயலிலுள்ள சனமது தவிக்கக்
கண்ணீரி னால்முழ்கி நினைவுதுய ரன்றிக்
கண்கலக் கப்படுங் கவலையறி யாயோ
மண்ணீரி னால் நுரை மிதக்கருதி யோடியே
வரவெள்ள மிப்பவொரு மழையருள வேணும்
பெண்ணீர்மை யானகுண காரணச் செல்வியே
பேசுதம் பிலுவிலுறை பெண்ணரசி யாரே. 6.

எந்தவித மானபிழை செய்தாலும் நீபொறுத்
தேழையடி யார்களென வேமனமி ரங்கி
நொந்தகண் ணாயிப்போ ஆற்றிலொரு மழைவெள்ளம்
நூதனம தாகவே நீயருள வேணும்
கொந்தழகு விழிமட வார்கள் நீரோடை
கொண்டாட வாவிதனில் நின்றாடு மலரில்
தெந்தெனதென னாவென்று வண்டிசைகள் பாடவரு
தம்பிலுவி லூர்தழைய வந்தமா தாவே. 7.

கப்பல்திசை கெட்டது கரைக்குளடை யாதோ
கட்டையினில் வைத்த பிணமற்றுயிர் கொள்ளாதோ
உப்பளமதிற் பதர்வி தைக்க விளையாதோ
உத்தரவு ஊமையனு ரைக்க வறியானோ
செப்பு பிறவிக் குருடு இப்பதெளி யாதோ
சிப்பிவளர் முத்துக்கள் நதிக்குள் விளையாதோ
செப்பமுடன் உன்கிருபை வைத்திடுவை யானால்
சீர்மேவு தம்பிலுவில் சேரும் மாதாவே. 8.

கெற்பமா யுலகமதி லவதரித் தாயே
கேளுடைய பாலூறக் கிருபைவைத் தாயே
நெற்றாகி யேபயிர்கள் வாடுதலைக் கண்டும்
நின்றழுத பேர்மகிழ வின்னுமழை தாராய்
அற்பனென் றென்னையி கழ்ந்தாலுமிப்பாடல்
தனிலுள்ள சீர்தளைக் காயினுமிரங்கி
சற்பமா மணிநூபு ரத்திமுரு கேசர்வளர்
தம்பிலுவிலி லூரிலுறை யுலகமா தாவே. 9

தேனுலவு கற்பக தருநிழலில் நிற்பவனின்
தேவகிம ணித்தவிசின் மீதுறையு னக்குக்
கானது வடத்துமண லாற்றிடை மணற்பரவு
காவண மதிக்கவிதி யெதுவகைசெய் யம்மா
வானமுள மட்டுமழை யின்றுதரு வாயே
இல்லைமழை வெள்ளம் நாளைவர வேணும்
பானல்மொழி நற்கருணை மாரிசொரி விப்பாய்
பார்புகழ்சேர் தம்பிலுவில் வாழுமா தாயே 10.

கற்புநெறி தவறாத நீடுபயில் மங்கையர்கள்
கானல் வெயில் மூடுபனி காவணமிருப்ப
எப்போநீ தம்பிலுவில் வந்துறைந் தாயே
இன்னமொன் றில்லையே யென்னநினை வம்மா
வெப்புவெயில் கானலது பகலெலாம் வீச
வீழ்பனியால் முழுமேனியும் நனைய
இப்படியு னக்குவரம் வந்ததே தம்மா
செப்பமுட னேமழை தந்தருள வேணும். 11.

கடல்கடைய உலகில்முளம் அமுதொடு பிறந்தாய்
கலைதெரிய மதுரைநகர் வழுதியை முனிந்தாய்
விடவரனின் மணியையொரு தரிசியி லணிந்தாய்
மிதுலைதனில் மலையரசன் மகளென வளர்ந்தாய்
அடவிதனில் மருதடியில் விடுதிவிட வந்தாய்
அரகரா உனதருமை யுடலிடையில் நொந்தாய்
திடுதிடென மழையுதவு சடுதியி லெழும்பாய்
சீருலவு தம்பிலுவில் வாழுமா தாயே. 12.

அட்டவகை யானதொழில் செப்பநட வாதோ
அறிவில்லா தவனுமுல கரசுபுரி யானோ
பட்டமர மானதுத ழைத்துவள ராதோ
பழமைசெறி கிழவமா ரிளமைபெ றாரோ
இட்டமழை கோடையினி லிப்பமொழி யாதோ
விட்டவெளி யும்முழுவி ளைச்சல் விளை யாதோ
திட்டமுட னுன்கிருபை செய்திடுவை யானால்
சீருலவு தம்பிலுவில் வாழுமா தாவே. 13

சோதிமதி பானுகழல் பொய்த்திடினு மேலோர்
சொன்ன மொழி தவறாத குறிதவறி னாலும்
காதலுற வேதவிதி பொய்த் திடினு முனது
கற்புநெறி பொய்த்ததொரு காலமதி லுண்டோ
காதலடி யார்கள்பணி விடைகார னுன்னுடைய
கட்டாடிகண் ணப்பனுக் காயினு மிரங்கி
மோதுகுளிர் தாரைமழை நீயருள வேணும்
கோகனக தம்பிலுவில் வாழுமா தாவே. 14

மாதுவளர் தம்பிலுவி லூர்வாழ வாழி
வரிசைசெறி வணிகர்குல மாதுமையும் வாழி
நீதிசெறி கண்டிமகா ராசசிங்கன் வாழி
நீலமயி லேறுகதிர் வேல்முருகர் வாழி
வேதமுட னைந்தெழுத் தோதுவோர் வாழி
வெண்ணிறு சிவசமய மும்வாழ வாழி
பாதிமதி சூடுமரன் பாதமற வாமற்
பாடினவர் வாழிகதிர் காமமும் வாழி. 15.

கண்ணகி அம்மன் பள்ளு

தானே தானே தந்த தானின தானா தனம் தன
தானே தானே தந்த தானின தானா.

1. பூலோக செல்வ மிகவே வும்தம்பிலுவில்
பூமாது கண்ணகை தன்புகழ் பாடவே!

2. மேலோகமும் துதிசெய் மாலோக மானமத
வேழமுகன் பாதம்துணை வேணும் நமக்கே'

3. வேண்டிய தமிழால் அன்புபூண்ட வசந்தன் இசையை
மெல்லியல் கண்ணகை செல்விமீது பாடவே

4. இன்றிய திரைக்கடல் சூழ் தென்திருக்கோயில் குமரன்
ஏக சரசோதி என்னும் மாதும்துணையே.

5. மாதம் ஒருமூன்றுமழை நீதிதவறாது பெய்தல்
மாமதுரை மாறன் என்னும் மன்னன்மகிழ்ந்தே

6. ஆதரவாய் தாயெடுத்த சூதநறு மாங்கனியில்
அன்றரிய பெண்மதலை ஆனகன்னியே

7. ஆனபொழுதே திருடும் ஆனதூதன் மாகெணிதர்
ஆனவரை ஏ வினவ ஆனவர் எல்லாம்

8. மீனவா உனக்கு நன்மை ஆனதில்லை என்றவுடன்
வேறும் ஒரு பெட்டகத்தில் வாருடன் வைத்தே.

9. வைகை நதிமீதில் விடதுய்ய திரைவார்கடலில்
வந்து மிதந்தே முழுங்கி நன்று வளர்ந்தேன்.

10. செய்கை மணிஇதும் உயர் செந்நீவளநாடுதுதி
செல்வ வருமானாகர் செல்வியும் நீயே

11. செல்வமிகவே வளருநாளில் வணிகேசனின்சொல்
தெய்வ லோகமும் சோழனும் சிந்தையில் உற்றே.

12. நல்லரவில் மாமணிமீகாமன் கொண்டுவாரும் என்று
நல்வரவும் ஈந்தனுப்பும் நாயகி நீயே.

13. நாயக மாதான பரமேஸ்வரன் திருச்சடையில்
நன்றி பெறவே முடித்த நாகமணியே

14. தூயபதம் என்சிலம்பின் ஆயதரிசாய் அணிந்து
தொல்புகழ் படைத்த நல்ல தோகையும் நீயே

15. தோகை மடமாதர் செறிமாறன் என்னும் கோவலனை
தோள் இனியதாயமலர் தொங்கல் சூடியே.

16. அவர்பாதம் அகலாது மனைவியாய் இருந்து
உம்முடைய பார்புகழ வந்ததெய்வ பத்தினி நீயே.

17. பத்திரவாய் உத்திரவிழி மாதவிதன் மாயவலைப்
பட்டு உழலும் கோவலனை பார் அறியவே.

18. சர்ப்பம்அணி நூபுரமத்தை விற்று அதுவெறும் பொருளாய்
சொற்பமாய் வழக்கை வென்றதேன் மொழிநீயே.

19. தென்நலம்பும் சீரகத்தால் கோவலர் பின்பே தொடர்ந்து
தென்மதுரைக்கே பொன்னின் சிலம்பு விற்கவே.

20. கன்னலம்பும் பூம்பொழில் சேர் மேனிதுலங்க
திருக்கால் கண்டவழி சென்றடைந்த கண்ணகை நீயே

21. கண்ணகையே பெண்அமுதே வண்ணமுறும் மெய்யான
கண்மணியே கற்பினிய கண்ணகை தாயே.

22. எண்ணவரும் உன்குலமோடும் எம்மையும் உன்பிள்ளையென
ஈஸ்வரியே மாதாவே கண்ணகைதாயே.

பார்வாழி தென்திருக் கோயில் குமரன்வாழி
கண்டி பார்த்தீபன் நரேந்திர சிங்கமூர்த்தியும் வாழி
ஊர்வாழி தம்பிலுவில் ஊர் வாழ்க வந்தருளும்
பத்தினி கண்ணகை நீடுழி வாழ்கவே.

கண்ணகை அம்மன் கும்மிப்பாடல்

தானானே தானானே தன தானா தந்தன தானானே
தானானே தானானே தன தானா தந்தன தானானே

1. சீர் விற்ற தம்பிலுவல் நகர்வாழ் எங்கள்
செல்வியாம் கண்ணகை தாயார்மேல்

2. ஏர் உற்ற செந்தமிழால் பாட
எந்தை வினாயகன் காப்பாமே

3. கன்னலை ஏற்ற மொழி தெய்வ
கன்னியே கற்புள்ள மாதாவே

4. நண்ணயம் உற்று அடியார் துதிக்க
ஞான சரஸ்வதி தாழ்துணையே

5. ஆர்கலி சூழ்புவி ஏழனைத்தும்
ஆகிய சக்கரத்தில் பிறந்த

6. பார்மகவு என்னபிழை பொறுக்கும்
பத்தினியே பரமேஸ்வரியே

7. பத்தரை மாத்துப் பசும்பொன்னே
பாலே தேனே பால் அமுதே

8. சித்திர ரூபத்து அலங்கார
தெய்வ மின்ன கண்ணகை தாயே.

9. தெய்வமின்ன கண்ணகை தாயே
உன்தஞ்சம் அல்லாமல் பின்னும் மற்றுள்ளதோ

10. தஞ்சம் என தினம் வந்தடைந்து
தாழ் மலர் வீழ்ந்து அழும் தொண்டர்தமை

11. அஞ்சலென தினம் தற்காக்கும்
அம்மனே நான்உன் அடைக்கலமே

12. நான்னிலமும் புகழ் மாசாற்றான்
நன் மகவாகிய கோவலரை

13. மானாவி மானம் என்திருவே தெய்வ
மாதாவே தெய்வ மாதாவே.

14. மாதுபங்காளன் சிவனுடனே நின்று
வாதாடும் காளிமனோன்மணியே

15. தாது உள்ள சருக்குக்கு உயிர்கொடுக்கும்
தையலே கண்ணகை தாயாரே.

16. தாயன்னவே பல்லுயிர்க்கும்
தாபரித்து இரட்சித்து ஆழ்வது போல்

17. நீஅம்மனே எம்மை ஈடேற்றி
நித்தமும் இரட்சித்து அருள்வாயே.

வாழி பூவாழி மறைவாழி
மன்னு தமிழ் தாள் வாழி
பார்புகழ் நன்நகர் தம்பிலுவில்
உறைபத்தினி கண்ணகை வாழியவே.

கண்ணகியம்மன் வாழ்த்து

மாவின் கனியாக விருந்தவளே - நல்ல
மானாகர் மகளாகப் பிறந்தவளே
மாசறு பொன்னாக திகழ்ந்தவளே - எங்கள்
மாநகர் தம்பிலுவில் அமர்ந்தவளே (மாவின்)

ஊருக்குக் காவலாய் இருப்பவளே - எங்கள்
உள்ளத்தில் என்றும் நிறைந்தவளே
ஆயிரம் கண்கள் கொண்டவளே - எங்கள்
அல்லல்கள் தம்மைத் தீர்ப்பவளே (மாவின்)

வேப்பிலை தன்னில் நீயிருப்பாய் - எந்த
வேளையும் எம்மைக் காத்திடுவாய்
நம்பிக்கை ஒளியே நாயகியே - நல்ல
இதயங்கள் நினைவில் இருப்பவளே (மாவின்)

அன்று ஊரக்கைவெளி அமர்ந்தாய்- அம்மா
மன்னர்கள் போற்றிய பத்தினியே
இன்று தம்பிலுவில் இனிதமர்ந்தாய் - எங்கள்
கண்ணகியே இனிய பராபரியே (மாவின்)

கண்ணகை அம்மன் அருளால் 09.05.1993 அன்று மாலை 5.30 மணியளவில் உருவான இப்பாடல் அதே ஆண்டில் இவ்வூரைச்சேர்ந்த சிவஸ்ரீ இரா சுந்தரமூர்த்தி சர்மா அவர்களால் இசையமைக்கப்பட்டு அவரால் பாடப்பட்டு ஒலிப்பதிவு செய்யப்பட்டது. இன்று ஒலிப்பதிவு நாடாவில் வழங்கும் இப்பாடல் இவ்வூரில் கோயில் கொண்டிருக்கும் செண்பகச் செல்வியான கண்ணகை அம்மனைப் புகழ்ந்து போற்றுகின்றது. சாந்தசொரூபியான தம்பிலுவில் கண்ணகை அம்மன் பற்றி நூலாசிரியர் இயற்றிய பலபாடல்களில் இதுவுமென்று.



நூலாசிரியர்
நா.நவநாயகமூர்த்தி

ஆசிரியர் எழுதி வெளிவந்த நூல்கள்:

1. தமிழரும் முருகவழிபாடும்
2. தொல்லியல் சிந்தனைகள்
3. பண்டைத்தமிழர் பண்பாட்டுக்கோலங்கள்
4. பண்டைய ஈழத்தமிழர்.

மல்ட்டி ஒப்செற் அச்சகம், ஏ.வி.வி.றோட் (சிங்கர் அருகாமை வீதி) அக்கரைப்பற்று.